கலாவல்லி

1067



2
ஆ211,N55K
N55:5
N55:5
197864

...கஸ்ட் 55

விலை 4 அணா

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

SRI KANCHI KAMAKOTI PITHADHIPATI

Jagadguru Sri SANKARACHARYA SWAMIGAL MUTT,

Camp:—KANCHEEPURAM.

Enc.   Dated 29-6-1954.

தங்கள் "ஜாதக பரிவர்த்தனை" சம்பந்தமான ஏற்பாடுகள் செய்திருக்கும் விவரத்தை ஸ்ரீமஹா ஸந்நிதானத்தில் விக்ஞாபனம் செய்து கொண்டதில் மேல்கண்ட ஏற்பாடானது சாஸ்திரசம்பந்தத்தையுடன் ஆசாரத்தையனுஸரித்து பொருந்த சுருக்கி விவாஹம் செய்யும் பெற்றோர்களுக்கு எல்லாவிதத்திலும் அனுகூலமாயிருக்குமென்று ஸ்ரீமஹாஸந்நிதானத்தில் அபிப்ராயப்படுகிறார்கள் என்ற விவரம் தெரிவிக்கலானது சரி. பக்ஷம்

கே. பஞ்சாபகேசன்
29.6.53
பாரிஷேதார்.

கன்னிப் பெண்கள் கல்யாணமாகாத பிள்ளைகள் உள்ள தென்னிந்திய பிராம்மணப் பெற்றோருக்கு ஒரு விஞ்ஞாபனம்.

அன்புடையீர்!

தங்கள் தகுதிக்கும், அந்தஸ்திற்கும் ஏற்ற வரன்கள், அல்லது வதுக்கள் கிடைக்காமல் தாங்கள் அடையும் துன்பமும் பணச் செலவும் கொஞ்ச நஞ்சமன்று. தங்கள் துயர்களை அகற்றுவதற்கென்றே இந்த ஜாதகப் பரிவர்த்தனை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட ஸ்ரீமுகம் தங்களுக்கு எங்கள் சேவையில் நம்பிக்கையளிக்குமெனக் கருதுகிறோம். தங்கள் பிள்ளைகள் அல்லது பெண்களுக்குத் தகுந்த ஜாதகங்களை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்காக ஒரு சிறிய கட்டணமே செலுத்த வேண்டும். ஜாதகங்கள் ஒத்திட்டுப் பார்க்கும் தொழிலை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தங்கள் தேவைகளுக்கு தங்கள் பெண் அல்லது பிள்ளை ஜாதகத்துடன் முழு விவரங்களையும் எழுதவும்.

JAYA HOROSCOPE EXCHANGE

POST BOX 1834, MADRAS-1.

1067
3-55

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தேவநாகரியில் ஸம்ஸ்கிருத சுலோகங்களும், பதம் பதமாய், தமிழ் உரைகளும், அழகான தமிழ் கருத்துக்களும், விசேஷார்த்தங்களும், மறைப்பொருளும் கூடியதாய் எல்லாக்காண்டங்களும் அச்சிடப்படுகின்றன. இப்பொழுது சுந்தர காண்டம் அச்சிட்டு சீக்கிரம் வெளி வருகிறது.

மஹாபாரத வினாவிடை 3 வால்யூமும்	ரூ.	4	0
பாகவத வினாவிடை [20 படங்களுடன்]	,,	3	0
ராமாயண வினாவிடை [16 படங்களுடன்]	,,	2	0
பகவத்கீதை ஸம்ஸ்கிருதத்திலும், தமிழ்கருத்துரையும்		2	0
பாரத வசனம், ஷண்முக கவிராயர் இயற்றியது			
ஆதிபர்வம்	,,	4	8
ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள்		6	
உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸவுப்திக பர்வங்கள்	,,	6	0
ஸ்த்ரீ, சாந்தி, ஆநுசாஸனிக, ஆசுவமேத, ஆசிரம வாஸ, மௌஸல மஹாப்ரஸ்தானிக, ஸ்வர்க்காரோஹண பர்வங்கள்		6	0
4 வால்யூம்கள்	,,	22	0
வால்மீகி ராமாயண வசனம்—பாலகாண்டம் முதல் சப்தகாண்டம்	,,	20	0
நாலே வாரத்தில் நல்ல இங்கிலீஷ் என்கிற இங்கிலீஷ் சுயபோதினி	,,	4	0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ்,
போஸ்ட் பாக்ஸ் 1372. 292, சுபாஷ்சந்திரபோஸ் ரோட், சென்னை-1.

REGISTRAR OF BOOKS
20 AUG 1955
MADRAS

ஸ்தாபிதம்: 1916 தந்தி: "Durable, Madras."

எல்லாவித பம்பு சாமான்களுக்கும்

எஸ். வெங்கடராம அய்யர் & கம்பெனி,

ரைஸ்மில், இரும்பு சாமான் வியாபாரிகள்
33, எர்ரபாலு செட்டித் தெரு,
P. B. No. 1670
சென்னை-1.

கிளை; ரயில்வே ஸ்டேஷன் சமீபம், மாயவரம் ஜங்.

P. T. RANGANATHAM

8-6 V. V. Koil St. Choolai, Madras-7

Engravers, Stereo & Poster Types and Rubber Stamp Makers.

We make excellent Wall-Poster Types
Charges Moderate.
Trial Solicited.

சுதேசி டைப் பவுண்டரி

(ஸ்தாபிதம் : 1906) தந்தி : "புவனா" டெலிபோன் : 8291

51, குருவப்ப செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்-2

தமிழ், இந்தி, மலையாளம், தேவநாகரி, தெலுங்கு, குஜராத்தி, சிங்களம், ஒரியா, கன்னடம், கிரந்தம், உருது, மகாராஷ்டிரம், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பதினான்கு பாஷைகளிலும் எழுத்துக்கள் தயாரிக்கப்படும் பவுண்டரி இது ஒன்றேதான் !

இதர எந்த தயாரிப்புகட்கும் தலைசிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும். அழகும் கவர்ச்சியும் பொருந்தியனவாகும், விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால். மேனாட்டு முறைப்படி தயாரிக்கப் பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும். "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும், அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

இப் புத்தகத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள்
"கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களே.

பூரா விவரங்களுக்கு எழுதவும்

தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்

நிர்வாக பாகஸ்தர்

கட்டுரை, கதை எழுதுவோருக்கு :—

கலாவல்லியில் கதை, கட்டுரை எழுத விரும்புவோர் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன :

கட்டுரை, அல்லது கதை கலாவல்லியில் 4 முதல் 6 பக்கங்களுக்கு மேற்படாமல் வரும்படியாக இருக்கவேண்டும்.

தற்கால வாழ்க்கைப் பிரசனைகள், அரசியல், பொருளாதாரம், சமுதாயம் சரித்திரம் ஆகியவற்றைப் பற்றிய கதை, கட்டுரைகளுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும், கதை அல்லது கட்டுரையின் சுவை, கற்பனைச் செறிவு, நடை, எழுதும் பாணி இவை நன்கு அமைய வேண்டும்.

கதையோ, கட்டுரையோ எழுதி யனுப்புகிறவருடன் அவை சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப் படமாட்டாது. திருப்பி அனுப்புவதற்குப் போதிய தபால் தலையுடன் வரும் கதை, கட்டுரைகள் பரிசீலனைக்குப் பிறகு உரிய காலத்தில் திருப்பி யனுப்பப்படும்.

கலாவல்லியில் வெளியாகும் கதை, கட்டுரைகளுக்குச் சன்மானம் உண்டு.

ஆ—ர்.

கலாவல்லி

தமிழ் மாதப் பத்திரிகை

மாலை 1 மலர் 5	ஜூலை – ஆகஸ்ட் 1955	மன்மத ௵ ஆடி - ஆவணி

பொருளடக்கம்

—★—

சமாதான முறையில் சாதனை செய்வோம்	தலையங்கம்	4
அன்பர்களுக்கு ஒரு வார்த்தை	... ...	7
நடந்த கதை	... ...	9
அடுத்தபடி என்ன?	... ...	14
எது சுதந்திரம்?	... ... மகரம்	15
கார்ட்டூன் கதை	... ...	19
நான்......!	... ... 'மஹி'	20
அணுசக்தியும் ஆத்மசக்தியும்	... ...	23
நிலவுத் தாமரை (தொடர் கதை)	பி. எம். கண்ணன்	25
அழியாத ஆசை	... ... 'சுகி'	33
குடையும் குமரியும்	... ... 'முரளீ'	39
சீதாவின் உள்ளம்	... ... 'புஷ்யன்'	41
குறள் வளர்ப்போம்!	... ...	48
சுழல்	... ... எஸ். பி. ஹர்ஷன்	49
பூங்குயில்	நெற்குப்பை ராமசுப்பிரமணியன்	55
தாய்க்குப்பின் தாரம்	... க. பஞ்சாபகேசன்	57
பந்தாடுகின்ருள்!	... ... தமிழ் ஒளி	64
வெறி	... ... பி. வி. ஆர்.	65
ஐந்திணைக் காட்சிகள்	... நா. பார்த்தசாரதி	70
வெள்ளை நிறத்திலே ஒரு தமிழர்!	... ...	79

'கலாவல்லி'யில் வெளியாகும் கதை கட்டுரைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் வெறும் கற்பனை.

197864

சமாதான முறையில் சாதனை செய்வோம்!

ஆறு வார காலம் ரஷ்யாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பிய நமது பிரதம மந்திரி நேருவுக்கு, சமாதானத்திற்காக அளிக்கப்படும் நோபல் பரிசை இந்த ஆண்டில் அளிக்கவேண்டும் என்று பல மான சிபாரிசுகள் செய்யப்பட்டன. அந்த சிபாரிசுகளை நோபல் பரிசுக் கமிட்டியார் எடுத்துக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். அது நமது பிரச்னையும் அல்ல.

நமது பிரதம மந்திரியைப் போன்ற சமாதானப் பிரியர் வேறு எந்த நாட்டிலுமே இன்று இல்லை என்று நிரூபிக்கத்தக்க நிகழ்ச்சிகள் சமீப காலத்தில் நம் நாட்டிலே நடந்தேறியிருக்கின்றன. அதனால் தான் இதைக் குறிப்பிட்டோம்.

கோவாவில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தைப்பற்றிய செய்திகளைப் படிப்பவர்கள், கோவா இன்று சத்தியாக்கிரகிகளின் பலிபீடமாக விளங்குவதைக் கண்டு நெஞ்சு குமுறுவார்கள்; நெஞ்சு குமுறுவது நியாயமே.

பிரதமர் நேரு சொல்வது போல கோவா இந்தியாவில் ஒரு பகுதிதான். இதைப் பற்றிய சந்தேகம் யாருக்குமே கிடையாது; எந்த நாட்டுக்கும் ஏற்பட முடியாது. போர்த்துகல்லிலிருந்து வாஸ்கோ-டி-காமா வந்து கோவா துறைமுகத்தில் இறங்கிய போது, கோவா வெறும் காடாகவோ, வன விலங்குகள் நிரம்பிய பிரதேசமாகவோ இருக்கவில்லை. இந்திய மக்கள் கோவாவில் அப்போதும் இருக்கத்தான் செய்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனி கல்கத்தாவிற்கு வந்து முகாம் போட்டபோதும் இந்தியாவில் அரசாங்கம் இருந்தது. மக்கள் இருந்தார்கள். பழம் பெருமை வாய்ந்த சரித்திரமும், பண்பாடும் பெற்ற மக்கள் கல்வி, கலாசாரம், தொழில், வாணிபம், எல்லாத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டுதான் இருந்து வந்தார்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனி வந்து நம் நாட்டிலே எந்தெந்த இடங்களில் நிர்வாக ஊழல் இருந்தது என்பதை உணர்ந்து அப்பிரதேசங்களை மெல்லக் கைப்பற்றியது. பிறகு பிரிட்டன் வலிமை பெற்று இந்தியா முழுவதையும் சுவீகரித்துக் கொண்டது. பிரான்ஸும், போர்த்துகல்லும் பெயரளவுக்குச் சில இடங்களில் இருந்து கொண்டு தங்கள் வர்த்தகத்தையும், மக்கள் குடியேற்றத்தையும் நடத்தி வந்தன.

பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறியது தெரிந்த கதை. மிகவும் அமைதியான முறையில், நிகரற்ற ராஜ தந்திரத்தைக் காட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிலிருந்து வாபஸாகியது

இந்திய மக்களின் நல்லெண்ணத்தையும், அரசாங்கத்தின் நல்லுறவையும் பரிபூரணமாகப் பெற்று இன்று பிரிட்டன் இந்தியாவுக்கு நல்ல நண்பனாக விளங்குகிறது.

அதே மாதிரி தான் பிரான்ஸும் அதிக அமளியொன்றும் இல்லாமலே வெளியேறி விட்டது. கடைசியாக எஞ்சி நின்றது போர்த்துகல். இந்த நாட்டின் ஆட்சிக்குட்பட்ட குட்டிப் பட்டணங்கள் கோவா, டையூ, டாமன் என்கிற மூன்றும் தான்.

பிரிட்டனையும் பிரான்ஸையும் பின்பற்றி கண்யமாக போர்த்துகல்லும் இந்தக் குட்டிப் பட்டணங்களை விட்டு வெளியேறி யிருக்க வேண்டும். ஆனால் அதை அந்த நாடு தானாகச் செய்ய முன் வரவில்லை; அப்படி முன் வராதது பெரிதல்ல. இந்திய அரசாங்கம், நேருவின் சர்க்கார் கோரிக்கை விடுத்தும் கூட அந்தக் கோரிக்கையை அது நிராகரித்து விட்டது.

கோவாவில் இன்று வாழும் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் இந்தியர்கள்; இரண்டே பேர்தான் போர்த்துகீசியர். இந்தப் பெருவாரியான மக்களில் 80 முதல் 90 சதவிகிதம் வரையிலுள்ள மக்கள் "கோவா இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்க வேண்டும்; இந்தியாவில் அந்நிய ஆதிக்கம் ஒழிந்தது போல கோவாவிலும் ஒழிய வேண்டும்" என்று கோருகிறார்கள்.

இந்தக் கருத்தை உணர்ந்து தான் இந்தியா போர்த்துகல்லுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆனால் போர்த்துகல் இணங்கவில்லை. எனவே கோவா மக்கள் விடுதலைப் போராட்டம் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து சத்தியாக்கிரகிகள் செல்லவில்லை. கோவாவில் போர்த்துகீசிய போலிஸ், மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கினார்கள். மக்களுக்கு வாயைத் திறக்கவும் உரிமை இல்லாத நிலை ஏற்பட்டது. அவ்வளவுக்குக் கெடுபிடி தர்பார் நடக்கலாயிற்று கோவாவில்.

பிறகுதான் இந்திய மக்கள் சத்தியாக்கிரகம் செய்யத் துவங்கினர். இந்திய அரசாங்கம் அவசரப்படவேண்டாம் என்றுதான் அப்போதும் கூறியது. நேருவின் சமாதான மனப்போக்கையும் அவர் கடைசிவரையில் சமாதான முறையே விரும்புகிறார் என்பதையும் இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் நேருவின் கோரிக்கையையோ, மக்களின் உணர்ச்சிகளையோ, போர்த்துகீசிய சர்க்கார் மதிக்கவில்லை. மிகக் கேவலமான, மிருகத்தனமான, மிலேச்சத் தனமான செயல்களில் இறங்கினார்கள்.

நம் நாடு சுதந்திரம் பெற்று இந்த ஆகஸ்ட் 15வுடன் சரியாக எட்டாண்டுகள் ஆயின. நாடெங்கும் சுதந்திர தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அதே தினத்தில் கோவா எல்லையைத் தாண்டி இந்திய சத்தியாக்கிரகிகள் நுழைந்தனர், போர்த்துகீசியப் போலீஸார் யந்திர பீரங்கிகளை நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் மீது பிரயோகித்து சர்வதேசக் கட்டுபாடு, ஒழுங்கு எதையும் பற்றிக் கருதாமல், மிருகத்தனமாகக் கொலைவெறி காட்டி சத்தியாக்கிரகிகளைக் கொன்றனர்; படுகாயப் படுத்தினர்.

உலகமே இதைக் கண்டு திகைத்துப்போய் விட்டது, இலங்கை, சீனு, ஜப்பான், இந்தோனேஷியா எந்தக் கிழக்கத்தி நாடும் இந்தக் காட்டு மிராண்டித் தனத்தை ஆதரிக்கவில்லே, மேற்கத்தி நாடுகளி லும் இது பற்றிப் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

கோவாப் பிரச்னே சர்வ தேசப் பிரச்னே ஆகி விடுமோ என்கிற குழப்பம் கூடச் சில இடங்களில் ஏற்பட்டிருப்பதாகத் தோன்று கிறது. ஆனுல் இந்த மாதிரி குழப்பத்திற்கு அவசியமே இல்லே.

இது முழுக்க முழுக்க உள்நாட்டுப் பிரச்னே. குடித்தனத்துக்கு வந்தவன் வீட்டையே சுவீகரித்துக் கொள்ளப் பார்க்கிருன்; அவனே விரட்டவேண்டியது வீட்டுக்குடையவர்களுடைய வேலே. இவ்வளவுதான் கோவா பிரச்னேயும்.

இந்த வேலேயைத் தான் நேருஜி அமைதியான முறையில் செய்தால் போதும் என்கிருர். சத்தியாக்கிரகிகளே போர்த்துகிசிய போலீஸ் கொன்று குவித்தைக் கண்டு நாடெங்கும் கொதிப்புற்றது. நாடெங்கும் அவர்களது மிருகத்தனமான செய்கையைக் கண்டிக்கக் கூட்டங்களும், ஹர்த்தால்களும் நடந்தேறின.

பிரதமர் நேரு இதைப் பற்றி யெல்லாம் நன்குணர்ந்து தான் இருக்கிருர். ஆனுல் எல்லா மக்களின் உள்ளங்களும் கலங்கித் துடிக்கும்போது அவர் உள்ளம் கலங்கவில்லேயா! அவர் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிருரா? இல்லே.

இன்னமும் சொல்லுகிருர் "கோவா இந்தியாவைச் சேர்ந்தது தான்; அதை விட்டு போர்த்துகல் வெளியேற வேண்டியது தான். அவர்களே ஆயுத பலத்தின் மூலம் வெளியேற்றுவது கஷ்டமான காரியமல்ல; ஆனுல் அதற்கு அவசியம் இல்லே. அஹிம்ஸா முறை யிலேயே கப்பலேற்றி விடுவோம்" என்கிருர் அவர்.

போர்த்துகல்லுக்கும் இந்தியாவுக்கும் இடையே இருந்த ராஜ தந்திர உறவுகளே அவர் ரத்து செய்து விட்டார். கோவாவில் பொருளாதார நெருக்கடிகளேச் சிறுகச் சிறுக ஏற்படுத்தி வந்தால், தன்னுல் போர்த்துகீசியர்—தங்கள் நாட்டைப் பார்க்கப் போக வேண்டியதுதான் என்கிருர் நேருஜி.

நேருவின் வழி சமாதான வழி. அதைப் பின்பற்றினுல் நாட்டுக் கும் தீமை இல்லே; மக்களுக்கும் தீமை இல்லே. கோவா பிரச்னேயில் குழப்பமே கூடாது; தெளிவாகச் சிந்தனே செய்து பார்த்தால், அமைதியான முறையிலேயே அன்னியரை வெளியேற்றி விடலாம் என்று திட்டவட்டமாகக் கூறுகிருர் அவர்.

இத்தனே நெருக்கடியான நேரத்திலும் அமைதியான உள்ளத் துடன் தெளிவாகச் சிந்தித்து நாட்டுக்கும் மக்களுக்கும் வழிகாட்டும் நேருஜிக்கு இணேயான சமாதானத் தலேவர் ஒருவர் இன்று வேறு எந்த நாட்டிலே இருக்கிருர்?

கோவா பிரச்னே தீர, நேருஜி கூறுவது போல போலீஸ் நட வடிக்கை தேவையில்லே; அஹிம்ஸா தர்ம யுத்தமே அவர்களே விரை வில் விரட்டி விடும்.

அன்பர்களுக்கு ஒரு வார்த்தை

அன்புடையீர்

வணக்கம்.

உங்கள் கலாவல்லி ஜுலை—ஆகஸ்ட் மலர் இப்போது உங்கள் கையில் இருக்கிறது. ஜுலை மலரை நீங்கள் எவ்வளவு ஆவலாக எதிர்பார்த்தீர்கள் என்பதை உங்களது கடிதங்களிலிருந்து நன்கறிந்து கொண்டோம். ஜுலை மலரை ஜுலை மாதத்திலேயே வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது எமது கடமை. ஆனால் அம்மலர் தனியாக வெளிவர இயலாமல் ஜுலை-ஆகஸ்ட் இருமாதங்களும் சேர்ந்து ஒரே மலராகத் தான் வெளியிட முடிந்தது என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்படி ஏற்பட்டதற்கு நமது காரியாலயத்திலோ, அல்லது 'உங்கள் கலாவல்லி'யை இதுவரை அச்சிட்டு உதவி வந்த 'நேஷனல் ஆர்ட் பிரஸ்' அச்சகத்திலோ ஏற்பட்ட வசதிக் குறைவு காரணம் அல்ல. இரு இடங்களிலும் எல்லா வசதிகளும் எமக்கு இருந்தன. கலாவல்லி ஆரம்பித்து நான்கு மலர்களை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய நேஷனல் ஆர்ட் பிரஸ்காரர்களும், அதன் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதனும் என்றென்றும் நமது பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்களாவர். அவர்கள் அழகாகப் பத்திரிகையை அச்சிட்டு உதவினார்கள். நீங்கள் வாங்கிப் படித்துப் பாராட்டினீர்கள்; நூற்றுக்கணக்கான கடிதங்கள் 'உங்கள் கலாவல்லி'க்கு எழுதி ஊக்கமும் உற்சாகமும் அளித்தீர்கள்.

கலாவல்லி நான்கே மலர்கள் தான் வெளி வந்தும், ஐந்தாவது மலரே தனது சொந்த அச்சகத்தில் தயாராகும்படியான பாக்கியம், கிடைத்ததற்கு உங்கள் ஆதரவும் அன்பும், முன் அச்சிட்டுத் தந்தவர்களின் பண்பும் ஆசியும் தான் காரணம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்,

உங்கள் கலாவல்லி இப்போது எண்பது பக்கங்களுடன் வெளி வந்திருக்கிறாள். ஓவியர் திரு. ஆர் நடராஜன் அவர்களின் மூவர்ண அட்டையைத் தாங்கி, கதைகள், கட்டுரைகள், கவிதைகள், படங்கள், கேலிச் சித்திரங்கள் முதலிய அம்சங்களுடன் கம்பீரமாக உங்களுக்குக் காட்சியளிக்கிறாள். நீங்கள் விரும்பிப் படிக்கும் தொடர் கதையான நிலவுத் தாமரையில் புதிய திருப்பம் ஒன்றைக் காண்பீர்கள். மனத்தத்துவ ஆராய்ச்சியும், நெஞ்சை உருக்கும் சம்பவங்களும், உணர்ச்சி மிக்க கதாபாத்திரங்களும் கூடி இந்தத் தொடர் கதை நீங்கள் மிகவும் விரும்பும் வண்ணம் அமையப் போகிறது என்று இப்போதே கூறி விடுகிறோம்.

பஞ்சாபகேசன், ஹர்ஷன், புஷ்யன், பி. வி. ஆர். ஆகியவர்கள் வாழ்க்கையின் வெவ்வேறு கோணத்தைப் படம் பிடித்துக் காட்டும் தோரணையில் அழகான கதைகளை இம்மலரில் எழுதியிருக்கிறார்கள்.

நம் நாடு சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு 'மகரத்'திற்கு எது சுதந்திரம் என்கிற சந்தேகம் ஏற்பட்டது விநோதம் தான். இந்த விநோதத்தை அவர் ஒரு கட்டுரை வாயிலாக வெளியிட்டிருக்கிறார். கட்டுரையில் நகைச் சுவையும் காலத்துக்குத் தக்க பண்பாடும் இருப்பதைக் காணலாம்.

பார்க்கப் போனால் ஒரு காலணா தான்; இன்று இந்தக் காலணாவுக்கு என்ன மதிப்பு இருக்கிறது! யுத்தத்திற்கு முன்பு இதே காலணா ஒரு ரூபாய்க்குச் சமானம். அதிலும் ஒரு சிறு பயல், அல்லது குழந்தையின் கையிலே இந்தக் காலணாவுக்குப் பவுன் மதிப்பல்லவா ஏற்பட்டு விடுகிறது; ஒரு காலணா தானே என்று கெட்டுப் போக்கி விட்டுத் தேடாமல் இருக்க முடிகிறதா? இந்தக் காலணாவின் மேல் 'சுகி'க்கு உள்ள ஆசைக்கு அழிவே கிடையாது; அந்த அழியாத ஆசையை அவர் ஓர் அருமையான கட்டுரையாகத் தீட்டியிருக்கிறார்.

'மஹி'க்குத் தாம் இன்னார் என்று சந்தேகம் வந்துவிட்டது. பைத்தியக்கார மனிதர் தம்மைத் தெரிந்து கொள்ள ரொம்ப சிரமப்பட்டிருக்கிறார் பாவம்! நான்...!' என்ற அவரது கட்டுரையில் அவர் பட்ட கஷ்டங்களைப் படித்துப் பச்சாத்தாபப்படலாம். ஆனால் கஷ்டங்கள் எல்லாம் அவர் கற்பனையே; ஒரு வரிகூட உண்மை இல்லை.

நெற்குப்பை ராமசுப்பிரமணியனும், 'தமிழ் ஒளி'யும் அழகாகக் கவி பாடி இருக்கிறார்கள். 'பூங்குயிலின் இனிய இசையையும், 'பந்தாடுகின்றா'ளின் பந்து ஒலிக்கும் நாதத்தையும் படித்துத் தான் அனுபவிக்க வேண்டும்.

வித்வான் நா. பார்த்தசாரதி 'ஐந்திணைக்காட்சி'யின் ஓர் அழகான காட்சியை இந்த மலரில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். மற்றும் உள்ள கட்டுரைகள், புத்தக மதிப்புரை, கேலிச் சித்திரங்கள், கார்ட்டூன் கதை எல்லாம் சேர்ந்து 'கலாவல்லி' உங்களை மகிழ்விக்க உங்கள் கையில் இருக்கிறாள்.

கலாவல்லி இந்த மலரிலிருந்து தனது சொந்த அச்சகத்திலேயே தயாராகி வெளிவருகிறாள் என்பது உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இனி ஒவ்வொரு மலரும் விரைவில் வெளிவரும் என்று உறுதி கூறுகிறோம். ஒவ்வொரு மலரிலும் புதுப் புது அம்சங்களைப் புகுத்தி 'உங்கள் கலாவல்லியை' நன்கு வளர்க்க வேண்டியது எமது கடமை, அதற்கு உங்கள் யோசனைகளும் ஆதரவும் தேவை, உங்களுக்குப் பிடித்த பகுதிகள் 'கலாவல்லி'யில் காணப்பட்டால் அவற்றைப்பற்றி உங்கள் நண்பர்களிடம் சொல்லுங்கள்; நீங்கள் விரும்பாததைப்பற்றி எமக்குத் தெரிவியுங்கள்' என்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உங்கள் கலாவல்லியின் இந்த மலர் காலம் தாழ்ந்து வந்ததற்கு உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். அதே சமயத்தில் உங்கள் கலாவல்லி விரைவில் ஒரு சிறந்த பத்திரிகையாக விளங்க பலமான அஸ்திவாரம் போட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அடுத்த மலரிலேயே உங்களுக்கு ஒரு அதிசயம் காத்திருக்கிறது! அதைப்பற்றி இப்போதே சொல்லி விடுங்கள் என்று கேட்கிறீர்கள் அல்லவா? அப்புறம் அதிசயத்திற்கு மதிப்பில்லாமல் போய் விடுமே! எனவே அடுத்த மலர் வரை நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அந்த அதிசயத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்! உங்கள் கலாவல்லியின் வளர்ச்சிக்கு மிகவும் அவசிமான அதிசயம் அது என்று நீங்கள் எல்லோரும் ஒருமுகமாகக் கூறப் போகிறீர்கள்! இது நிச்சயம். எனவே இப்போதைக்கு இதோடு நிறுத்திக்கொள்ளலாமா?

வணக்கம். [ஆ-ர்.]

நடந்த கதை

ஜூன்

13:—சிங்கப்பூரின் சரித்திரத்திலேயே மிகப்பெரிய வேலை நிறுத்தம் தொடங்கியது. *70,000* தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தில் பங்கொடுத்துக்கொண்டனர்.

14 :—ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவரைச் சந்தித்து உலகப் பிரச்னைகளைப்பற்றிப் பேசினார்.

15 :—பிரதமர் நேரு சாமர்கண்ட் என்னும் புராதன நகரத்திற்கு விஜயம் செய்து பல நூற்றாண்டுகளுக்குமுன் ஆட்சி புரிந்த தாமர்லீன் சமாதியைப் பார்வையிட்டார்.

16 :—ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து கிழக்கத்திய ரயில்வே இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் என்று ரயில்வே மந்திரி ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அறிவித்தார்.

17 :—இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் சம்பந்தமான ஆலோசனைகள் ஜூலை மாதத்தில் ஆரம்பமாகி அக்டோபர் வரை நீடிக்கும் என்று திட்டக்கமிஷன் ராஜ்ய சர்க்கார்களுக்கு அறிக்கை விடுத்துள்ளது.

18 :—இந்தோ - டையூ எல்லையில் காவல் இருந்த இந்தியப் போலீஸ் கோஷ்டியின் மீது போர்த்துகீசியப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கல்லூரிகளில் தமிழிலேயே பாடங்களைப் போதனை செய்வதற்கு வேண்டிய வழிகளைச் செய்வதற்காக கல்விமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமண்யம் தலைமையில் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. உப அத்யக்ஷகர்களும் மற்றும் பல கல்வி நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

19 :—நேருவுக்கு ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமாகிய லெனின்கிராடில் மாபெரும் வரவேற்பு கிடைத்தது.

தனுஷ்கோடி கடற்கரையை ரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ அளகேசன் பார்வையிட்டு கடல் கரையைத்துருவி தனுஷ்கோடியை மூழ்கடித்துவிடும் என்ற பயம் ஒன்றும் இல்லை என்று கூறினார்.

20 :—*200* ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் பெரிய சூரியக்கிரகணம் வந்தது.

ரஷ்யாவில் *10,000* மைல் தூரம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு நேரு மாஸ்கோ திரும்பினார்.

21 :—ரஷ்யப் பிரதம மந்திரி மார்ஷல் புல்கானினை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் நேரு அழைத்தார். ரஷ்யப் பிரதமர் நேருவின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

22 :—இந்தியா — ரஷ்யா நல்லுறவு சம்பந்தப்பட்ட கூட்டு அறிக்கை ஒன்றில் இந்தியப் பிரதமர் நேருவும் ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானினும் கையெழுத்திட்டனர். பொருளாதார, கலாசார, சமுதாயத் துறைகளிலும் மற்ற துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர உதவியும் நல்லெண்ணமும் நிலவவேண்டும்

என்பதுதான் அறிக்கையின் கருத்து.

23 :—பிரிட்டிஷ் பிரதமர் அந்தோணி ஈடன் நேருவை லண்டனுக்கு விஜயம் செய்யுமாறு அழைத்தார். நேரு அவர் அழைப்பை ஏற்று ஜூலை 8ந்தேதி லண்டன் செல்வதாகத் தெரிவித்தார்.

24 :—நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதற்குத் தம்மால் இயலவில்லையெனின் முதல் மந்திரி பதவியைத் துறந்து விடுவதாக ஸ்ரீ காமராஜ் லால்குடியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

25 ;—கிண்டி ரயில்வே ஸ்டேஷன் அருகில் ஒரு கூட்ஸ் வண்டித்தொடர் குடை சாய்ந்தது. இந்த விபத்தில் ஆள் சேதம் ஏதுமில்லை. 15 கூட்ஸ் வண்டிகளுக்கும், விபத்து நேர்ந்த இடத்தில் இருந்த மேல் பாலத்திற்கும் சேதம் ஏற்பட்டது.

26 :—தென்னாட்டின்மீது ஹிந்தியைத் திணித்து "ஹிந்தி ஏகாதிபத்யம்" ஏற்படுத்தப்படும் என்கிற பயம் சிறிதும் வேண்டாம் என்று ஜனாதிபதி ராஜன் பாபு ஹைதராபாத்தில் கூறினார்.

27 :—ராஜ்யங்களில் ஜல வசதி, ஜல தாரை வசதி திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் 30 கோடி ரூபாய் செலவு செய்யும் என்று தெரிய வருகிறது.

28 :—பி. ஸி. ஜி. சிகிச்சை முறையின் நல்ல பலன்களை மக்கள் அறிவதற்குப் பத்திரிகைகளின் ஒத்துழைப்பு வேண்டும் என்று சென்னை சுகாதார மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

29 :—தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் பயனாக இந்த ஆண்டின் இறுதியில் ஒரு லக்ஷம் கிராமங்களுக்குமேல் பலனடையும் என்று திட்டக்கமிஷன் உதவித் தலைவர் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

30 :—பெல்கிரேடில் பிரதமர் நேருவுக்கு மாபெரும் வரவேற்பு. மார்ஷல் டிட்டோ நேருவை ஆலிங்கனம் செய்து அளவளாவினார்.

ஜூலை

1 :—இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவல்களை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஏற்று அலுவல் நடத்த ஆரம்பித்தது.

பி. ஸி. ஜி. சிகிச்சை முறை குழந்தைகளுக்குத் தீமையைத் தான் விளைவிக்கும் என்று ராஜாஜி வன்மையாகக் கண்டித்தார்.

2 :—இன்னும் இருபது ஆண்டுகளுக்குள் பத்து உருக்குத் தொழிற்சாலைகளை இந்தியாவில் பல இடங்களில் ஸ்தாபிக்க முடியும் என்று தொழில், வர்த்தக மந்திரி காரியாலயத்தின் காரியதரிசி கூறினார்.

3 :—ஐரோப்பாவில் உள்ள மிகப் பெரிய எரிமலையாகிய மௌன்ட் எட்னா குமுறத் தொடங்கியது. 1950-க்குப் பிறகு இந்த ஆண்டில்தான் இந்த எரிமலை குமுறுகிறது,

4 :—தஞ்சாவூரில் ராஜா சரபோஜி கலைக் கல்லூரியை சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார்.

5 :—மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் படிப்படியாக ஒழிக்கவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் முயன்று வருவதாக வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

6 :—மின்சார உற்பத்தித் திட்டங்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 400 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று தெரிகிறது.

7 :—சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆலயம் புதுப்பிக்கப் பெற்று கும்பாபி

ஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. நாடெங்குமிருந்து பக்த கோடிகள் தில்லை நடராஜன் தரிசனம் காணும்பொருட்டுச்சென்று குழுமினர்.

8 :—நேருஜி லண்டன் மாநகர் அடைந்தார். விமான நிலையத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ஸர் அந்தோணி ஈடன் அவரை வரவேற்றார்.

ஆந்திர ராஜ்யத்தின் பட்ஜட்டை நிதிமந்திரி ஸ்ரீ கோபால ரெட்டி சட்டசபையில் பிரேரித்தார். ஆந்திர பட்ஜெட்டில் எட்டரை கோடி ரூபாய் துண்டு விழுந்தது.

9 :—ஆசார்ய வினோபா பாவேயின் பூதான இயக்கம் நாட்டின் வறுமையைப் பங்கிட்டுக் கொள்வதாகும் என்று பம்பாய் கவர்னர் டாக்டர் ஹரே கிருஷ்ண மேதாப் கூறினார். நிலப் பிரச்னை நாட்டின் முக்கியப்பிரச்னையன்று; மக்கள் வறுமைதான் முக்கியப் பிரச்னை என்று அவர் கூறியது குறிப்பிடத்தக்கது.

10 :—பதினைந்து ஆண்டுகளுக்குப்பிறகு ஆங்கிலத்துக்குப் பதிலாக ஹிந்தியை அரசாங்க மொழியாக்குவதற்கு மத்திய அரசாங்க கல்வி இலாகா ஒரு திட்டம் வகுத்துள்ளது. விஞ்ஞானம், டெக்னாலஜி போன்ற அறிவியல் துறைகளுக்கு இன்றியமையாத ஹிந்தி சொற்களைக் கண்டு பிடிப்பதும் இந்தத் திட்டத்தில் இருக்கும்.

11 :—இந்தியாவிலேயே யுத்தக்கப்பல்கள் கட்டுவதற்கு முயன்று வருவதாக இந்தியக்கடற்படைத்தலைவர் ஸர் பிஜி கூறினார்.

12 :—நான்கு வல்லரசுகள் சேர்ந்து நடத்தும் பேச்சுவார்த்தைகள் உலக க்ஷேமத்திற்கும் சமாதானத்திற்கும் அடிகோலுவதாக இருக்கும் என்று பிரதமர் நேரு கூறினார். இந்தியப் பிரதமர் நேரு ரஷ்யாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் ஆறு வாரம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு பம்பாய் வந்து சேர்ந்தார்.

13 :—கோலார் தங்கவயல்களின் நிர்வாகத்தை தேசிய மயமாக்குவதற்காக ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. மைசூர் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ சித்தவீரப்பாவும் தங்கவயல் கம்பெனிகளின் பிரதிநிதிகளும் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

14 :—நாட்டின் பல பாகங்களிலும் 20,000 முதல் 30,000 காற்றாலைகள் அமைத்து சிறு பண்ணைகளுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக ஏழு கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

15 :—இந்தியப் பிரதமர் நேருவுக்கு ஜனாதிபதி ராஜன் பாபு 'பாரத ரத்னம்' என்கிற பட்டத்தை வழங்கினார்.

16 :—பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஜுலை முதல் மார்ச் வரையில் பாடம் சொல்லிக் கொடுத்துப் பரீட்சை நடத்தித் தேர்வு செய்வதை மாற்றி, ஜனவரி முதல் டிஸம்பர் வரையில் நடைபெறும்படி அமைப்பது உசிதம்தானா என்று சென்னை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கும் மற்ற கல்வி நிலைய நிர்வாகத்தினருக்கும் சென்னை சர்க்

பையன் : சிக்கனம் என்பது பற்றி என் பேச்சு எப்படி ?

பெண் : சிக்கனமாகவே யிருந்தது !

கார் ஓர் அறிக்கை அனுப்பியிருப்ப தாகத் தெரிகிறது.

17 :—விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளில் தென்னாட்டில் தான் பெரும்பான்மையோருக்குப் போதிய வேலையோ கூலியோ கிடைப்பதில்லை என்று இந்தியா சர்க்கார் செய்தி யொன்று கூறுகிறது.

18 :—ஜினீவாவில் நான்கு வல்லரசுகள் மகாநாடு ஆரம்பமாகியது. பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் ஆலோசனை துவக்கினார்கள்.

19 :—போர்த்துகீசிய சர்க்கார் கோவா சம்பந்தமாகத் தமது கொள்கையை மாற்றிக் கொள்ளாவிடில், கோவாவில் மட்டுமின்றி, போர்த்துகல்லிலும் கூட அவர்களது ஆட்சி சரிந்து விழும் என்று பிரதமர் நேரு எச்சரிக்கை விடுத்தார்.

20 :—சென்னை சட்டசபை சபாநாயகர் ஸ்ரீ ஜெ. சிவஷண்முகம் பிள்ளையை, யூனியன் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினராக, ஜனாதிபதி ராஜன் பாபு நியமித்தார்.

21 :—கல்லூரிகளில் பாடபோதனையைத் தமிழிலேயே நடத்துவதற்கு, வேண்டிய கலைச் சொற்கள், அறிவியற் கருத்துக்கள் ஆகியவற்றைச் சேகரிக்க சென்னை அரசாங்கம் 30 பேர் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

22 :—உகந்தாவில் பூமி நடுங்கியது; எட்னாவில் எரிமலை குமுறி அனற் பிழம்பாய்க் கொட்டியது.

23 :—ஜினீவாவில் நடைபெற்ற நான்கு வல்லரசுகள் மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது.

24 :—இந்தியாவுக்கும் கோவாவுக்கு மிடையே ரயில்வே ஸர்விஸ் நிறுத்தப்பட்டது.

25 :—சிங்கப்பூர் சட்டசபையில் சுயாட்சியும், புதிய அரசியலும் தங்களுக்கு உடனடியாக வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டுப் பெருவாரியான ஓட்டுகளால் நிறைவேறியது.

26 :—புதுச்சேரியில் நடைபெற்ற புதிய தேர்தலில் ஜில்லா காங்கிரஸ் அபேட்சகர்கள் பெருவாரியான ஸ்தானங்களைக் கைப்பற்றினர்.

27 ;—சென்னையைச் சேர்ந்த ஒரு பிச்சைக்காரர் தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கியில் நாலாயிரம் ரூபாய் சேமித்து வைத்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

28 :—பி. ஸி. ஜி. ஊசி போடுவதில் டாக்டர்கள் அபிப்பிராயம் மாத்திரம் போதாது; பொது மக்களின் கருத்தும் அவசியம் என்று ராஜாஜி கூறினார்.

29 : — சென்னையிலுள்ள ஆந்திர சர்க்கார் காரியாலயங்கள் எல்லாம் 1956 ஜூன் மாத முடிவுக்குள் ஆந்திராவுக்கே மாற்றப்படும் என்று ஸ்ரீ என். சஞ்சீவி ரெட்டி கூறினார்.

30:—காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தேபர் ஸெப்டம்பர் இறுதியில் தமிழ் நாட்டில் ஒரு வாரகாலம் சுற்றுப் பிரயாணம் செய்வார் என்று முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் தெரிவித்தார்.

31 ;—ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி ஹிந்து மதத்திற்குச் செய்துள்ள சேவையை ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. டி. எல். வெங்கடராமய்யர் பாராட்டி அவரது உருவப்படத்தை எழும்பூர் வேத சபாவில் திறந்து வைத்தார்.

ஆகஸ்ட்

1 :—லோக சபையில் கொண்டு வந்த மசோதாவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்குமென ஒரு 'பிரஸ் ரெஜிஸ்திரார்' நியமிக்கப் படுவார்.

கோவா பிரச்னையில் இந்தியாவுக்கு இலங்கை உதவத் தயார் என்று இலங்கை பிரதமர் ஸர். ஜான் கொத்தாலவலை கூறினார்.

2:—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி சென்னை ராஜ்யத்தில் எத்தகைய அபிவிருத்திகளைச் செய்யலாம் என்று உத்தேசித்து

ஒரு நகல் திட்டம் தயாரித்து சென்னை அசெம்பிளி அங்கத்தினர்களுக்கு வெளியிடப்பட்டது.

3:—பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சை செய்து கொண்டபோது ஒரு ஸ்திரீயின் வயிற்றில் கவனப் பிசகாக விட்டு வைக்கப்பட்ட 'பார்ஸெப்ஸ்' (சாவணம்) என்னும் கருவி அதே ஆஸ்பத்திரியில் அந்த ஸ்திரீ மீண்டும் ஆபரேஷன் செய்து கொண்ட போது வெளியே எடுக்கப்பட்டது. இது பூரி சர்க்கார் ஆஸ்பத்திரியில் நடந்த கதை.

4:—வரப்போகும் நிலச் சீர்திருத்த முறைகளிலிருந்து நிலப் பிரபுக்கள் யாரும் தப்ப முடியாது என்று சென்னை அஸெம்பிளியில் மந்திரி ஸ்ரீ. எம். பக்தவத்ஸலம் சொன்னார்.

5:—கோவாவில் நடைபெறும் போராட்டத்தில் ஸாஹா, தோரட் என்கிற இரண்டு இந்திய சத்தியாக்கிரஹிகள் தேசியக் கொடியைப் பாதுகாக்கும் பணியில் முனைந்து நின்று, போர்த்துகீஸியப் போலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்திக்குப் பலியாகி உயிர் துறந்தனர்.

6:—பம்பாயில் டிராம் தன் மீது ஏறியும் தப்பிப் பிழைத்து விட்டான் பதின்மூன்று வயது பையன் ஒருவன். பையன் டிராமின் கீழ் அகப்பட்டுக் கொண்டதை அறிந்ததும், அதிலிருந்த நூறு பிரயாணிகளும் கீழே இறங்கி, டிராம் வண்டியை அப்படியே அலக்காகத் தூக்கி விட்டார்கள். பையனுக்குச் சில சிராய்ப்புக் காயங்கள் தான் ஏற்பட்டிருந்தன. அவன் பிழைத்துக் கொண்டான்.

7:—ஜினீவாவில் கூடிய உலக விஞ்ஞானிகள் மகா நாட்டின் தலைவர் டாக்டர் எச். ஜே. பாபா இன்னும் நாற்பது ஆண்டுகளில் அணு சக்தியின் மூலம் பல துறைகளில் ஆக்க வேலைகள் செய்துவிட முடியும் என்று கூறினர். அழிவுக் கருவியாக இன்று விளங்கும் ஹைட்ரஜன் குண்டின் சக்தியைக் கொண்டு கணிசமான ஆக்க வேலைகள் செய்ய முடியுமாம்.

8:—இந்தியாவின் ஜனத்தொகை பிரதி வருஷமும் குறைந்து வருவதாக லோக சபையில் சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அமிருத கௌரி தெரிவித்தார்.

9;—அச்சு யந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைச் சென்னை ராஜ்யத்தில் அமைக்க சென்னை சர்க்கார் தீவிரமாகச் சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகால முடிவுக்குள் இந்தத் தொழிலை ஸ்தாபிக்கவேண்டும் என்றும் மந்திரி ஸ்ரீ. எம். பக்தவத்ஸலம் கூறினர்.

10:—சென்னை அஸெம்பிளியில் முதல் தடவையாக முதல் மந்திரி காமராஜ் பேசினர். சபாநாயகர் ஸ்ரீ. சிவஷண்முகம் பிள்ளையின் சேவையைப் பாராட்டிப் பேசினர் அவர்.

11:—கோவா சத்தியாக்கிரகத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப் பட்ட பதினறு வயது வாலிபர் ஒருவர் போர்த்துகீஸியப் போலீஸாரால் மிருகத்தனமாக அடிக்கப்பட்டு உயிர் துறந்தார்.



"கணவனே கண்கண்ட தெய்வம் என்கிற சினிமாவுக்கு அழைச்சுண்டு போறீங்களா, இல்லையா?"

அந்த சத்யாக்கிரகியின் [பெயர் வெளியிடப்பட வில்லை.

12 :—ரயில்வே ஸ்டேஷன் புத்தகக் கடைகளில் சோவியத் ரஷ்யாவில் பிரசுரிக்கப் பட்ட நூல்களை விற்பதற்குத் தடை ஏதும் இல்லை என்று ரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ அளகேசன் லோக சபையில் தெரிவித்தார்.

13 ;—தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ. பரலி. சு. நெல்லைபருக்கு ரூ. 2236 கொண்ட பண முடிப்பு அளிக்கப்பட்டது. பண முடிப்பை சென்னை மந்திரி ஸ்ரீ. ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி சங்கத்தின் சார்பில் வழங்கினர். 'குமுதம்' ஆசிரியர் ஸ்ரீ, எஸ். ஏ. பி. அண்ணாமலை ஸ்ரீ நெல்லையப்பர் நிதி வசூலுக்கு எடுத்துக் கொண்ட பெரு முயற்சி குறிப்பிடத்தக்கது.

14 :—அகில இந்திய ரேடியோவின் சார்பில் பம்பாயில் நிருமிக்கப் பட்ட ஸர்தார் வல்லபாய் படேல் சொற்பொழிவுகளை ராஜாஜி ஆரம்பித்து வைத்தார். நமது நாட்டைத் திறமையாக நிர்வாகம் செய்யக் கல்வியும் அறிவும் மிக்க நல்லறிஞர்கள் வேண்டும் என்று அவர் பேசினர்.

15 :—நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. ★

அடுத்தபடி என்ன ?

பல்கலைக் கழகத்திலே பட்டமளிப்பு விழா சமீபத்தில் நடந்தேறியது.

நூற்றுக்கணக்கான வாலிபர்களும் யுவதிகளும் பட்டங்கள் பெற்றனர்.

அடுத்தபடியாக அவர்கள் தத்தம் வாழ்க்கைப் பாதையைச் செம்மையாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் நாங்கள் நிகழ்த்த வல்லோம்' என்ற கவிவாக்கு இன்று உண்மையாகி விட்டது.

ஆனல் பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதே!

ஏராளமாகப் பணத்தைச் செலவழித்துப் படித்துப் பெரிய பெரிய பட்டங்கள் பெற்ற பின்னரும் அடுத்தபடி ஸர்விஸ் கமிஷன் பரீட்சை எழுதலாமா, அல்லது கம்பெனிகளுக்கு மனுப் போடலாமா என்று யோசனை செய்யும் பட்டதாரிகளின் நிலை பச்சாத்தாபப் படத்தக்கது.

பத்திரிகைகளில் வரும் தேவை விளம்பரங்களைப் பார்க்கும் பட்டாதாரிப் பையனேடு, உத்தியோகத்திற்கு மனு எழுதும் பெண்ணும் போட்டி போடும் படியான காலம் இது! இந்தக் காலமும் நிலைமையும் மாறினல் தான் நாட்டுக்கு நலம்.

இன்றைய படித்த பட்டதாரிகளின் பரிதாப நிலையை வண்ண ஓவியமாக வரைந்திருக்கிறுர் திரு, ஆர். நடராஜன்,

ஏது சுதந்திரம்?

மகரம்

சுதந்திரம் என்ற சொல் பல்பொருள் ஒரு கிளவி! வைரத்தில் ஒளிவிடும் வர்ண ஜாலங்களையும். பச்சோந்தி காட்டும் பல நிற மாறுபாடுகளையும் பார்த்து நாம் வியந்திருக்கிறோம். ஆனால் நம்மை மேலும் வியக்கவைக்கக் கூடியது சுதந்திரம் என்ற சொல்லுக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறும் விநோதம்தான்.

பரதந்திரம் இல்லாதது சுதந்திரம் என்பது ஏட்டளவில் உண்மை. இதன்படி நம் நாட்டுப் பெண்மணிகளுக்கு சுதந்திரமே கிடையாது! முறையே தகப்பனார், கணவன், மகன் - இவர்களுடைய ஆளுகையின் கீழ் அவர்கள் இருக்க வேண்டுமாம்! ஆனால் இப்படி பரதந்திரர்களாக இருக்கின்றவர்கள் அடிமையாக இருந்து சக்தியுடன் வாழும் நமது பாரத நாட்டுப் பெண்களை சுதந்திரம் இல்லாதவர்கள் என்று சொல்லமுடியுமா?

சுதந்திரத்தைப் பற்றிப் பேச வேண்டும், அதைப்பற்றி நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும், அதை அடைவதற்குப் பாடுபட்டுக்கொண்டே இருக்கவேண்டும், ஆனால் அதை அடையக்கூடாது என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள்! எதுவும் இலட்சியமாக இருக்கும் வரையில் தான் கவர்ச்சியுடன் விளங்கும். இலட்சியம் கைகூடினவுடன் அந்த இலட்சியத்தினிடமே ஒரு அலட்சியம் தோன்றி விடுகிறது. "பூ! இவ்வளவு தானா?-" என்று! சுதந்திரத்தின் விஷயத்தில் அத்தகைய அலட்சிய புத்தி ஏற்படக் கூடாது என்பது இவர்களுடைய கொள்கை!

"சுதந்திரம் என்னுடைய பிறப்புரிமை," "சுதந்திரம் என்னுடைய மூச்சுக் காற்று," என்றெல்லாம் முரசுகொட்டின தேசத் தலைவர்கள் இராஜீய சுதந்திரத்துக்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை மக்களாகிய நாம் "மறப்பது எங்கள் சுதந்திரம்!' என்று சொல்லிக்கொண்டே மறந்து போயிருக்கிறோம்! நாட்டின் அரசியல் சுதந்திரப்போரில் குதித்ததன் காரணமாக அவர்கள் பலி கொடுத்த சொந்த சுதந்திரங்கள் எத்தனையோ? கடமையைக் கருத்துடன் செய்து முடிப்பதற்காக உரிமைகளை—பல சமயங்களில் சுகமாக வாழ விரும்பும் உரிமையை — சில சமயங்களில்

...மணிக் கணக்கில் சொன்னதையே சொல்லிக்கொண்டு...



ரேடியோ நிர்வாகிகள் சுதந்திரம் மக்கள் மீது திணிக்கப்படும் போது...

உயிர் வாழும் உரிமையைக்கூட அவர்கள் பலிகொடுத்திருக்கிறார்கள். இத்தகைய தேசத்தின் புண்ணிய புருஷர்களுக்குத் தேசத்தின் விடுதலை - ஒன்றுதான் சுதந்திரமாகவும் மற்றைய சொந்த நலன்களெல்லாம் அடிமையின் சின்னங்களாகவும் தோன்றியிருக்கின்றன.

கடமைகளைச் செய்யும் சுதந்திர உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக்கொண்டு, சொந்த நன்மைகளை அடைவதில் எந்தத் தந்திரம் செய்தாவது சொந்த நலன்களைப் பூர்த்தி செய்து கொள்வதில்—ஆர்வத்தைக் காட்டும் (சு) தந்திரவாதிகள் நம்மிடையே பெருகிவருவது நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

பேச்சு சுதந்திரம் வேண்டுமென்று பேசுகிறவர்கள் கேட்பவர்களுக்கும் ஒன்றிரண்டு சுதந்திரம் உண்டு என்பதை மறந்து போகிறார்கள்! பொதுக்கூட்டங்களில், மணிக்கணக்கில், சொன்னதையே சொல்லிக்கொண்டு மேஜையை ஓங்கி அடித்துப் பேசும் பிரசங்கிகள் சபையினருக்கு சாப்பிடும் சுதந்திரம், தூங்கும் சுதந்திரம் போன்ற சில சாதாரண சுதந்திரங்கள் இருக்கக்கூடும் என்பதை அடியோடு மறந்துபோய் விடுகின்றனர்.

பிறருடைய வீட்டுச்சுவர்களில் கரியினாலும் காவியினாலும் கண்ட கண்ட 'சுலோகங்'களை எழுதத் தூண்டும் சுதந்திரத்தைக் கோரும் பேச்சாளர்கள், அந்த அந்தச் சுவர்களின் சொந்தக்காரர்களிடம் தங்கள் வீட்டுச் சுவர் அழகாக இருக்க வேண்டும், என்று விரும்பும் சுதந்திரம் இருந்தால் என்ன பதில் சொல்ல முடியும்? இரண்டு கட்சிகளுடைய சுதந்திர உணர்ச்சி ஒன்றாகக் கலந்து உறுதியடைய வேண்டும். இரண்டு 'சுதந்திரங்களும்' மோதும் போது இரண்டு கட்சிகளும்—இரண்டு கட்சியினரும் அடிமைகளாகி விடுகின்றனர். அவர்களை அறியாமலேயே அவர்களைக் கேட்டாலேயே இந்த மாறுபாடு உண்டாகி விடுகிறது!

"நாங்கள் சுதந்திரமடைந்து விட்டோம். எங்கள் செயலைத் தடுக்க யார்?" என்பதைக் கூரையின்மீது ஏறிக் கூவுவதே போல, ஒலிபெருக்கிகள் வைத்து, சுதந்திர வளர்ச்சியினை ஒலி அலைகளாக உருமாற்றிச் சுற்றுப்புறம் மக்களிடையே அதைப் பரப்பி, அவர்களைத் தடுமாற்றத்துக்குள்ளாக்கும் ந(ண்)பர்கள் பிறருடைய படிக்கும் சுதந்திரம், தூங்கும் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், ஆகியவைகளுக்கு உலை வைக்கிறார்கள்.

கிட்டத்தட்ட இதே மாதிரிதான் ரேடியோ நிர்வாகிகளும் தங்களுக்கிருக்கும் சுதந்திரத்தை மக்களின்மீது நிலைநாட்டுகிறார்கள்! அவர்களுடைய விருப்பு வெறுப்புகளை மக்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளாக பாவிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதிகாரிகளுடைய விருப்பும் வெறுப்பும் பொதுஜனங்களுக்கு வெறுப்பாகவும், விருப்பாகவும் மாறி இருக்கலாம் என்பது அவர்களுக்கு ஏனோ தெரிவதில்லை, ரேடியோ பெட்டிகளை, வரிப்பணம் செலுத்தி, வீடுகளில் வைத்திருப்பவர்களைப் பார்த்து, "உங்களுக்கு எத்தகைய நிகழ்ச்சிகள் வேண்டும்?" என்று கேட்டு அதன்படி

செய்வதை விட்டுவிட்டு, "நாங்கள் ஒலிபரப்பும் இந்த நிகழ்ச்சிகள் நன்றாக இருக்கின்றனவா? உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்கிறார்கள்! "ரேடியோவைப் பிரசங்க மேடையாகவோ, பிரசாரக் குகையாகவோ, சத் கதா காலக்ஷேபத் திண்ணையாகவோ வம்பர் மடமாகவோ அடிக்கவேண்டாம். ரேடியோவின் முக்கிய நோக்கமான பொழுது போக்கு சாதனமாக அது இருக்கவேண்டும்.

சங்கீத மேடை, திரை உலகம், விளையாட்டு அரங்கம், ஆகிய இடங்களுக்கு நேரில் செல்ல அவகாச மில்லாதவர்களுடைய நன்மைக்கு—அவர்களுடைய அந்தக் குறையை நிரப்புவதற்கு ரேடியோ உதவ வேண்டும், நடு நடுவில் ரசமானபேச்சு, நாட்டுப் பண்புக்கும், மரபுக்கும் ஊறு செய்யாத நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் அவசியமாகலாம்," என்கிறவர்களிடம் அதிகாரிகள் "உங்களுக்கு எது நன்மை என்பது உங்களுக்குத் தெரியாது, எங்களுக்குத்தான் அது தெரியும்!" என்று அவசியமில்லாத சுதந்திரத்தைப் பாராட்டிக் கொண்டு அவசியமான சுதந்திரத்தை ஆழ வெட்டிப் புதைக்கின்றனர்! பாவம்! ரேடியோவின் வாயை மூடும் சுதந்திரமோ, அல்லது வேறு ஆலையிலுள்ள நிலையங்களுக்கு ரேடியோவின் முள்ளைத் திருப்பும் சுதந்திரமோ பொது ஜனங்களிடம்தான் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தால் அவர்கள் நெஞ்சம் எப்படி அலைபாயும்?

இந்த எழுத்தாளர்கள் இருக்கிறார்களே அவர்கள் கோரும் சுதந்திரம் பலதிறப்பட்டது. பலர் பிறநாட்டு நல்லறிஞர்களுடைய கதைகளை அப்படியே தமிழில் தழுவித் தங்களுடைய பெயரில் வெளியிட்டுக் கொள்ளும் சுதந்திரத்தைக் கடைபிடித்து ஒழுகி வருகிறார்கள்! வேறு சிலர் வெளிநாடுகளுக்குப் போகும் செலவை மட்டுப் படுத்த விரும்பியோ, அல்லது அன்னிய சரக்குகளை பகிஷ்கரிக்கும் நோக்குடனே சொந்த நாட்டு, சொந்த மொழிகளில், சிலவருஷங்களுக்கு முன் (சில வாரங்களுக்கு முன்?) வெளிவந்த கதைகளை அப்படியே பார்த்து எழுதி சொந்தமென்று கொண்டாடும் சுதந்திரத்தைக் கேட்கிறார்கள்! வேறுசிலர், "எழுத்தாளனுக்கு உலகத்திலுள்ள எந்த 'தீமும்' (theme) விலக்கல்ல. அவன் எதையும் எழுதலாம் எப்படியும் எழுதலாம், எழுத்து சுதந்திரம் இல்லாவிட்டால் கலை எப்படி வளரும்?" என்று கேட்டு விட்டுப் படிப்பவர்களுக்குத் தீமை பயக்கும் 'தீமை'க் கையாண்டு கதைகள் எழுதுகிறார்கள்! சமூகத்திலுள்ள 'புரையோடிய புண்களை அறுத்து தானே குணப்படுத்தவேண்டும்?' என்று புண்களை மேலும் கிளறிவிட்டு, இரத்த விளாறாக்கிக் கண்களைக் கூசவைக்கிறார்கள் இவர்கள்! பிறமொழிக் கதைகளை 'தர்ஜமா' செய்கிறவர்களை ஒரு கையால் தாக்கிக்கொண்டே, மறு கையினால், அதே பிறமொழிக் கதைகளில் நம்முடைய நாகரிகம் பண்பாடு இவைகளுடன் மாறுபடும் கருத்துகள் கொண்ட கதைகளை சுவீகரிக்கும் சுதந்திரத்தை, யாரையும் கேட்காமலே அனுபவிக்கிறவர்கள் இருக்கிறார்கள்!

சில எழுத்தாளர்களுக்குத் தாங்கள் எழுதும்கதை கட்டுரைகள் ஒரு

எழுத்துக்கூட மாருமல் அச்சாக வேண்டும் என்ற சுதந்திர மனே பாவம் இருக்கும், சில பத்திரிகை ஆசிரியர்களுக்கு, ''ஆசிரியருடைய சுதந்திரம் கதைகளை வெட்டிப் போடுவதுதான்,'' என்ற எண்ணம் பலமாக இருக்கும். இந்த இரண்டு சுதந்திரங்களும் குருக்ஷேத்திரத்தில் மோதும் பொது, ''பத்திரிகை ஆசிரியனு அவன்! அவன் கசாப்புக்கடைக்காரனல்லவா?'' என்ற விமரிசனம், ''அவன் எழுதினது கதையா? கர்மம்! நான் 'எடிட்' பண்ணிக் கச்சிதமாகக் கதையை நான்கு பக்கத்தில் முடிக்காமல் அப்படியே வெளியிட்டிருந்தால் வாசகர்கள் அந்த எட்டுப் பக்கங்களையும் அனுமார் இலங்கையைத் தாண்டினது போல தாண்டிவிட்டு மேலே போயிருப்பார்களே!'' என்ற மதிப்புரையும் எதிரொலிக்கும்!

ஒவ்வொரு கடமைக்கும் அதை ஒட்டின சுதந்திரம் உண்டு. நாம் அதிக சுதந்திர புருஷர்களாக விளங்க வேண்டுமென்ருல் நமது கடமைகளை அதிகரித்துக்கொண்டு போகவேண்டும், பிரும்மசாரியாக இருந்து சுதந்திரம் அனுபவிப்பதைவிடக் கல்யாணம் என்னும் கடமையை ஏற்று அதனடியாகப் பிறக்கக் கூடிய பலவித சுகதுக்கங்களை அனுபவிக்கும் சுதந்திரத்தை வரவேற்பதே உண்மையான வீர சுதந்திரம். மனைவியின் காதலையும் குழந்தைகளின் மழலையையும் ஏகபோகமாக அனுபவிக்கும் சுதந்திரத்தை விடப் பிரும்மசாரியின் 'ஹோட்டல் சாப்பாடு—தனி அறை—சுதந்திரம்' அதிக ஆனந்தத்தை அளிக்க முடியுமா; கடமைகளுக்குப் பயந்தவன் என்று சுதந்திரமாக மற்றவர்கள் அவனை அழைத்தால் அவர்களைத் தடுக்கும் சுதந்திரம் அவனுக்கு ஏது?'

நமது பாரத தேசம் அரசியல் சுதந்திரம் பெற்று எட்டுவருஷங்களாகிவிட்டன. அடிமை விலங்குகளாக நாம் உழன்ற போது நமது சிந்தனையில் நிரம்பி வழிந்த ஏக்கம் கனவின் மெல்லிய திரையைப் போல இறந்த காலத்துடன் இணைந்து மறைந்து விட்டது.

ஓராயிர வருஷம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியான சுதந்திரம் வந்து எட்டாண்டுகள் சென்று விட்டன. ஆனல் இந்த எட்டாண்டுகளின் அனுபவத்தில், ''அரசியல் சுதந்திரம் தான் கிடைப்பதற்கு மிகவும் எளிதானது மற்றைய பொருளாதார, கல்வி கலாசார சுதந்திரங்கள் கிடைப்பது அப்படி ஒன்றும் சுலபமல்ல'' என்ற உண்மை நமக்குத் தெரிந்து போயிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அரசியல் சுதந்திரத்துக்காக நாம் அயலானுடன் போர் புரிகிருேம். ஆனல் பொருளாதார, கலாசார சுதந்திரத்துக்கு நம் நாட்டு மக்களுடனும் நம் நாட்டில வேரூன்றிய சில கொள்கைகளுடனும் தான் போர் புரிய வேண்டியிருக்கிறது அன்னியனிடம் காட்டும் கண்டிப்பு நம்மவர்களிடையே நம்மால் காட்ட முடியாமல் போவதும் இந்தச் சுதந்திரங்கள் இன்னமும் நமக்குச் சரிவர கிட்டாததன் காரணமாக இருக்கலாம்.

''அரசியல், பொருளாதார, கலாசார, சுதந்திரங்கள் எல்லாம் சுலபமாகக் கிடைத்து விடும். ஆனல் முக்தி எனும் சுதந்திரம் கிடைப்பது ஞான பலன். துர்ப்பலமாக உள்ள நமக்குத் துர்லபம் தான்'' என்பது வேதாந்திகளுடைய சித்தாந்தம்.

கூண்டுக்கிளியைப்போல சரீர மென்னும் சிறையினுள் தவிக்கும் இந்த ஆத்மா என்று பிறப்பு - இறப்பு என்னும் பந்தங்களிலிருந்து விடுதலை அடைகின்றதோ அன்று தான் அதற்கு மோட்சம் என்னும் ஞான சுதந்திரம் கிடைக்கும் என்பதை நாம் நம்புகிருேம். உலக ஆசை என்னும் அடிமை மோகம் தணியும் போதுதான் ஞான சுதந்திர தாகம் தணியும்.


சாப்பிட்டாச்சா மாமீ.
வாங்கோ, வாங்கோ, நான் அப்பவே சாப்பிட்டுட்டேன் இனிமே ராத்திரி அவர் வந்த பிறகு தான்.
1
உங்களவருக்கு எந்த ஆபீசுலே வேலை?
கரண்டு-ஆபீசுலே!
2
நல்லவர் போல் இருக்கு
நித்யம் கையிலே ரெண்டு பொட்டலம், பக்கோடா வோ-மிக்சரோ கொண்டு தருவார்.
3
நீங்க பாக்யசாலி பிரியமா, ஆசையா, கொண்டு தரார்
நேற்றைக்கி ஸ்பெஷல் மிக்சர் கொண்டு தந்தார்.
4
!!!
என் நாத்தனருக்கு தெரியாமெ-கொடையிலே மறைச்சு இரண்டு-பாதாம் அல்வா கொண்டு தந்தா,
5
?
ராத்திரி பத்துமணியானலும்-தின்னுடின்னு கட்டாயப்படுத்ரார்.
6
எந்த ஆபீசுலே மாமி வேலே?
எலக்டிரிக் கரண்டு-ஆபீசுலே-...,.
7
அப்படின்னு?
!!!
காண்டீன்-சாக்குமாஸ்டர் புகூதணம் பண்ற வேலே.
8

நான்......!

'மஹி'

பெரிய ஞானிகள் 'நான்' என்பதை அறியப் பாடு பட்டார்கள். 'நானே' அழித்த பின்னர் தான் ஸகுணப் பிரம மத்தின் நிலைக்கு அருகில் நகர வாவது முடியும் என்பது ஞான மார்க்கத் திறவுகோல். இவை யெல்லாம் நான் சொல்லப் போவதற்குத் துளிகூட சம்பந்த மில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் 'நான் யார்' என்ற பிரச்னை எழுந்தது. அதற்காக எழுத்து பூர்வமான அத்தாட்சிகள் தேவைப்பட்டன. நான் சேகரிக்கத் தொடங்கி னேன். அதை முறைப்படி உங் களுக்குத் தருகிறேன். நான் யார் தெரிகிறதா பாருங்கள்.

அத்தாட்சி நிர் 1 :—ரிஜிஸ்தர் பத்திர நகல்.

திருச்சி ஜில்லா திருச்சி தாலூகா திருச்சிக் கோட்டை கிழாண்டார் தெருவிலிருக்கும் ஜி. ராமுடுவய்யர் தி. தா. வய லூரிலுள்ள கோதண்டத்துக்குப் பலவந்தமாக எழுதிவைத்த பத்தி ரம் என்னவென்றால், என் தகப் பனருக்குச் சொந்தமான இன்ன இன்ன எல்லைகளுள்ள நிலத்தை பகவான் ஸ்ரீ தண்டாயுதபாணி யின் பெயரில் எழுதிவைத்து அந்தக் கோவிலுக்கு ஷியார் பூஜை செய்து கொண்டு வர வேண்டியது. அப்படிப் பூஜை செய்யும் காலத்தில் இன்ன நிலத்தைஅனுபவித்து வரவேண் டியது. அதன்பின்னர் இந்தக் கோவிலுக்குப் பூஜை செய்யும் யாவரும் எடுத்துக் கொள்ள வேண்டியது.

அத்தாட்சி நிர் 2 :—ஜனன ரிஜிஸ்தர் ஸர்ட்டிபிகேட்டு.

1923-ஆம் வருஷம் ஜுலை மாதம் 17 ஆம் தேதி காலை ஆறு மணிக்கு ஸ்ரீ ராமுடுவய்யர் 42 வயது தகப்பன், அன்னம்மாள் இருபத்தாறு வயது தாய், ஆண் பிள்ளை பிறந்தது. எழுதி வைத் தது ராமஸ்வாமி தாய்மாமன்.

அத்தாட்சி நிர் 3 :—இன்ஷ் யூரன்ஸ் கம்பெனி ரசீது.

1933-ஆம் வருஷம் செப்டெம் பர் மாதம் முப்பதாம் தேதி இன்ன இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு லேட் ராமுடுவய்யர் குமாரன் குப்பன் (10 வயது) க்காக கார் டியன் அன்னம் கொடுத்த ரசீது. தங்கள் கம்பெனியில் செய்து கொண்ட இன்ஷ்யூர் தொகை யான ரூபாய் 1000 ஆயிரமும் பெற்றுக் கொண்டேன்.

அத்தாட்சி நிர் 4 :—எஸ். எஸ். எல். ஸி. ஸர்ட்டிபிகேட்.

ஆர். குப்புசாமி, தகப்பனர் ராமுடுவய்யர் பரீக்ஷை எண் 67352, பரீக்ஷையில் தேறினர்.

அத்தாட்சி நிர் 5 :—திருமணப் பத்திரிகை.

நிகழும் விரோதி வருஷம் பங்குனிமாதம் 15 ஆம் தேதி 30-3-51 ஆதிவாரம் சுபயோக சுப நட்சத்திரத்தில் சுப லக்னத் தில் லேட் ராமுடுவய்யர் குமாரர் சி. குப்புசாமிக்குச் சிவராஜன் குமாரத்தி சௌ லட்சுமியைப் பாணிக்கிரஹணம் செய்வதாய் பெரியோர்களால் நிச்சயித்து...

அத்தாட்சி நிர் 6:—பழைய தபால் கவர்.

ஆர். குப்புசாமி
வேப்பமர ஸ்டோர்ஸ்
திருச்சினுப்பள்ளி.

6. A. பத்திரிகாலய விலாசத்துடன் கதையைத் திருப்பி அனுப்ப உபயோகித்த ராப்பர் விலாசத்துடன்.

அத்தாட்சி நிர். 7:—பழைய பத்திரிகையின் பக்கங்கள்.

மனக்குரங்கு
எழுதியவர் ஆர். குப்பன்

அத்தாட்சி நிர் 8:—ஐடென்டிடி கார்டு, ஆர். குப்பன் என்ற கையெழுத்துப் போட்டு. என் போட்டோ ஒட்டி மாகாணப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலால் அளிக்கப் பட்டது.

இவைகளிலிருந்து உங்களுக்குப் புரிந்திருக்கலாம். நான் ஒரு எழுத்தாளன் முப்பத்திரண்டு வயது நிரம்பியவன், மணமானவன். ஆர்.குப்பன். ராமுடுவய்யர் குமாரன் என்றெல்லாம், என் தகப்பனுர் கோவிலுக்கு எழுதி வைத்த நிலத்தை நான் பெற வேண்டி இவ்வளவு அத்தாட்சிகளேயும் சேகரித்தேன்.

இவ்வளவு அத்தாட்சிகளேயும் மிகவும் சிரமப்பட்டுப் பணம் செலவு செய்து நான் சேகரித்துக் கொண்டு வரும்போது, திருச்சியில் ஒரு இடத்தில் காணுமல் போய்விட்டது. எனக்கு எத்தனேயோ எண்ணங்கள். இங்கிலீஷ் ஸ்டண்டு ஸிரியல்களில் வருவது போல, என்னுடைய பிரதிவாதி ஆட்களே வைத்து அவைகளேக் கவர்ந்து கொண்டு போய் விட்டானே, என்று எண்ணினேன்.

பொருள் மதிப்பில் அதிக நஷ்டம், நஷ்டமில்லே என்ருலும், ஏமாற்றப்பட்டேன் என்ற தோல்வி உணர்ச்சி உறுத்திக் கொண்டே இருந்தது.

வாழ்க்கையில் இதுதான் முதல் தடவை என்று கிழே விழுந்து விட்டும் மீசை மண்ணேத் தட்டி விட்டுக் கொண்டு திருப்திப்படத் தெரியாத நான், ஏமாறத் தயாராயிருந்தால் ஏமாற்றப் படவேண்டியது தான் என்பதை நம்பிப் பேசாமல் இருந்தேன். என் நண்பர்கள்தான் மிகவும் பறவாய்ப் பறந்தார்கள்.

அப்புறம் எப்படியோ, மறந்து வைத்து விட்ட இடத்தில் பத்திரமாக மறைந்து இருந்து விட்டு, கோர்ட்டில் இன்று ஈரங்கி என்று தெரிந்து கொண்டு, ஸம்மன் இல்லாமலேயே தன்னே வெளிப்படுத்திக் கொண்டு, என்னேச் சரணடைந்தது.

பஸ் ஸ்டாப்பிற்கு வந்தவுடன் நாம் விரும்பும் இலக்கமிட்ட பஸ் வந்து,உட்கார இடமும்கிடைத்து ஒரு ரூபாய் நோட்டை நீட்டவும் கண்டக்டர் முணமுணக்காமல் சில்லறையும் கொடுத்து விடும் போது ஏற்படும் குதூகலம் எனக்கு உண்டாயிற்று.

அவ்வளவுதான். உடனே வேகமாகப் பஸ் ஸ்டாண்டிற்கு ஓடினேன். எனக்கு வேண்டிய பஸ் வரவேயில்லே, தவங் கிடந்தேன். கையில் தோல் பை அதில் என் பெயர் பொறித்திருந்தது. இதை ஒரு போலீஸ்காரன் நீண்ட நேரமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். எனக்கு என்னமோ போலிருந்தது. மடியில் ஏதும் கனமில்லாவிட்டாலும் போலிஸ்காரனின் கண்ணேட்டம் நல்லதுக்கல்லவே. என் கவனத்தை மறுபக்கங்களில் ஓட்டி விட்டுச்சட்டென்று அவன் பக்கம் திரும்பினுல் அவன் என்னேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் அங்கிருந்து நழுவி அடுத்த ஸ்டாப்பிற்கு நடந்தேன். அவனும் பின் தொடர்ந்தான். என் பயம் அளவு கடந்து விட்டது. அவன் என்னைத் தான் இலக்கு வைத்திருக்கிறுன் என்பதைப் புரிந்து கொண்டவுடன் என்னுடைய அதிகபட்ச தைரியம் தொடைகளை மட்டும் நடுங்க வைத்தது. நடை விருட்டென்று மாறியது.

அவனும்ஒட்டப்பந்தயத்துடன் என்னைத் தோற்கடித்து விட்டான். ''வாப்பா! டேஷனுக்கு...! என்றுன்.

கேவலம் கான்ஸ்டெபிளிடம் விஷயம், விளக்கம் இவைகளைச் சொல்லி நேரத்தையும் சில்லறையையும் விணடிக்க விரும்பாமல் ஸ்டேஷனுக்குக் கம்பி நிட்டினேன். நல்லவேளை காப்புப் போடாமல் காவலாக மட்டும் வந்தான்.

போலிஸ் ஸ்டேஷனில் ஸப் இன்ஸ்பெக்டர் இருந்தார்.

என்னை அழைத்துப் போன கான்ஸ்டேபிள் அவரின் காதைக் கடித்தவுடன் அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். அவர் பார்த்த பார்வை, என்னுள்ளே நானுகத் தயார் செய்து வைத்திருந்து சொல்ல நினைத்தவைகளையெல்லாம் துரத்தி மறக்கடித்து விட்டது.

வாய் பேசாமல் என் தோல் பையை வாங்கிக் கொண்டார். அதைத் திறந்து அதிலிருந்தவைகளை வெளியே எடுத்துப் பார்த்தார். பின்னர் தம் மேஜை டிராயரிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அதனுடன் ஒத்திட்டுப் பார்த்தார். அவர் முகத்தில் களை கட்டியது. என் முகத்திலும் சற்று வெண்மை படர்ந்தது.

'' ஏம்பா இத்தெயெல்லாம் எங்கேயிருந்து எடுத்தே......!

'' மேஜை டிராயருக்கடியிலிருந்து......!

''அப்போ யாராச்சும் இருந்தார்களா?''

'' ஊஹூம்......!

'' இத்தை எதுக்காக எடுத்தே......!

'' கோர்ட்டுக்குக் கொண்டு போக......''

'' அங்கே போயி மாட்டிக்கறதே இங்கெயே மாட்டிக்கிட்டே ''

'' மாட்டிக் கொள்ளவா?'' என்று கேட்டுவிட்டேன்.

'' பின்னே என்னுப்பா பண்றது? இவ்வளவையும் உன் வாதிகிட்டெயிருந்து அபேஸ் பண்ணிப்பிட்டியே! அதுக்காக உம்மேலே கம்பிளெயிண்ட் இருக்குதே......;

'' கம்பிளெயிண்டா......''

''இந்தாப் பாரு.........இன்ஸ்பெக்டர் ஒரு கம்பிளெயிண்டைக் காட்டினர். அதை என் நண்பன் கிருஷ்ணமூர்த்தி கொடுத்திருந்தான். என் தஸ்தாவேஜுகள் காணமல் போயின என்று அவனிடம் சொல்லியிருந்தேன். அன்றே அவன் போலீஸில் புகார் கொடுத்திருக்கிறுன். அதைக் கொண்டு என்னையே குற்றவாளியாக்கி விட்டார் இன்ஸ்பெக்டர் என்பது புரிந்துவிட்டது. விஷயத்தை விளக்கினேன். நான் நான் தான்; இது என்னுடையதுதான் என்று; அவர் நம்பவில்லை.

எட்டு மணி நேர லாக்கப்பிலிருந்து நண்பன் கிருஷ்ணமூர்த்தி மீட்டான். நேரே வீட்டிற்கு விரைந்தேன். வழியில் சந்தித்த வக்கில் குமாஸ்தா நான் நான் தான் என்று கோர்ட்டார் தாமாக உணர்ந்து கொண்டு என் சொத்துக்களை எனக்கு வழங்கத் தீர்ப்பளித்து விட்டார்கள் என்ற நற்செய்தியைக் கூறிவிட்டார்.

அணுசக்தியும் ஆத்மசக்தியும்

உலகம் உய்யுமா? மனிதவர்க்கம் வாழுமா? அணுகுண்டும், ஹைடரஜன் குண்டும், கோபால்ட் குண்டும் தயாரிக்கப்பட்டு, அழிக்கும் ஆவல் உலகத்திலே பெருகி வரும்போது உலகம் எப்படி உய்ய முடியும்? மனிதனுக்கு வாழ்வு ஏது? எந்த நிமிஷத்தில் இந்த அழிவுக் கருவிகளின் மூலம் ஆபத்து நேரிடுமோ என்று சிந்திக்கும் மனித உள்ளத்திலே வாழ்வைப் பற்றிய சிந்தனைக்கு வழி ஏது? என்றெல்லாம் இன்று கேட்கப்படுகிறது.

வாழ்வைப் பற்றிய சிந்தனையை எந்த சக்திகளாலும் அழிக்க முடியாது என்பதை முதலிலேயே குறிப்பிட்டாக வேண்டும். சாவைக் கண்டு மனிதன் பயப்படுகிறான் என்கிறோம். ஆனால் எப்படியும் சாகத்தானே போகிறோம் என்று வாழாமல் இருந்து விடுகிறானா? இல்லையே. அணுகுண்டும், ஹைடரஜன் குண்டும், கோபால்ட் குண்டும் அழிவுக் கருவிகள் தான். ஆனால் அவற்றைப் படைத்தவன் மனிதன். அவற்றைக் கொண்டு இன்று உலகத்தையே அழித்து விடுவேன் என்று பயமுறுத்துகிறானே அவனும் மனிதன் தான்.

மனிதன் தன் விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொண்டு போகும் போது அந்த அறிவின் முதிர்ச்சியிலே அணுகுண்டு பிறந்தது; ஹைடரஜன் குண்டும், கோபால்ட் குண்டும் தொடர்ந்தன. இவை பிறப்பதற்கு அந்தக் காலத்திய போர்ச் சூழ்நிலையும் நாச சக்திகளின் வெறியாட்டமும் காரணமாயிருந்தன.

உலகப் போர் நிகழ்ந்து வரும் தருவாயில் நம் நாட்டிலே ஆத்ம பலத்தின் மகத்தான சக்தியைக் கொண்டு சுதந்தரப் போராட்டம் நடத்தி வந்தார் ஒருவர்.

அழிவுக் கருவிகளின் நாசவேலைகள் உலகத்தின் ஒரு பக்கத்திலே நடந்து வரும்போது, அஹிம்ஸா சக்தியின் மூலம் ஆக்கவேலைகள் செய்து கொண்டிருந்தார் காந்திஜி.

மக்கள் வாழ்வதற்காகவும் மாநிலம் உய்வதற்காகவும் மகாத்மாஜி ராம ராமத்தைப் பஜித்துக் கொண்டே நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஆங்காங்கு பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தினர். ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் மக்கள் ஜாதி, மதம், நிறம், இனம் எந்த வேற்றுமையும் இன்றி பங்கெடுத்துக் கொண்டு ஆண்டவனை வணங்குவதில் ஈடுபட்ட காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

உலகத்தின் ஒரு பாகத்தில் ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் மக்கள் போர் என்னும் வெறியாட்டத்திற்கு பலியாகி மாண்டு வரும் சமயத்தில், மற்றொரு பாகத்தில் லட்சோப லட்சம் மக்கள் ஆத்ம சிந்தனையில் ஈடுபட்டு, ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து வந்தனர்.

யுத்தம் முடிந்தது; அழிவு வேலைகள் நின்றன; ஆனால் அவற்றில் ஈடுபட்ட தலைவர்களின் உள்ளங்களில் சமாதானம் பிறக்கவில்லை. இன்னமும் உலகம் முழுவதும் சமாதானம் நிலவவும், மீண்டும் யுத்தமே வராமலிருக்கவும் என்னென்ன செய்யலாம் என்று திட்டம் போடுவதிலேயே இருக்கின்றனர்.

ஆனல், காந்தியடிகளின் பிரார்த்தனை பலித்தது; லட்சக்கணக்கான மக்கள் அவருடன் சேர்ந்து ஆண்டவனை வேண்டியது நிறைவேறியது; இந்தியா சுதந்தரம் பெற்றது.

இந்தியா சுதந்தரம் பெற்றது ஆத்ம பலத்தின் வெற்றி; அஹிம்ஸா தர்மத்தின் சாதனை, அணுகுண்டின் வெற்றியல்ல, ஹைடரஜன் குண்டின் சாதனையும் அல்ல.

இதை உலகம் ஒப்புக்கொண்டு விட்டது; ஆனல் ஏனோ மற்ற நாடுகள் இன்னமும் இந்திய வழி

யைப் பின்பற்ற முன்வரவில்லை. கோடிக் கணக்கான பணத்தைச் செலவழித்துக் குண்டுகளை உற்பத்தி செய்து விட்டோமே; அஹிம்ஸையும் ஆத்ம பலமும் அவற்றைப் பயன் படாமல் செய்து விடுமே என்கிற எண்ணத்தினாலோ?

அஹிம்ஸையும் ஆத்ம பலமும் பெற விஞ்ஞானம் படிக்க வேண்டியதில்லை; ஆராய்ச்சிக் கூடமும் தேவையல்ல. ஒவ்வொரு மனித இதயமும் ஒரு ஆராய்ச்சிக் கூடம் தான். அதில் நடத்தும் தெய்வப் பிரார்த்தனை ஒன்றே அவற்றை அளிக்க வல்லது. இதை உணர்ந்து காந்தியடிகள் வாழ்ந்தார்; செய்யமுடியாது என்று மற்ற நாடுகள் நினைத்த காரியத்தைச் செய்து காட்டினார்.

அவர் வழிதான் உலகம் உய்யும் வழி; மனித வர்க்கம் வாழும் வழி, உலக சமாதானம் நிலவும் வழியும் கூட.

போரைத் திறம்பட நடத்தி வெற்றிகண்ட தலைவரும், இன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து சமாதானம் வேண்டும் என்று அறைகூவி யழைப்பவருமாகிய ஐஸன்ஹோவர் கூட சொல்லுகிறார்; ''மக்கள் எல்லோரும் சேர்ந்து கடவுளை வேண்டிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்; தங்கள் கோரிக்கை நிறைவேறும் என்கிற நம்பிக்கையோடு ஆண்டவனை அவர்கள் வழிபட வேண்டும். அப்படிச் செய்தால் ஆச்சரியகரமான பலன்கள் ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,'' என்று.

அழிவுக் கருவிகளின் உற்பத்தியைத் தடை செய்து அணுசக்தியையும், மற்ற சக்திகளையும் ஆக்க வேலைகளுக்காக உபயோகப் படுத்த வேண்டும் என்கிற ஞானோதயம் இப்போது அந்த நாடுகளில் ஏற்பட்டு வருகிறது. உலகம் உய்ய வேண்டும், மனித வர்க்கம் வாழ வேண்டும் என்கிற எண்ணம் தான் இந்த ஞானோதயத்திற்குக் காரணம்.

கலியாண ஜவுளிகள்!

கலியாண வைபவங்களுக்கு தேவையான கூரைப் புடவைகள், ஜரிகை வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் யாவும் எங்களிடம் நியாய விலையில் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

தந்தி: SAKTHISILK

SAKTHI SILK EMPORIUM

சக்தி ஸில்க் எம்போரியம்

நெ. 8. வடக்கு மாட வீதி, மயிலாப்பூர்—மதராஸ்-4.

நிலவுத் தாமரை

பி.எம். கண்ணன்

5

காலைச் சூரியனின் ஒளியிலே பளபளக்கும் தென்னோலைகளின் ஊடே புகுந்து இளங்காற்று சல சலத்துக் கொண்டு ஜன்னல் வழியாக வந்து நீலாவின் முன் உச்சி மயிர்ச் சுருளிலே தவழ்ந்து விளையாடியது. நெற்றி மீது விழுந்து கிளு கிளுக்கும் மயிர்ச் சுருளைத் தள்ளிக்கொள்ள வேண்டும் என்கிற நினைவுகூட இல்லாமல் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள் நீலா.

முதல் நாள் இரவு அவள் நெஞ்சிலே ஊற்றெடுத்த இன்ப உணர்வுக்கு இலக்காகி அவள் என்னென்னமோ கற்பனை பண்ணிக் கலங்கினாள். அந்தக் கற்பனைக் கலக்கம் அவள் இதயத்தையே அதிரச் செய்து அவளுக்கு மூர்ச்சை போட்டு விட்டது. தாய் லக்ஷ்மியம்மாள் டாக்டரைக் கூட்டிக் கொண்டு வந்து சிகிச்சை செய்யும் படியாக ஆகி விட்டது.

அவள் தாய் தான் மிகவும் பதறிப் போனாள். இரவு முழுவதும் லக்ஷ்மியம்மாள் பெண்ணின் உடல் நிலையைப்பற்றிக் கவலைப்பட்டபடி கண் விழித்துக் கொண்டு இருந்தாள். நீலா தனக்கு ஒன்றுமில்லை என்று தாயைப் போய்ப் படுத்துக் கொள்ளும்படி சொன்னாள். ஆனால் தாயின் உள்ளம் கேட்கிறதா? அரைமணிக்கு ஒரு தரம் எழுந்து வருவாள். நீலா படுத்திருக்கும் கட்டிலின் அருகே குனிந்து பார்ப்பாள். நீலா தூங்குவது போலக் கண்ணை மூடிக் கொள்வாள். பெண் தூங்குகிறாள் என்று எண்ணிக்கொண்டு திரும்புவாள் தாய். சிறிது நேரத்திற்கெல்லாம் நீலாவின் கால் அசைவதோ, கட்டில் சட்டங்கள் கிறீச் சிடுவதோ கேட்கும். மீண்டும் எழுந்திருப்பாள் தாய். அவள் வருவதைக் கண்டு கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டு கை கால்களை அசக்காமல் தூங்குவது போல் பாசாங்கு பண்ணுவாள் நீலா. லக்ஷ்மியம்மாள் போய் விடுவாள்.

இப்படியே இரவு கழிந்தது. லக்ஷ்மியம்மாளும் சரியாகத் தூங்கவில்லை; நீலாவும் தூங்கவில்லை. அவள் மனத்திலே ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஸ்ரீகாந்தனைத் தான் மணந்து கொண்டது பெரிய முட்டாள் தனம் என்று அவள் ஒரு சமயம் நினைப்பாள்; அடுத்த

நிமிஷமே அவனை மணம் புரிந்தது தான் சரி என்று தனக்குள்ளாகவே வாதித்துக் கொள்ளுவாள். அத்தனை அழகும் கம்பீரமும் பொருந்திய கணவன் வேறு யாருக்கும் கிடைக்காமல் தனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமிதம் அடைவாள். மறு கணமே 'எனக்கு இப்பேர்ப்பட்ட கணவன் கிடைத்து என்ன பிரயோசனம்? என் வாழ்வு மலரவில்லையே' என்று ஏங்குவாள். அவள் கணவனுக்கு எதிராக ரங்கதுரையை நிறுத்திப் பார்த்து அவள் பேதை உள்ளம் அளவெடுக்கும். 'என்ன இருந்தாலும் இந்த ரங்கதுரை என் காந்தனுக்கு ஈடா ஜோடா?' என்று கேட்டுக் கொள்வாள். ஆனால்......உன் காந்தன் பெயரளவில் தானே உனக்குக் கணவன்? ரங்கதுரை ஜயந்தியின் ஆசைக் கணவனாயிற்றே! என்று அவள் உள்ளம் அவளைப் பார்த்துக் கேலி செய்யும். 'உம்! ஜயந்தியின் ஆசைக்கணவன் ரங்கதுரை! அதே போலத் தானே என் காந்தனும் என் ஆசைக் கணவர்!' என்று அவள் தன் உள்ளத்திற்குப் பதிலுரைப்பாள். அவள் உள்ளம் உடனே கொல்லென்று சிரிக்கும். 'ரங்கதுரை ஜயந்தியின் மீது உயிரா யிருக்கிறாரே! அதைப் பற்றி அவர் உன்னிடமே கூடச் சொன்னாரே! உன் காந்தன்—?' என்று கேட்டு நையாண்டி பண்ணும் உள்ளம். அவள் உள்ளமே சிதறுவதுபோல விக்கி விக்கி அழுவாள்.

அவள் விசும்பும் குரல் கேட்டு லக்ஷ்மியம்மாள் எழுந்துவருவாள். 'தாயின் காலடியோசை கேட்டு மகள் 'கப்சிப்' என்று உறங்குவது போல் இருப்பாள். தாயும் வந்த வழியே திரும்புவாள்.

'இந்த ரங்கதுரையை நான் மணந்திருந்தால்...........?' என்று நீலாவின் அபலை நெஞ்சம் எண்ணும், 'சீ! என்ன பாப எண்ணம்! இந்த மாதிரி எண்ணத்திற்கே என் உள்ளத்தில் இடமளிக்கலாகாதே!' என்று கண்டிப்புடன் திருத்திக்கொள்வாள். ஆனால் அவள் திருத்திக் கேட்கிறதா அந்தப் பெண்மை உள்ளம்?...........' ரங்கதுரைக்கு என்மேல் கொள்ளை ஆசை! "நீலா! உன் வார்த்தையில்தான் என் வாழ்வே அடங்கியிருக்கிறது" என்று உள்ளம் பொங்கிக் கூறியவரை உதறித் தள்ளினேனே; அந்தப் பாபம் வீண் போகுமா? அனுபவிக்கிறேன் இப்போது' என்று கண்ணீர்க் கசியும் கன்னங்களைத் தலையணையோடு தலையணையாகப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மித் தவிப்பாள்.

'காலையில் ரங்கதுரை உன்னைக் காண வரப் போகிறாரே!' என்று ஏளனம் செய்யும் அவள் உள்ளம். 'ஐயோ! அவரை வரவேண்டாம் என்று சொல்லேன், உனக்குப் புண்ணியம் உண்டு என்று கூக்குரலிட்டுக் கூவியழவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

நீலா இரவுமுழுவதும் கண்ணை மூடவேயில்லை; லக்ஷ்மியம்மாள் பாதிராத்திரிக்குமேல் தன்னையுமறியாமல் தூங்கிப்போனாள்.

கண்கள் மிளகாய்ப் பழம்போல் சிவந்திருக்க, பொழுது புலரும் போதே படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தாள் நீலா, கீழேபோய்ப் பல்விளக்கிக் காப்பி குடித்து விட்டுக் குளித்து உடைமாற்றிக் கொண்டு மாடிக்கு வந்தாள். எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் ரங்கதுரை வருவான் என்று தெரியும் அவளுக்கு. அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். இயற்கை அழகு நிரம்பிய அவள் தோற்றம் அவள் செய்து கொண்ட அலங்காரங்களால் பின்னும் பதின்மடங்கு அழகாகத் தோன்றியது. கண்ணாடி முன் நின்று கடைசியாக ஒரு முறை தன் அலங்காரங்கள் எல்லாம் சரியாக அமைந்திருக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டாள். அவளுக்கே சிரிப்பு வந்தது, 'களுக்' கென்று கண்ணாடியைப் பார்த்துச் சிரித்தாள். கண்ணாடியில் தோன்றிய அவள்

பிம்பமும் அவளைப் பார்த்துச் சிரித்தது.

"சிரி! நன்ருய்ச் சிரி! எப்படி வேண்டுமானாலும் கேலிபண்ணிக் கொள்! நீ எடுத்த ஜன்மத்துக்கு அலங்காரம் ஒரு கேடா என்று சிரிக்கிருயாக்கும்! பேஷாய்ச் சிரி. ... உம் ... உம் ... உன்னைப் போல நான் ஒன்றும் மௌட்டீகம் அல்ல, பழைய நண்பர், பலநாட்களாகப் பாராத நண்பர்! வீடுதேடி அளவளாவ வருகிருர்! அவர் வரும்போது அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவா அவரை வரவேற்பது! என்றைக்கும் உன் அழுமூஞ்சித்தனம் இருக்கிறது! உன் ஆயுள் முடியும்வரையில் நீ அழுதழுது தான் சாக வேண்டும்! அது உன் தலையெழுத்து!......... உம்...... இல்லை யில்லை...... நீயாகவே செய்து கொண்ட தீவினை!...... அதற்காக தீவினையின் பலனை நீ அனுபவிக்க வேண்டியதுதான். ஆனல் உன்னைப் பார்க்க வரும் பள்ளித் தோழர்கள் கூடவா அனுபவிக்க வேண்டும்? அவர்கள் முன்னிலையில் உன் துக்கத்தை மறக்க நீ கற்றுக்கொள்ளவேண்டும். உனக்குத் தெரியாவிட்டாலும் நான் கற்றுக் கொடுக்கிறேன்; தெரிந்து கொள் என்று தன்னைப் பார்த்துச் சிரித்த பிம்பத்திற்குப் புத்திமதி கூறினள் நீலா. பிறகு அவளுக்கே என்ன தோன்றியதோ? 'கண்ணுடியில் தோன்றும் பிம்பத்துடன் பேசிக்கொண்டிருக்கிறேனே; இந்தச் சமயத்தில் யாராவது பார்த்தால் என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொள்வார்கள்! பைத்தியக்காரப் பட்டம் ஒன்றுதான் பாக்கி எனக்கு' என்று சலித்துக் கொண்டே கண்ணுடியை விட்டு நீங்கி, தெற்குப் பக்கத்து ஜன்னல் ஓரமாய் வந்து நின்ருள், அங்கேதான் தென்றலின் குளுமை அவள் தலைமயிர்ச் சுருளுடன் விளையாடத் தொடங்கியது.

இன்னும் சிறிது நேரத்தில் ரங்கதுரை வந்துவிடுவான்,

முன் கதை

நீலா ஸ்ரீகாந்தனின் மனைவி. ஸ்ரீகாந்தன் அவளை விரும்பி மணக்கவில்லை. கல்பனு என்னும் காலேஜ் மாணவி தன் சாகஸத்தினல் அவனை மதியிழக்கச் செய்து தன் அழிவையே தேடிக் கொண்டாள். அந்தச் சம்பவத்தினுல் பாதிக்கப்பட்ட ஸ்ரீகாந்தன் நீலாவை மணந்தும் அவளுக்கு வாழ்வளிக்காமல் ஓடிப்போய் விட்டான். ரங்கதுரை அவர்களது கல்லூரித் தோழன். நீலாவின் மீது அவன் காதல் கொண்டவன். ஆனல் நீலா தன்னை விரும்பவில்லை என்று அறிந்ததும் அவன் கண்ணியமாக அவள் வாழ்க்கைப் பாதையினின்றும் விலகிக் கொண்டான். அவனுக்கும் நீலாவின் தோழி ஜயந்திக்கும் திருமணம் நடந்தது. ஜயந்தி மூலம் நீலாவைப்பற்றி அறிந்த ரங்கதுரை அவளைப்பார்க்க வருகிருன். மறுநாள் நடைபெறவிருக்கும் விருந்தில் பழைய தோழர்களைச் சந்திக்கலாம் என்று விருந்துக்கு வருமாறு நீலாவை இருவரும் அழைக்கிருர்கள். ஆனல் நீலா விருந்துக்குப் போக விரும்பவில்லை. அவர்கள் போனதும் அவளுக்குப் பழைய நினைவுகள் ஏற்படுகின்றன. துயரம் தாளாமல் மூர்ச்சையாகிருள்.

அவனை எப்படி வரவேற்பது? அவனிடம் என்ன பேசுவது? அவனைப் பார்த்ததும் அவளுக்குப் பழைய நினைவுகள் வெடித்துக்கொண்டு வருமே, என்ன செய்வாள் அவள், பாவம்! பழைய நினைவுகள் நெஞ்சைப் புண்ணுக்கி கிளற எப்படிச் சகித்துக் கொள்வாள்! அவன் நாளை வருகிறேன் என்று சொன்னதற்குப் பைத்தியக்காரப் பெண் 'நாளைக்குத் தனியாய்ப் பேச என்ன இருக்கிறது? தாங்கள் எதற்குச் சிரமம் எடுத்துக்கொண்டு வரவேண்டும்! இங்கே வந்து என்னுடு பேசிக் கழிக்கும் நேரத்தை அங்கே ஜயந்தியோடு ஜம்மென்று கழிக்கலாமே' என்று சொல்லியிருந்தாளானுல், இந்தத் தொல்லையெல்லாம் இல்லையல்லவா?......... ஆனுல் அது எப்படி முடியும்? அவளால் தான் ஒருவார்த்தை பேச முடியவில்லையே, அத்தனை வார்த்தைகள் கூட சொல்லவேண்டாம். ஒரே வார்த்தையில் இன்னும் நாளைக்குப் பேச என்ன இருக்கிறது! எல்லாம் பழங்கதை தானே! என்ருவது சொல்லத் தெரிந்ததா அவளுக்கு?

ஆ! அதோ வந்து விட்டான் ரங்கதுரை! மாடிப்படிகளில் தட் தட் என்று அவன் கால் செருப்பின் ஓசை கேட்கிறது. அதோடு கிறீச் கிறீச் சென்று மற்ருெரு செருப்பின் ஓசையும் கலந்து கேட்கிறதே?...... உம்...... அவள் கூட வருகிருளோ?

அவள் எதற்கு வரப்போகிருள்? அவளுக்கு என்ன வேலை இருக்கிறது அவளிடம்! அவள் வரமாட்டாள்! அவளுக்கு அன்று மாலை விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கவே சரியாயிருக்கும் பொழுது! அவள் தகப்பனர் எல்லாம் கவனித்துக் கொள்ளத்தான் செய்வார்! இருந்தாலும் விருந்து அவளது கல்லூரி நண்பர்கள், அவன் கல்லூரி நண்பர்கள், காரியாலய நண்பர்கள் ஆகியவர்களுக்காகத்தானே! அது விஷயத்தில் அவள் நேரடியாகக் கவனம் செலுத்துவது மிக மிக அவசியம்! அவனும் தான் கவனிக்க வேண்டும். ஆனுல் அது அவர்கள் வீடு! பெண் வீட்டுக்காரர்கள் வீடு! பெண்ணும் அவள் தந்தையும் எல்லாவற்றையும் பார்த்துச் செய்வார்கள்; செய்யவேண்டும். எப்படியெப்படிச் செய்யவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும், என்று அவன் அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிருன்! இல்லாவிட்டால் மாத்திரம் என்ன! ஹானர்ஸ் பட்டம் பெற்றுப் கல்யாணம் செய்துகொள்ளும் பெண்ணுக்கு நண்பர்களுக்கு ஒரு பார்ட்டி கொடுப்பது எப்படி என்று சொல்லிக் கொடுக்கவா வேண்டும்! மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பதா!

எனவே அவன் மாத்திரம் தான் வருவான்; ஆனுல் அந்த மற்ருெரு காலடியோசை?

அவள் சிந்தனைக்கு நேரம் எங்கே? அதோ அவனே வந்து விட்டான்! அவன் பின்னுல் அதோ அவள் தான் -- அவளே தான் வருகிருள்! ஏன்! ஏன்! அவள் ஏன் இன்ளுெரு தடவை வரவேண்டும்! அவனைத் தனியாக அனுப்ப ஒருகால் அவளுக்குச் சம்மதம் இல்லையா?.........

"நீலா!"

நீலா ஜன்னலை விட்டு எழுந்தாள்.

"நீலா! நானும் வந்து விட்டேன். என்னை நீ எதிர்பார்க்கவில்லையல்லவா?" என்ருள் ஜயந்தி.

"நான் யாரையுமே எதிர்பார்க்கவில்லை!"

ஜயந்தி, ரங்கதுரை இருவருக்குமே 'சிவுக்'கென்றது. அவர்கள் முகத்தோற்றத்தைக் கண்டதும் நீலாவுக்கே ஏன் இப்படிச் சொன்னேம் என்றுதோன்றியது.

"நீலா! என்ருன் ரங்கதுரை சற்றே சமாளித்துக்கொண்டு.

நீலா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நேற்றே நான் உன்னிடம் சொல்லிக் கொண்டு தானே போனேன் இன்று காலையில் வருகிறேன் என்று?''

''ஆமாம்!''

''அப்படியானல்—?''

''ஏதோ பேச்சுக்குச் சொன்னீர்கள் என்று பார்த்தேன். கல்யாணம் பண்ணிக்கொண்டு இன்னும் நாலு நாட்கள்கூட ஆகவில்லை. புது மாப்பிள்ளை நீங்கள்! மாமனர் வீட்டிலே வருகிறவர்களும் போகிறவர்களும், கல்யாணம் விசாரிப்பவர்களும் மாப்பிள்ளையைப் பார்க்க வருவார்கள். அவர்களுக்குக் காட்சிப் பொருளாக நிற்பதற்கே நேரமிராதே. அதோடு புது மனைவி! அதிலும் ஜயந்தியைப் போன்ற பெண்ணுருத்தியைப் பிடித்திருக்கிறீர்கள், அவள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லத்தான் உங்களுக்குப் பொழுதிருக்குமா! இதன் நடுவிலே நேற்று எப்படியோ என்னை நினைவு வைத்துக் கொண்டு வந்தீர்களே; அதுவே பெரிது. இன்றுகூட உங்களை நான் எதிர்பார்ப்பதென்றால் அது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்?—

என்ன ஜயந்தி! நான் சொல்வது சரிதானே?''

ஆஹா! அவள் பேச்சிலே தான் எத்தனை சாமர்த்தியம்! நீலாதானா அவள்?—சற்று முன் எப்படி ரங்க துரையை வரவேற்கப் போகிறேனே என்று கலவர முற்ற நீலாவா இத்தனை சாமர்த்திய மாகப் பேசினாள்! ஆம்! அவள் பேசி முடித்து விட்டாள்! அவ ளுக்கே ஆச்சரியமாயிருந்தது அவள் பேச்சு.

அந்தப் பேச்சின் திறமையைக் கண்டு ரங்கதுரை பிரமித்துப் போய் விட்டான். வசமாக மடக்கி விட்டாள் நீலா அவனை; அவனை மாத்திரம் என்ன! ஜயந்தியையும் கூடத்தான்.

ரங்கதுரை பேசவில்லை.

ஜயந்தி தான் பேசினாள்.

''நீலா! அடேயப்பா! ஒரே போடாகப் போட்டு விட்டாயே! ஜயந்தி ஒரு பெரிய வாயாடி. தொண தொணப்புக்காரி என்று நேரடியாகவே நீ சொல்லியிருக் கலாமே! இப்படிச் சுற்றி வளைத் துப் பேச வேண்டிய அவசியமே யில்லையே!'' என்றாள் அவள்.

''சுற்றி வளைத்துப் பேசவில்லை ஜயந்தி! உண்மையைத் தான் சொன்னேன். கல்லூரி நாட்க ளிலேகூட ஜயந்தி வருகிறாள் என் றால் நாங்கள் எல்லோரும் மூலைக்கு ஒருவராகப் பிய்த்துக் கொள்கிற வழக்கம். இல்லையா ஜயந்தி? நான் சொல்வது தப்பாயிருந்தால் கன்னத்திலே போடு; பட்டுக் கொள்ளுகிறேன்!''

ஏது! நீலாவுக்கு அபாரத் துணிச் சல் அல்லவா வந்து விட்டது? என்ன போடு போடுகிறாள்?

ரங்கதுரை ஜயந்தி இருவருமே திக்கு முக்காடிப் போனார்கள்.

ரங்கதுரை நிதானமாக நீலா வைப் பார்த்தான். அவள் முகம் ஏதோ வெறி பிடித்தவள் போலத் தோற்றமளித்தது அவன் கண் களுக்கு, நீலாவின் கண்கள் அழு தழுது சிவந்து போனவை போலத் தென்பட்டன. அவனுக்கு அவள் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருந்தது. தன் உண்மை நிலையை மறைக்கத் தான் அவள் அத்தனை சாமர்த்தியப் பேச்சு பேசுகிறாள் என்பதை நொடிப் பொழுதில் அறிந்து கொண்டான் அவன். பேச்சை அதே தோரணையில் கொண்டு போனால் அவள் திடீ ரென்று அழுதுவிடக் கூடும். எனவே வேறு வகையில் திருப்பப் பார்த்தான் அவன்.

அவன் வீட்டை விட்டுக் கிளம் பும்போது ஜயந்தியும் கூடக் கிளம்புவாள் என்று அவன் நினைக்கவில்லை. ஜாடைமாடையாக ''ஜயந்தி! இன்றைய 'பார்ட்டி'க்கு நீ இருந்து ஏற்பாடு செய்ய வேண் டாமா? நான் போய்ப் பார்த்து விட்டு விரைவில் வந்து விடுகி றேன்'' என்று சொல்லிப் பார்த் தான்,

ஜயந்தி கேட்கவில்லை, ''நான் இங்கே இருந்து புரட்டப்போகி றது ஒன்றுமில்லை. எல்லாம் அப் பாவே பார்த்துக் கொள்வார். அவ ருக்குத் தெரியாதா என்ன?—நான் உங்களோடு வருவது உங்களுக்கு இஷ்டமில்லை என்றால் சொல்லி விடுங்கள். நான் வரவில்லை'' என்று நிஷ்டூரமாகப் பேசினாள்.

''சிச்சி! நீ தப்பாக எடுத்துக் கொள்ளாதே. உன்னை வரவேண் டாமென்று நான் சொல்லவில் லையே, வேலையிருக்குமே என்று தான் சொன்னேன்'' என்று சமாளித்துக் கொண்டான் ரங்க துரை.

ரங்கதுரைக்கு நீலா அந்தத் தெரு விலே வசிப்பது தெரியாது. கல் லூரியில் இருவரும் ஒன்றாய்ப் படித்தபோதுகூட அவன் அவளைத் தேடி அவள் வீட்டுக்கு வந்த தில்லை. கல்லூரியிலிருந்து கடற் கரைக்கோ, வேறு எங்கேயோ பொழுது போக்கப் போவார்கள்; திரும்புவார்கள். அதுகூட அவள் ஸ்ரீகாந்தனை விரும்புகிறாள் என்று தெரிகிற வரையில் தான். அப் புறம் ரங்கதுரை அவள் நின்ற

இடத்தில்கூட நிற்க முயன்ற தில்லை.

கல்லூரிப் படிப்பு முடிந்து பரீட்சை எழுதியதும் அவர்கள் முற்றிலும் பிரிந்து வெவ்வேறு திசையில் சென்று விட்டார்கள். நீலா கல்யாணம் பண்ணிக்கொண்டாள். ரங்கதுரை மேல் படிப்புப் படிக்க காசி சர்வ கலாசாலைக்குப் போய் விட்டான். அங்கே படித்து முடிந்ததும் அவன் வட இந்தியாவிலேயே ஒரு பெரிய கம்பெனியில் வர்த்தகப் பிரதிநிதியாக அமர்ந்தான்; வட இந்தியாவில் அவன் பல ஊர்களுக்கு வியாபார நிமித்தம் சுற்றுப் பிரயாணம் செய்தான். விரைவிலேயே அவனுக்கு வேலையில் கெட்டிக்காரன் என்று பெயர் வந்தது. உத்தியோகமும் உயர்ந்தது. அந்தக் கம்பெனியின் கிளைக் காரியாலயம் ஒன்றிலே மானேஜர் பதவியும் கிடைத்தது. பிறகு தான் அவன் ஜயந்தியை மணந்து கொண்டான்.

ஜயந்தியை மணப்பதற்குத்தான் அவன் பல ஆண்டுகளுக்குப்பின் தென்னாட்டுக்கு வந்தான். வந்த பிறகு தான் அவன் நீலாவைப் பற்றி அறிந்தான். அதுவும் ஜயந்தியோடு பேசிக்கொண்டிருந்த போது அவனுக்குப் பழைய கல்லூரி நாட்களைப் பற்றிய ஞாபகம் வந்தது. பல நண்பர்களைக் குறித்து இருவரும் பேசினார்கள். இப்போது யார் யார் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூட ஒருவருக்கொருவர் சொல்லித் தெரிந்து கொண்டார்கள். அப்படிப் பேசும் போது தான் ஜயந்தி, நீலாவைப் பற்றிக் குறிப்பிட்டாள். நீலாவைப்பற்றி அவள் குறிப்பிட்டதும் ரங்கதுரைக்குப் பழைய நினைவுகள் வந்தன. அவள் அதே தெருவில் தான் வசிக்கிறாள் என்று அறிந்ததும் அவளைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற ஆவல் உண்டாயிற்று ரங்கதுரைக்கு. அந்த ஆவலை அவன் அடக்கிக்கொள்ளப் பார்த்தான். நீலா ஸ்ரீகாந்தனை மணந்து குழந்தை குட்டிகளுடன் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பாள் என்று எண்ணினான். அந்த எண்ணத்துடன் தன் ஆவலை மோத விடாமல் கேட்டான் அவன் நீலாவைப் பற்றி.

நீலாவின் சோகக் கதையை உருக்கமாக எடுத்துக் கூறினாள் ஜயந்தி.

ரங்கதுரையின் நெஞ்சு விம்மியது. உடனே நீலாவைப் போய்ப் பார்க்கவேண்டும். தன் அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று துடித்தான். இருந்தாலும் அவன் தன் உள்ளத் துடிப்பை ஜயந்தி உணரும்படியாகக் காட்டிக் கொள்ளவில்லை. பழைய பள்ளித் தோழி என்கிற முறையில் நீலாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்றுதான் முதல் நாள் அவளோடு கிளம்பினான்.

நீலாவைச் சந்தித்த பிறகு அவன் உள்ளம் விண்டு வெடித்துத் துகள் துகளாகச் சிதறியே போயிற்று. முதல் சந்திப்பில் விஸ்தாரமாக ஏதும் பேச இருவருக்குமே இயலவில்லை; அதனால் தான் ரங்கதுரை மறு நாள் காலையில் வருவதாக சொல்லிப் பிரிந்தான்.

மறுநாள் ஜயந்தியோடு வர நேர்ந்தது. நீலாவைத் தனியாகச் சந்திக்க முடியவில்லை, நீலாவும் பரபரப்புடன் சாமர்த்தியப் பேச்சு பேசுகிறாள்!

அவள் பேச்சைத் திருப்ப எண்ணி ஏதோ பொருளைத் தேடுபவன் போல சுற்று முற்றும் பார்த்தான் ரங்கதுரை.

சுவரில் ஒரு படம் தென்பட்டது. அதன் அருகே நடந்து அதை உற்றுப் பார்த்தான். கல்லூரியில் மாணவர் மாணவியர் எல்லோரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம். முதல் வரிசையில் பிரின்ஸிபால், புரொபஸர்கள், ஆகியவர்களுடன் மாணவியர் அனைவரும் அமர்ந்திருந்தனர். நீலாவுக்கு ஒரு பக்கத்தில் பிரின்ஸிபால் அமர்ந்திருந்தார். மறு பக்கத்தில் வகுப்பு புரொபஸர் அமர்ந்திருந்தார். பின் வரிசைகளில் மாணவர்கள் ஒழுங்காக நின்றிருந்தனர்.

போட்டோ சங்கக் காரியதரிசிகள் இருவரும் முன்னணியில் தரையில் உட்கார்ந்திருந்தனர். ரங்கதுரை காரியதரிசிகளில் ஒருவன். அவன் உட்கார்ந்திருந்தது நீலாவுக்கும் பிரின்ஸிபாலுக்கும் இடையே இருந்த நிலத்தில்.

அதைப் பார்த்தபடியே ரங்கதுரை பேச்சைத் திருப்பினான்; "நீலா! இந்தப் படத்தை நீ எவ்வளவு ஜாக்கிரதையாகக் கண்ணாடி போட்டு வைத்திருக்கிறாய்! நான் ஒரு படத்தையும் கண்ணாடி போடுகிற வழக்கம் இல்லை. அப்படியே சும்மா போட்டு வைத்திருக்கிறேன்!" என்று பேசினான் அவன்.

ஜயந்தி வந்தாள்; படத்தை உற்றுப் பார்த்தாள். "அட! நீங்கள் நீலாவின் காலடியில் உட்கார்ந்திருக்கிறீர்களே?" என்றாள்.

"நீலாவின் காலடியிலா?... அதை நான் கவனிக்கவில்லை" என்று அசட்டுச் சிரிப்புடன் பதிலளித்தான் ரங்கதுரை.

நீலா கூட அப்போதுதான் படத்தை நிமிர்ந்து பார்த்தாள், அவளுக்கே 'சுருக்'கென்று பட்டது ஜயந்தியின் பேச்சு,

"இந்த ஜயந்தி ஏன் இப்படிப் பேசவேண்டும்!" நீலா தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

நீலாவின் முகம் இருண்டது. கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் உருண்டு கன்னங்களில் ஓடியது. "ஜயந்தி!" என்றாள் அவள் விக்கலும் விம்மலுமாக. மேலே வார்த்தைகள் வரவில்லை. "ஜயந்தி... ஜயந்தி...... என்று விம்முவதோடு நின்று விட்டது நீலாவின் குரலோசை.

ஜயந்தி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தன் கேலிப் பேச்சு நீலாவின் உள்ளத்தை இவ்வளவு பாதிக்கும் என்று அவள் நினைக்கவில்லை. "நீலா! நீலா! உன் மனத்தைப் புண்படுத்தி விட்டேன், வேடிக்கைக்கு ஒரு பேச்சு சொன்னேன். நீ இவ்வளவு துயரப் படுவாய் என்று தெரிந்திருந்தால் சொல்லியே இருக்க மாட்டேன்" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அவள்.

ரங்கதுரைக்கு ஜயந்தியின் பேச்சு சங்கடத்தை உண்டுபண்ணியது. நீலாவின் நிலை தெரியாமல் இவள் ஏன் இப்படிப் பேச வேண்டும்? அவள் வாழ்வை யிழந்து தவிக்கிறாள்! இப்போது தான் புதுவாழ்வு பெற்ற இவள் அவளைக் கேலி பண்ணுகிறாள்! அவளுக்கு என்னமாயிருக்கும் பாவம்.

ரங்கதுரை மெல்ல அந்த இடத்தை விட்டு நடந்தான். மற்றொரு சுவரில் மாட்டியிருந்த வேறொரு படம் அவன் கண்ணில் பட்டது. அந்தப் படத்தைப் பார்த்து அப்படியே நின்று விட்டான் அவன்.

நீலா இதற்குள் சமாளித்துக் கொண்டாள். வந்தவர்கள் எதிரே தன் உணர்ச்சிகளைக் காட்டிக் கொண்டது தன் பிசகுதான் என்று அவள் தன்னையே கண்டித்துக் கொண்டாள். சரேலென்று அந்த இடத்தை விட்டுப்போய் ஒரு போட்டோ ஆல்பத்தையே தூக்கிக்கொண்டு வந்தாள்.

"மிஸ்டர் ரங்கதுரை! நீங்கள் தான் கண்ணாடி போடாமல் படங்களை வைத்திருப்பதாக நினைக்க வேண்டாம். இதோ பாருங்கள் நானும்தான் வைத்திருக்கிறேன். எத்தனை படங்களுக்குத்தான் கண்ணாடி போடமுடியும்? போட்டாலும் மாட்டுவதற்கு இடம் எங்கே? இதோ பாருங்கள், இவ்வளவையும் அப்படியே தான் போட்டு வைத்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ரங்கதுரையின் பக்கம் திரும்பியவள், அவன் சுவரிலிருந்த படத்தின் மீது கவனமாயிருந்ததைக் கண்டாள். பின்புறமாக நின்று கொண்டு ஜயந்தியும் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீலா!" என்றான் ரங்கதுரை.

அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று குழப்பத்துடன் நீலா அவனைப் பார்த்தாள்.

(தொடரும்)

அழியாத ஆசை

சுகி

நண்பர் வீட்டுக்குள் போன சமயம், தாலாட்டுக் கேட்டது.

கண்ணே கருமணியே
கற்கண்டே நீயுறங்கு
தேனே மாங்கனியே
தெவிட்டாத நற்கரும்பே
மானே மரகதமே
மகிழம்பூ பூச்சரமே

குழந்தை எவ்வளவு அருமையான பொருள்; தித்திக்கும் மாங்கனியும், தேனொழுகும் பலாச்சுளையும், திகட்டும் கற்கண்டுக் கட்டியும் வேண்டாம். எல்லாவற்றையும்விட இனிமையானது களிப்பும் ருசியும் தரும் மங்காத உயிர்ப் பொருள், குழந்தை. இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்தேன். தாயாரின் ராக ஆலாபனை, வெகு சுகமாக இருந்தும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. வீட்டுக்குள் நுழைந்த குழந்தையின் தந்தை ஒரு வார்த்தை சொன்னார். தாலாட்டைக் கேட்டும் அழுகை நிறுத்தாத குழந்தை உடனே நிறுத்திற்று. பொருள் பொதிந்த அந்தச் சொல் 'காலணா' என்பதே.

என் நினைவு இடம் பெயர்ந்து பால்ய நினைவுச் சரங்களைத் தொடுத்தது. சின்னஞ் சிறு பிராயத்திலே என் மனசிலே இன்பம் சுரந்த பொருள்கள் அனந்தம். அழகும் இன்பமும் தந்த பட்டியலை நான் சொல்லிச் சென்றால் சிரிப்புக்கு இடமாகலாம். கோலிக் குண்டு—இவற்றில் எத்தனை எத்தனை வண்ணங்கள் வர்ணஜாலங்கள். பம்பரங்கள்-- எவ்வளவு இனிய நாதத்தைச் சுழற்றும் அருமையான பொருள், பித்தான்கள்—முக்கியமாகப் போட்டுக்கொள்ள முடியாதவை, கிட்டிப்புள், கிளிஞ்சல், மயிலிறகு இன்னோரன்ன பயனற்ற பொருள்கள் என்று சொல்லப்படும் செல்வங்கள்மீது எனக்கு எவ்வளவு வாஞ்சை தெரியுமா?

சிறு பிராயத்தில் பிள்ளைகளுக்கு உயிருக்குயிரானது, விளையாட்டுச் சாமான்கள்; பாண்டியாடும் வட்டு, வெறும் ஓட்டாஞ்சல்லி; இது இப்போது தெரியும்; ஆனால் அதுதான் தேவலோகத்துப் பொருள். கரங்காடும் கழற்சிக்காய், பல்லாங்குழிச் சோவி அல்லது செவ்விய பூப்பூக்கும் முருக்க மரத்து நீலநிறமான மணிகள்; குன்றிமணிகள்; சின்னஞ் சிறு பொம்மைகள். இன்னும் எவ்வளவோ அற்புதமான பொருள்கள் மீது உயிர்.

...காலணா கொடுக்கிறேன் கண்மணியே நீயுறங்கு!...

தனக்குச் சொந்தமில்லாத மூன்று சக்கர சைக்கிள், ஓடும் ரெயில், ஒட்டும் வர்ணப் படங்கள், நிலாக்காலம், ஆற்றிலே நீச்சல், சுடச்சுட இருக்கும் பாட்டிக்கடை முறுக்கு, 'பாவிலே செய்த மிட்டாய்' எனக் கூவிவரும் மிட்டாய்க்காரன் பாட்டு, சிறு பந்து, பிள்ளையார் கோவில் சிதர்த் தேங்காய்,......என்னால் மேலே சொல்ல முடியவில்லை. எண்ண எண்ண இன்பம் தரும் இப்பொருள்கள் என் மன வானத்தைவிட்டு எப்படிப் போய் விட்டன? பொருள்கள் மகிழ்ச்சி தராது போனாலும், பழைய நினைவுகள் மட்டற்ற மகிழ்ச்சி தருகின்றன. இத்தகைய மகிழ்ச்சி ஓடைகளும் கிளைநதியாகி ஒன்றாகச் சேர்ந்து ஆனந்த வெள்ளமாக ஆகிவிடுகின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள்.

'காலணா' என்ற சொல்லின் முன்னே மேற்சொன்ன அத்தனை இன்பப் பெருக்கும் வற்றிவிடும். காலணா என்ற பணத்தை விட வேறு எந்தப் பொருளையும் மதிக்காத சிறு பிள்ளையாக இருந்திருக்கிறேன். அழுகிற குழந்தையை என் நண்பர் 'காலணா' என்ற தாரகமந்திரம் சொல்லி வாய் மூடும்படி செய்து தாய்மையின் குரலைக் கூட வென்று விட்டார். பிள்ளைப் பிராயத்தில் ஏற்பட்ட இந்த நாணய மகிழ்ச்சி, என்னை இன்னும் விடவில்லை. வளர் பிறையாகிக் கொண்டிருக்கிறது. என்னோடு பால்ய முதல் தொடங்கி ஒன்றி வளர்ந்த இன்பம் வேறு என்ன? எல்லாம் என்னை விட்டு எப்போதோ போய் விட்டன. இந்த இன்பம் மட்டும் இன்னும் பிசாசுத்தனமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. 'காலணா அப்பா, காலணா' என்று திருத்தமாகச் சொல்லத் தெரியாத காலத்திலேயே, 'அவ்ப்பா கால்ல அன்நா காள்ளளஅன்னா'' என்று எப்படியோ உளறிக்கொட்டிய பிராயத்திலேயே பிடித்து நாணயப் பைத்தியம் என்னிடம் குடிகொண்டது என்பது, வெள்ளிடை மலை. பரிபாஷை, சங்கேதம் அறிந்து என் தந்தையார் காலணாவைக் காட்டி என்னைக் கவர்ந்திருக்கிறார். இதே பாசம் என்னைப் போலவே குழந்தைகள் எல்லோரிடமும் இன்னமும் இருப்பதை எண்ணும் போது.....

தேவாதி தேவர்கள் கடலைக் கடைந்து அமுதம் எடுத்தார்கள் என்று வைத்துக் கொள்வதும் எனக்குக் காலணா கிடைத்தது என்று வைத்துக் கொள்வதும் ஒன்றே. பாட்டி வீட்டுக்குள் போய் ஆறு முறுக்கோ, இல்லை தொண்டர் சந்நிதியில் போய் நாலு மொந்தன் வாழைப் பழமோ, பப்பர் மெண்டோ ஏதோ ஒன்றை வாங்கினாலும் வாங்குவேன். அல்லது அந்தக் காலணா என் உள்ளங் கையில் அடைபட்டு, நிறம் மாறிப் பொன்னிற மாக ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கும். அந்த நாளில் காலணாக் கொண்டு போய்த் தின்பண்டமும் வாங்கி, பாக்கி இரு தம்பிடிகள் கொண்டு வரலாம்.

காலணா! அதை வாங்கும்போது ஏற்படும் ஆனந்தம்!

ஒவ்வொரு தம்பிடிக்கும் இரண்டு ஆரஞ்சு மிட்டாய் ஒரு பூவன் பழமும் வாங்கலாம். காலணா என்பது, என் சிறு பிராயத்தில் இன்றுள்ள ஒரு ரூபாய்க்குச் சமம். 'காலணாவை மாற்றுவதா வேண்டாமா, என்ன பண்டம் வாங்குவது என்ற யோசனையிலே ஒரு நாள் பொழுது போய்விடும். அத்தனை இன்பங்கள் தந்த பொருள் காலணா. பாரதியார் எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா என்று பாடினது கூடக் காலணாவைச் சிறு பிராயத்தில் கைப்பிடித்த எண்ணமாக இருக்கலாமோ என்னமோ?

இன்று பொருள் தருகிற இன்பத்தைவிட, அது தருகிற துன்பங்களே கோடி கோடியாக இருக்கின்றன. துன்பமே தருகின்ற பொருளை இன்பமாகத்தான் மக்கள் நினைக்கிறார்கள். முக்கியமாகச் சிறு குழந்தைகள் அத்தனை பேரும் சந்தோஷம் அடைவதும், பெரியவர்கள் துன்பம் பெறுவதும் பொருள் ஒன்றினால்தான்.' பணத்தின் மதிப்புக் கருதி மகிழ்ச்சி ஏற்படுகிறதா? அன்று! காலணாவின் ஏக சக்கராதிபதி என்ற பெருமை எக்களிப்பு இவையே காலணா தருகின்ற இன்பங்கள்; இன்றும் குழந்தை உலகின் இன்பப் பேடகமாய் இருப்பது காலணா என்பதைப் பார்க்கும்போது......குழந்தைகள் மட்டுமே உலகில் புத்திசாலிகள் என்று தான் சொல்வேன்.

பொருளாதார விற்பன்னர்கள், பணவீக்கத்தின் ஏற்றத்தாழ்வு காட்டிக் காலணாவை அற்ப நாணயம் என்று சொல்வார்கள். அதிலும் யுத்த காலத்தில் நாணயமே கிடையாது. குழந்தைகள் என்றுமே அனுபவிக்க வேண்டிய சந்தோஷத்திற்கு மீனமேஷம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

முழுமனசுடன் அனுபவித்து விடுவார்கள். எனக்குள்ள நாணய மோகத்தில், அது யார் கையிலிருந்தாலும் சந்தோஷம் கொள்வேன். பொருளைச் சேமிப்பவன் என்று எண்ணுதீர்கள். எனக்கும் காலணுவிற்கும் ஆனந்தம் இருந்த காலம் சிறு பிராயம்; அப்பால் காலணுக் கூட என்னைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ள ஆரம்பித்தது. பணத்தைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று என் தாயார் சொல்லுவாள்; இதற்காக ஒரு தம்பிடி, இப்போது அரையணு—விலையுள்ள மண் உண்டியல் வாங்கி எவ்வாறு காசு சேர்ப்பது என்ற முறையைச் சொல்லி வைத்தவள், என் அம்மா. என் கையில் காலணு, சில சமயம் அணுக்கள், நாலணுக்கள் கூட வரும், எல்லாவற்றையும் உண்டியலில் போட்டுப்பணம் சேர்ந்தபிறகு, மொத்தமாக நல்ல சாமான் வாங்கலாம் என்ற யுக்தியைச் சொல்லுவாள். என் கையில் கிடைக்கும் பணம் கூண்டில் அகப்பட்ட புலி. உண்டியல் கலயத்தில் கிடக்கும் பணம் யானை வாய்க் கரும்பு. இப்படிப் பல காலம் எண்ணினேன்.

உண்டியல் பெட்டியைக் கவிழ்த்து காசு எடுக்க முடியுமா?

ஒரு நாள்.

ஆகா அந்த நாள். என் வாழ்விலே புதிய திருப்பம் தந்த நாள். சப்பட்டையான ஓலைத் துரும்பு, ஈர்க்குச்சி இவை கொண்டு உண்டியலைக் கவிழ்த்து, துழாவினுல் நாணயங்கள் கலகல; கல கல. உள்ளே போன நாணயங்கள் வெளியே அடித்துக் கொண்டு வரும் வித்தையை, வெகு லாகவமாகச்செய்ய வேண்டும். பெரிய பெரிய பாங்கியைக் கவிழ்க்கும் திருடர்கள்கூட, உண்டியல் பெட்டியைக் கவிழ்த்து, ஓலைத் துரும்பால் அல்லது சிக்கு வாரியால் காசு எடுக்கமுடியுமா? செந்தமிழும் நாப்பழக்கம், சித்திரமும் கைப்பழக்கம் என்பதோடு இந்த உண்டியல் புரட்டுத்தனத்தையும் ஒரு பழக்கமாகக் கொண்டால் ஒழிய முடியாது என்பது அடியேன் அபிப்பிராயம்.

விடுபட்ட நாணயங்கள், புதிய புதிய பொருளாக விளையாட்டுச் சாமான்களாக என் கையில்வரும். காசு கிடைத்த உடனே விளையாட்டுச் சாமான்கள் வாங்குவதைவிட, அதைச் சிறிது காலம் உண்டியல் கலயத்திற்குள் சிறைப்படுத்திப் பின்னர் விடுதலைக்கு முயற்சி செய்து சாமான்களாக மாற்றினுல், சிறைப்பட்ட சீதாப்பிராட்டியாருக்கு ஏற்பட்ட மதிப்பு ஏற்படும். ஆகப்போக, என்னுல் பணத்தைச் சேகரித்து வைக்கும் வித்தையைச் செய்ய முடியாது என்பது ஐந்து வயசிற்கு முன்னதாக வளைக்க முடியாத கலையாகிவிட்டது. என் கையிலுள்ள காசுகள், கட்டுக் கடங்காத சல்லிக் காட்டுக்காளைகள் போன்று, திமிறிக் கொண்டு போய்விடும். தொட்டிற் பழக்கம் எங்கே போய் விடும் என்பதை நீங்கள் அறிவதால், சுடுகாட்டைப் பற்றி நான் சொல்லவும் வேண்டுமா?

பணத்தை வைத்துச் சேமிக்க வேண்டுமென்ற பாசம் எனக்கு மட்டுமா, என்னைவிட உங்களுக்கு அதிகம் என்பதைத் தெள்ளத் தெளிய அறிவேன். ஒருவகையில் பார்க்கப் போனால் 'நம்மிலே தேசப்பற்று', மொழிப்பற்று இதிலே வேறுபாடு இருக்கும். பணப்பற்று என்பதிலே நாமெல்லோரும் ஓர் குலம்; ஓர் இனம். காரணம், மற்றப் பாசங்கள் நமக்குப் பிடிக்கக் காலதாமதம் ஏற்படுவதைப்போல பணப்பற்று ஏற்படுவதில் காலதாமதம் ஏற்படுவதில்லை, மற்றப் பாசங்கள் பந்தங்கள் நமக்கு ஏற்படுமுன்னதாகவே பணப்பாசம் ஏற்படுகிற காரணத்தால், நியாயமாகக் கொடுக்க வேண்டிய வருமான வரியைக் கூட தேசப்பற்றுள்ளவர்களும் கொடுக்கத் தயங்குகிறார்கள் என்று நம்புகிறேன்.

சிறு பிராயத்தில் ஏற்பட்ட தலையாய மகிழ்ச்சி பணம் சேகரித்தல்; அதைப் பாதுகாத்தல்; பிறருக்கு வட்டிக்குக் கொடுத்தல். ஞானிகள் பணத்தில் ஆசை வைக்கலாம், பேராசை கொள்ளக் கூடாது என்று புத்திமதி சொல்லுகிறார்கள். பணத்தைப் பூட்டி வைக்கும் லோபிகளை அரசாங்கம் வெறுக்கிறது. பணம் புற்றுப் பாம்பன்று; அது சிறகடித்துப் பறக்கும் வானப் பறவை; அது நிமிஷத்திற்கு ஒருமுறை ஆயிரம் சுற்றுகள் சுற்றி வந்தால்தான் நாட்டிலே செல்வம் செழிக்கும் என்று சொல்லுகிறார்கள். உலகிலேயே பயனும் இன்பமும் தருகிற ஒரே பொருள் பணம். ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்தப் பருவத்திலும் இந்தப் பணம் ஒன்றுதான் இன்பமும் பயனும் தருகின்றது, கை நிறையப் பணம் இருக்கும் ஆண் அறிவுடையவன்; பெண்ணோ அழகுடையவள்.

உலகத்தைத் துச்சமாக நினைத்து எந்த மூலை முடுக்கிற்கும் போகலாம்; எந்த வாகனத்தையும் தனக்கு உடமையாக்கலாம், எந்தப் பொருளையும் மனம் சோர்வுற்று அலுப்புக்கொள்ளும்



......சொந்தமில்லாத சைகிளில் சவாரி செய்யும் ஆனந்தம் இருக்கிறதே?...

வரை நாம் அனுபவிக்கலாம். பணத்தை நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்தால்தான் இன்பம் தருமென்று சொன்னால், அது பொய். பணத்தை எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகச் சம்பாதிக்கிறோமோ அத்தனைக்கும் நாம் கெட்டிக்காரன் என்று பெயர். பொழுதுவிடிந்து பொழுது போனால், பிறர் பணம் நமக்கு வரவேண்டும் என்றுதானே எண்ணுகிறோம். இதற்காக எழுதுகிறவர்கள், உழுகிறவர்கள், அழுகிறவர்கள், வியாபாரம் செய்கிறவர்கள் மூட்டை தூக்குகிறவர்கள், மூட்டை அடிக்கிறவர்கள், ஜெயில் வாசம் செய்கிறவர்கள் ஜெயிலைக் காபந்து செய்கிறவர்கள், சூதாடுகிறவர்கள் எல்லோருக்கும் எப்பாடு பட்டாயினும் பணத்தைச் சம்பாதிப்பது மேலும் மேலும் மேலும்...சம்பாதிப்பது என்பதே பிறவியின் பயன் ஆகிவிட்டது. பணமே இன்ப உலகத்தின் திட்டி வாசல். மற்றவர்களைவிடத் தான் தனித்தவன், அறிவாளி, முக்கியஸ்தன் என்ற உணர்ச்சியை நமக்கு ஊட்டுவது பணம். என் கையிலே காலணா இருக்கும்போது எந்தப் பயல் சண்டைக்கு இழுத்தாலும் அவன் மண்ணைக் கவ்வுவான்; உடம்பிலே புதிய தெம்பும்

புதிய ரத்தமும் குமிழிவிடும். பணத்திற்குள்ள பலம், நெஞ்சமூத்தம் ரத்தவோட்டத்திற்கு இல்லை யென்று பொருள். பிரபல பாடகி ஒருத்திக்கு உடல் நலம் குறைந்த போது, "ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் ஒரு சில தலையணைக்கு அடியிலே வைத்துக் கொள்ளுங்கள்" என்று வைத்தியர் ஒருவர் மருந்து சொன்னாராம். என்ன ஆச்சரியம்! மருந்துகள் செய்ய முடியாத வேலையை, ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் செய்து விட்டன. மற்ற இரு ஆசைகள் என்றாவது மறைந்துவிடலாம். ஆனால், பிள்ளைப்பிராயத்தில் ஊன்றிய ஆசை, கப்பும் கவருமாகப் படர்ந்து பிணமாகப் போகும் போதும், வாய் திறக்க வைக்க வைப்பது பணத்தாசை ஒன்று தானே.

மாற்றறியாத பசும்பொன், கற்கண்டுக்கட்டி, திகட்டாத தேன் என்ற அடைமொழியிட்ட குழந்தை ஆசைகூட ஒருசமயம் திகட்டி விட்டன. குழந்தைகள் சில சமயம் தொல்லையின் விளைநிலங்களாய் இருக்கின்றன. பணமோ இன்பத்தின் விளை நிலமாய் என்றுமே இருப்பதால் அதை எண்ண எண்ணக் கிடையாதபோதும் அதை எண்ணுவதற்குக்கூட இனிப்பாய் இருக்கிறது போலும்.

பணமென்ற அட்சயபாத்திரமான இன்பப் பாண்டத்தை, ஞானிகள் வெறுத்தார்கள். பணத்தைத் தொடாதே, நினையாதே, சேர்த்து விடாதே, அது எப்போதும் தொல்லை தருவது என்று சொன்னார்கள். பாவமாக, பழியின் வித்தாக, கொடுமையின் உருவமாக, பாதாளத்தின் பாதையாக நமக்குச் சுட்டிக் காட்டினார்கள். ஆனந்தத்தின் எதிரி என்றும் குறிப்பிட்டார்கள். பணத்தின் அருமையும் பெருமையும் வயசாக ஆகத்தான் நாம் நன்றாக உணருகிறோம்.

சிறுபிராயத்தில் பணத்தின் அருமை தவிர்த்து பணமதிப்பற்ற பொருள்களும் நம்மை பீடித்திருந்தன. சலசலத்தோடும் சிற்றருவி, கலகலக்கும் மலையோட, வாலாட்டும் கரிக்குருவி, தத்தித் திரியும் அணில், வலிப்புக் காட்டும் வானரம், கொத்தித் திரியும் கோழி, சிறகடிக்கும் பச்சைக்கிளி எவையும் நம்மை இன்பத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டும்.

பின்னர் பருவத்தின் பிடியில் சிக்கியபோது, கடற்கரையும், ரயில்வே பிளாட்பாரமும் சினிமாக்கொட்டகையும் கல்லூரி வாழ்வும் கண்கவர் பொருள்களும் பணத்தைத் துச்சமாக எண்ண வைக்கும். வாழ்க்கைத் துணைவர்கள் காணும் இன்ப உலகத்தில் மண்ணும் மலரும் அற்பப் பொருள்களாகத் தோற்றும். ஆனால், வயது ஏற ஏற ஆறும், நிலவும், மேலவானத்து நாடகத் தோற்றமும் கடற்கரையின் 'ஓம்' ஒலியும், கீதமும், கிளுகிளுக்கும் குழந்தைகளும் உண்மையில் கைகொடுப்பனவாய்த் தோற்ற வில்லை. காட்சிப் பொருள்களின் பயன் மறைந்து, வயோதிக உடலுக்கும் உள்ளத்திற்கும் என்றும் மங்கா ஒளியாய், மாறா இளமையுடன் நெஞ்சிலே நித்திய கன்னியாய் இருப்பிடம் கொள்வது பணம் ஒன்றே. மக்கள் மகிழ்ச்சி, இயற்கைத் தேவியின் சௌந்தர்யம், செயற்கையின் இன்பவாரிதிகள் கைகொடுத்து உதவாத கிழப்பருவத்தில் ஊன்றுகோலாய், உடலோடு ஒட்டி வளர்த்த ஒரு பண்பு பணத்தின் பிடிப்பே.' பணம் வாழ்க. நம்மை வாழ்விக்க வந்த அது வாழ்க.

தேவை

கலாவல்லி பத்திரிகை விற்பதற்கு டிபாசிட் கட்டக் கூடிய ஏஜெண்டுகள், தற்பொழுது ஏஜெண்டுகள் இல்லாத எல்லா ஊர்களிலும் தேவை.

மானேஜர்

கலாவல்லி காரியாலயம்

தபால் பெட்டி 1353

12-13 அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை—1

குடையும் குமரியும்

'முரளீ'

குமாரசாமி புறப்பட்டால் கூடவே குடையும் புறப்படும் என்பது அந்த வட்டாரம் முழுவதற்கும் தெரிந்த விஷயம். குடையில்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பவே மாட்டான் குமாரசாமி.

ஒரு நாள் காலையில் அவன் வெளியே புறப்படும்போது அவனுக்கு ஒரு குடைகூடக் கிடைக்கவில்லை. அவன் குடை, அவன் தம்பி குடை, அவன் மகன் குடை, பள்ளிக்கூடம் போகும் அவன் பெண்ணின் குடை, அவன் வீட்டிலே தங்கியுள்ள அவனது மைத்துனன் குடை, எல்லாம் பழுதாய்ப் போயிருந்தன.

எல்லாக் குடைகளையும் எடுத்துப் பரிசோதித்துப் பார்த்தான் குமாரசாமி. ரிபேர் பண்ணுமல் ஒன்றுகூடப் பயன் படாது என்று தெரிந்து கொண்டான்.

குடையில்லாமல் தான் அன்று அவன் வெளியே புறப்படவேண்டும். ஆயினும் அவனுக்கு ஒரு திருப்தி, ஒரு குடைக்குப் பதிலாக ஆறு குடைகளுடன் கிளம்பினுன் அவன், வீட்டிலிருந்த மொத்தம் ஆறு குடைகளையும் தூக்கிக் கொண்டு நேராகக் குடை ரிபேர்க் கடையை நோக்கி நடந்தான் குமாரசாமி.

ஆறு குடைகளையும் ரிபேர் பண்ணிக் கொடுப்பதற்கு ஒரு நாள் தவணையாவது வேண்டும் என்று குடை ரிபேர்க்காரன் சொல்லி விட்டான். எனவே குடையில்லாமல் நடையைக் கட்ட வேண்டி வந்தது குமாரசாமிக்கு.

குமாரசாமிக்கு நடையே சாயவில்லை. ஏதோ ஒரு அவயவமே தன் உடலில் இல்லாதது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு. எப்படியோ மெல்ல நடந்து பஸ் நிற்கும் இடத்திற்கு வந்தான்.

பஸ் வந்ததும் குமாரசாமி மன அமைதியின்றி அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அவன் பக்கத்தில் ஒரு நாகரிக யுவதி, குடை சகிதமாக அமர்ந்திருந்தாள், அவள் குடை குமாரசாமிக்கும் அவளுக்கும் இடையே சாத்தப்பட்டிருந்தது.

குமாரசாமி இறங்க வேண்டிய இடம் வந்ததும் ஞாபக மறதியாக பக்கத்திலிருந்த யுவதியின் குடையைக் கையில் பிடித்துக் கொண்டு இறங்கத் தொடங்கினுன்.

குடைதான் குமாரசாமியுடன் கூடப் பிறந்ததாயிற்றே, அது தானுக அவன் கையில் வந்து ஏறிக் கொண்டது!

அதைப் பார்த்த யுவதி திடுக்கிட்டுப்போய்க் கூச்சலிட்டாள்- "திருடன்! திருடன்!......" என்று

பஸ் கண்டக்டர் குமாரசாமியின் கையைப் பிடித்துக் கொண்டார். குமாரசாமி பஸ்ஸை விட்டு இன்னும் இறங்கவில்லை.

"என்ன ஸார் இது! உங்களைப் போன்ற படித்த மனிதர்களே இந்தக் காரியம் செய்வதென்ருல்...

"படிச்சவராம் படிச்சவரு! ஆளைப் பாருடா ஆளை! இப்படி நீட்டா டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து தான் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டறுன்கள்!"

"போடுடா கழுத்து மேலே ரெண்டு!"

இப்படிப் பல குரல்கள் கேட்டன.

"மன்னிக்க வேண்டும், ஏதோ ஞாபகமறதியாக எடுத்துக்கொண்டேன்......" என்று சொல்ல வேண்டும் என்று குமாரசாமிக்கு எண்ணம், ஆனுல் வார்த்தை வாயை விட்டு வரவில்லை.

குமாரசாமி 'திரு திரு' வென்று விழித்தான். தன் மேல் என்ன

குற்றம் என்றே அவனுக்குப் புலப்படவில்லை. கையிலிருந்த குடைதான் அவனுக்குத் திருட்டுப்பட்டம் கட்டி விட்டது என்று உணர்ந்துகொள்ளவே அவனுக்கு வெகு நேரம் பிடித்தது.

ஒரு பிரயாணி மேலும் கொஞ்சம் துடுக்காகப் பேசினார். "ஏய்! என்னய்யா முழிக்கிறே ஆந்தே மாதிரி? பொம்பளே வச்சிருந்த கொடையே அபேஸ் பண்ணிக்கிட்டு ரொம்ப நாசூக்கா எறங்கப் பாக்கறியே!"

இப்போதுதான் குமாரசாமிக்கு விஷயம் முற்றிலும் விளங்கியது. குடையை யுவதியிடம் சடக்கென்று கொடுத்து விட்டுப் படக்கென்று பஸ்ஸை விட்டு இறங்கினான்.

அவன் முகத்திலே அசடு வழிந்தது. ஆனால் அந்த யுவதியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை. பஸ் கிளம்பிவிட்டது.

"பாருங்க அம்மா! சரியா இருக்கு எடை!"
"அட பேபரை எடுத்து அந்தத் தட்டிலே வையும் ஐயா! எடை சரியான்னு தெரியும்,

குமாரசாமியும் குழப்பத்துடன் காரியாலயத்திற்குப் போனான். மறுநாள் மாலையில் குமாரசாமி ஆபீஸிலிருந்து குடை ரிபேர் செய்யும் கடைக்குப்போய், ரிபேர் ஆன ஆறு குடைகளையும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பலானான்.

பஸ் நிற்குமிடத்தில் அவன் குடைகளும் கையுமாக நின்றிருந்த போது அவனைத் தூக்கி வாரிப் போடும்படியான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

தற்செயலாக அவன் தன் பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். தன்னைப் போல பஸ்ஸுக்காகப் பல பேர் காத்திருந்தார்கள். தெரிந்த முகங்கள், தெரியாத முகங்கள் எல்லாம் இருந்தன, ஆனால் முதல் நாள் தன்னுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த அதே யுவதியும் அங்கே பஸ்ஸுக்காக மற்றவர்களுடன் காத்திருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அவன் முகம் மீண்டும் அசடு வழியத் தொடங்கியது.

அவள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதையும் அவன் கண்டு கொண்டான்.

அவள் அவனையும் அவன் கையிலிருந்த அரைடஜன் குடைகளையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்த போது அவனுக்கே கஷ்டமாயிருந்தது.

அவள் பார்வையில் ஏளனமும் கடுகடுப்பும் தென்பட்டதைக் கண்டான் அவன். அவள் தன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொள்ளாமலிருக்க வேண்டுமே என்று அவன் சிந்தித்துச் சஞ்சல மடையும்படியாக அவள் விட்டுவைக்கவில்லை.

அவன் கண்கள் அவள் பக்கம் அடுத்த தடவை திரும்பியபோது 'பட்'டென்று கேட்டு விட்டாள்;

"என்ன மிஸ்டர்! இன்றைக்கு நல்ல வேட்டைதான் போலிருக்கிறது!"

குமாரசாமியின் கையில் அரைடஜன் குடைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் ஒன்று கூட அவன் முகத்தை அவளிடமிருந்து மறைத்துக் கொள்ள உதவவில்லை!

சீதாவின் உள்ளம்

—புஷ்யன்—

ராமமூர்த்திக்கு அந்தக் கடிதத்தைக் கண்டதும் கோபம் கோபமாக வந்தது. "இந்தப் பெண்களே இப்படித்தான். பிறந்தகம்போனால்கொஞ்சத்தில்திரும்பி வரப் பிரியப்படுவதில்லை," என்று குமுறிக் கொண்டிருந்தான். ரொம்பக் கோபமாகவும், ஆத்திரமாகவும் எழுதி 'உடனே புறப்பட்டு வா' என்று எழுதலாமா என்று யோசித்தான். ஆனால் அடுத்த நிமிஷமே அவ்வளவு கண்டிதமாக எழுதினால் அவனுடைய மாமனார் மாமியார் எல்லாம் என்ன நினைப்பார்கள்? மனைவியைக் கொஞ்ச நாட்கள் பிரிந்திருக்க இப்படித் துடிக்கிறானே என்று ஏளனமாக நினைப்பார்களே என்று தோன்றிற்று. தன் பெருந்தன்மையை அவர்கள் முன் விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. ஆகவே தீவிரமாக யோசித்து அவனுடைய மனைவிக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தான்.

"அன்புள்ள சீதாவுக்கு," என்று எழுதினான். உடனே அவளுடைய கடிதத்தை மீண்டும் ஒரு முறை படித்தான்,

"......அப்பாவும், அம்மாவும் இன்னும் ஒரு மாதமாவது இருந்துவிட்டுப் போகும்படி ரொம்பவும் வற்புறுத்துகிறார்கள், எனக்கும் உடம்பு கொஞ்சம் சரியாயில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஒரு மாதம் மேலும் இருந்துவிட்டு வரவா அல்லது நீங்கள் வந்து அழைத்துப் போகிறீர்களா?...

இதைப் படித்ததும் மீண்டும் கோபம் வந்தது, 'அம்மாவும், அப்பாவும் சொன்னார்களாம். இவளுக்கு இன்னும் இருக்க வேண்டுமென்றால் வெளிப்படையாக எழுதுவதற்கென்ன? அவர்கள் பேரில் ஏன் பழி போடவேண்டும். அப்படி அவர்கள் சொன்னாலும் பேச்சுக்கு சொல்லத்தான் சொல்வார்கள். ஒருவேளை வற்புறுத்தினாலும் 'இல்லை, போகத்தான் வேண்டும்,' என்று தட்டிச் சொல்லிவிட வேண்டாமா? அவ்வளவுகூடச் சொல்ல முடியவில்லையென்றால்...யோசித்தான். சரி என்று கடிதத்தை ஒருவாறு எழுதிமுடித்துவிட்டான்.

"உன் அப்பாவும், அம்மாவும் கேட்டுக் கொண்டபடி இன்னும் ஒரு மாதமோ, இரண்டு மாதமோ இருந்துவிட்டு நிதானமாக வா. அப்படி என்ன அவசரம். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை..."

என்று சுருக்கமாக எழுதி விட்டான். வழக்கமாக எழுதும் காதல் வார்த்தைகளும், அவஸ்தைப்படுவதும் எல்லாம் எழுதவில்லை.

கடிதத்தை மடித்துக் கவரில் போட்டுத் தபாலிலும் சேர்த்து விட்டான். அதைப் போட்டதும் தான் 'அடடா, என்ன முட்டாள் தனமாக எழுதிவிட்டோம். நாம் எல்லா விஷயத்திலும் கண்டிப்பு என்ற பெயராயிற்றே. இப்போது...' என்று நினைத்தான்.

"ம், ஆயிற்று. பார்க்கலாம் ஒரு தடவை...ஒரு மாதம் கழித்து வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்," என்று சமாதானப் படுத்திக் கொண்டான்.

2

ராமமூர்த்திக்கு விவாகமாகி இரண்டு வருடங்களான போதிலும், அவன் சீதாவுடன் குடித்தனம் ஆரம்பித்து எட்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன. இருவரும் ஆனந்தமாகக் காலம் கழித்தனர், ராமமூர்த்தி சீதாவை வெகு அன்புடன் நேசித்தான். அவளுக்கு எவ்வித வருத்தமும் தோன்றாமல் பார்த்துக் கொண்டான். அவள் விரும்பியதையெல்லாம் வாங்கித் தந்தான். அவளை சினிமாவுக்கும், பீச்சுக்கும் அழைத்துச் சென்று உல்லாசமாகக் குடும்பத்தை நடத்திவந்தான். சீதாவும் தன் கணவன் மேல் முழு அன்பையும் சொரிந்தாள். அவன் எள் என்பதற்குமுன் அவள் எண்ணெயாக இருந்தாள். ராமமூர்த்தி அவளை அதை ஏன் செய்யவில்லை, ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்கும்படி ஒன்றையும் விடவில்லை.

ஒரே ஆனந்த ஸ்வர்க்கத்தில் அவர்கள் இருவரும் வாழ்ந்தார்கள்.

ராமமூர்த்தி எல்லா விஷயங்களிலுமே கண்டிப்புப் பேர்வழி. அதாவது எதையும் திட்டப்படி செய்பவன். ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டும் என்று நினைத்து விட்டானானால் அதை எப்படியும் செய்தே தீருவான். பிரம்மாவே வந்தாலும் கூட அவனைத் தடுக்க முடியாது. எதை நினைத்தாலும், செய்வது என்று ஒரு தடவை தீர்மானித்துவிட்டால், அதன்படி செய்து முடித்தே தீரவேண்டுமென்ற கொள்கையுடையவன். உதாரணமாக, அன்று ஒரு நாள் சாயந்தரம் முதல் ஆட்டத்திற்கு சினிமா போவதென்று தீர்மானமாகியிருந்தது. அன்று ஆபீஸில் ஏகப்பட்ட வேலை. அதைக் கண்டதும் அவனுக்கு மலைப்பாய்ப் போய் விட்டது. ஆனாலும் தேற்றிக் கொண்டு, அசுர வேகத்தில் வேலையில் முனைந்து அதையெல்லாவற்றையும் சீக்கிரம் முடித்துவிட்டான். சாயந்தரம் வீட்டுக்கு வந்ததும் மழை பிடித்துக்கொண்டு விட்டது.

"இன்னொரு நாள் போகலாமே" என்றாள் சீதா.

"சே, சே...அதெல்லாம் கூடாது. சினிமாவுக்குப் போவது என்று தீர்மானமாகிவிட்டது. போகவேண்டியதுதான். குடையை எடுத்துக்கொள். பஸ் ஸ்டாண்டுக்குப் போய் பஸ்ஸில் போகலாம்," என்று புறப்பட்டு விட்டான் சகதர்மிணியுடன். சினிமாவில் கூட்டமேயில்லை.

"பார்த்தாயா, மழை வந்ததும் சௌகரியமாய்ப் போயிற்று. சினிமாவில் கூட்டமில்லாதது நல்லதாய்ப் போயிற்று, தாராளமாகப் பேசிக்கொண்டு சினிமா பார்க்கலாம்..." என்றான்.

அவனுடைய கண்டிப்புகளிலும் திட்டங்களிலும் அவள் ரொம்பவும் பெருமை கொண்டாள். எவ்வளவு உயரிய நோக்கமுள்ளவன் தன் கணவன், எவ்வளவு நல்ல கணவனைப் பெற்றோம் என்று மகிழ்ந்தாள்.

அன்று அவளுடைய தகப்பனாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அவளுடைய அக்கா ஊரிலிருந்து வந்திருப்பதாகவும், சீதாவைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுவதாகவும், அவர்களுக்கும் அவ

ளைப் பார்க்க ஆவலாயிருப்பதால் வந்து கொஞ்ச நாட்கள் இருந்து விட்டுப் போகும்படியும் எழுதியிருந்தார். சாயந்தரம் ராமமூர்த்தி ஆபீஸிலிருந்து வந்ததும் அவனிடம் அந்தக் கடிதத்தைக் காட்டினாள். அவன் படித்து முடித்ததும் என்ன சொல்லப் போகிறான் என்று ஆவலுடன் அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் சீதா. நிதானமாக அவன் படித்துவிட்டு, 'உம், போய்விட்டு வா,'' என்றான்.

''எப்போது போவது? நீங்கள் கொண்டுபோய் விடுகிறீர்களா, அல்லது அப்பாவை வந்து அழைத்துப்போகச் சொல்லி எழுதட்டுமா?'' என்று கேட்டாள் சீதா,

''எனக்கு இப்போது லீவு கிடைக்காது. உன் அப்பாவையே வந்து அழைத்துப்போகச் சொல்.''

சீதாவின் தகப்பனார் அவளை அழைத்துப் போக வந்திருந்தார். அன்று தான் அழைத்துப் போகப்போகிறார்.

அவள் புறப்படுமுன் ராமமூர்த்தி சீதாவிடம் எப்போது திரும்பி வரப் போகிறதாக உத்தேசம்?'' என்று கேட்டான்.

''எத்தனை நாட்கள் இருந்து விட்டுவரச் சொல்கிறீர்கள்?'' என்று பதிலுக்குக் கேட்டாள் சீதா.

''உம்...இரண்டு வாரம் இருந்து விட்டு வாயேன்,'' என்றான்.

''அவ்வளவு சீக்கிரமாகவா? ஏழெட்டு மாதம் கழித்து இப்போது தான் போகிறேன். அவ்வளவு சீக்கிரம் வர முடியுமா? ஒரு மாசமாவது இருக்கவேண்டாமா?'' என்றாள் சீதா.

''சரி...ஒரு மாதம் தான் இருந்து விட்டு வா. ஆமாம், இப்போதே சொல்லி விட்டேன். ஒரு மாதம் ஆனதும் நான் இரண்டு நாள் லீவு எடுத்துக் கொண்டு வருகிறேன். புறப்படத் தயாராய் இருக்கவேண்டும். தெரியுமோல்லியோ...என் குணம் தான் தெரியுமே, எதுவும் திட்டப்படி நடக்க வேண்டுமென்று.''

''ஓ......ஒரு மாசம் ஆனதும் வந்து அழைத்துப் போங்கள்,'' என்றாள்.

''ஆமாம், வந்து விடுகிறேன்...... உம், சீதா...உன்னைப் பிரிந்து எப்படி ஒரு மாதம்—முப்பது நாட்கள்—இருக்கப் போகிறேனோ...... என்னமோ லேசாக அனுப்பச் சம்மதித்து விட்டேன். இப்போது பிரியும் நேரம் வரும்போதுதான் தெரிகிறது......''

''எனக்கு மட்டும்......''

''சரிதான்......வண்டிக்கு நாழியாய் விட்டது, புறப்படு,'' என்றான் ராமமூர்த்தி.

3

ராமமூர்த்திக்கு சீதா இல்லாதது உலகமே ஒரே சூன்யமயமாய்ப் போய் விட்டது போல் தோன்றிற்று. ஒன்றுமே பிடிக்கவில்லை. ஹோட்டலில் சாப்பிடும்போது அவளுடைய அன்புக் கரங்களால் வட்டிக்கப்பட்டதை அவன் சாப்பிடும்போது அவள் பரிவோடு

வக்கீல்: என்னப்பா! கேஸைப் பார்த்தா நியாயம் உன் பக்கம் இல்லே போலிருக்கே..........

கட்சிக்காரர்; என்னுங்க எசமான்! நியாயம் எம் பக்கம் இருந்தா உங்களை எதுக்குங்க தேடியாறேன்!

சமையலறைக் கதவினருகில் நின்று பார்த்துக் கொண்டு நிற்கும் காட்சி வந்து தோன்றும். வேண்டா வெறுப்பாக ஹோட்டல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுவான். காலையில் குளிக்கும்போது அவள் அவனுக்குத் தயாராகத் துண்டும், சோப்பும் வைத்து, வெந்நீரை விளாவி வைக்கும் வழக்கம் ஞாபகத்துக்கு வந்து விடும். மாலையில் ஆபீஸிலிருந்து சீக்கிரம் வீடு வரவே தோன்றாது. வீட்டில் யார் இருக்கிறார்கள் அவனை வரவேற்க? ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு ஒரே யடியாக இரவு படுக்கத்தான் வீடு திரும்புவான். படுத்தால் தூக்கம் வராமல் மிகவும் கஷ்டப் படுவான்.

முதல் ஒரு வாரம் வெகுவாக சிரமப்பட்டான். எப்போதும் அவன் சீதா ஞாபகமாக இருந்தான். இரண்டு நாளைக்கு ஒரு கடிதம் எழுதி வந்தான். அவளும் 'உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள், வெந்நீரில் குளியுங்கள், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுங்கள்,' என்று எழுதி அவன் சௌக்கியத்தைப்பற்றி அக்கறை காட்டி வந்தாள்.

சீதா புக்ககம் போய் இருபது நாட்கள் ஆகி விட்டன. இன்னும்

பத்து நாள் தான் இருக்கிறது. அவள் திரும்பி வர. அவள் திரும்பி வரும் நாட்கள் நெருங்க, நெருங்க அவனுக்கு ஒரு நிமிடம் போவது, ஒரு யுகமாக இருந்தது. அந்தப் பிரிவு வேதனை மகா கொடியதாக இருந்தது. 'அப்பா, இன்னும் பத்து நாட்களா, ஒன்பது நாட்களா?'' என்று எண்ணிக்கொண்டு பெரு மூச்சு விட்டு வந்தான்.



இன்னும் ஐந்து நாட்கள் தான் இருந்தன, அவர்களின் திட்டப்படி சீதாவை அழைத்து வருவதற்கு. அவன் அன்றே ஆபீஸுக்குப் போனதும் லீவு எழுதி வைத்து விடவேண்டும் என்று தீர்மானித்திருந்தான், காலையில் எழுந்தவுடனே. ஆனால் ஆபீஸில் மேஜை மேல் அவனை வரவேற்ற கடிதத்தைக் கண்டதும் அவனுக்குக் கோபம், கோபமாக வந்தது. ''இன்னும் ஒரு மாதமா,'' என்று பெரு மூச்சு விட்டான். தான் போட்ட திட்டம் எல்லாம் தவிடு பொடியாகி விட்டதைக் குறித்து மிகவும் வருத்தப்பட்டான். அவள் மறுபடி இங்கு வந்ததும் அப்போது தன் ஆத்திரத்தைக் கொட்டி விடுவது என்று பல்லைக் கடித்துக் கொண்டான். 'என் குணம் தெரிந்தும் மேலும் ஒரு மாதம் இருக்கட்டுமா என்று கேட்டாளே. அதன் பலனை அனுபவிக்கட்டும்' என்று அவளுக்கு இனி கடிதமே போடுவதில்லை என்று தீர்மானித்தான். அதன் பிரகாரமே அவள் எழுதிய இரண்டு கடிதங்களுக்குப் பதிலே போடவில்லை. சீதா ரொம்பவும் வருத்தப்பட்டு அவன் மனத்தைக் கரைக்கும்படி மூன்றாவது கடிதம் எழுதினாள். அதைக் கண்டதும் அவன் கலங்கி விட்டான். 'பாவம்,சிறிசு. ஆசை ஏற்பட்டு விட்டது, அப்பா, அம்மாவுடன் இன்னும் கொஞ்ச நாள் இருக்க. பெண்தானே. அந்தப் புத்தி எங்கே போகும்,'' என்று இரக்கம் கொண்டான். ஆனால் அடுத்த கணம் ''நான் ஒன்று எண்ணினால் அதன்படி நடக்க வேண்டுமென்று நினைப்பவன். அதை அவள் தெரிந்தும் என் தீர்மானத்தை உடைத்து விட்டாளே அவள். அதன் விளைவைத் தெரிந்து கொள்ளட்டும்,'' என்று கறுவிக் கொண்டான்.

எனினும் சாதாரணமாக ஒரு கடிதம் மட்டும் எழுதிவிடுவது என்று நினைத்து ''எனக்கு இங்கு வேலை அதிகம். பதில் எழுத முடியவில்லை. வேறு ஒன்றும் இல்லை,'' என்று எழுதினான்.

சரியாக இரண்டாவது கெடுவான இரண்டாவது மாதம் முடியப் பத்து நாட்கள் இருக்கும் போதே இந்தத் தடவையும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இன்னும் கொஞ்ச நாட்கள் இருக்க முஸ்தீபு செய்யப் போகிறாள் என்று, ''நான் இன்னும் ஒரு வாரத்தில் அங்கு வருகிறேன். புறப்படத் தயாராக இருக்கவும்,'' என்று எழுதி விட்டான். அவளும் புறப்பட்டு வரத் தயாராக இருப்பதாக எழுதி யிருந்தாள்.

4

மாமனார் வீட்டிற்குப் போன ராமமூர்த்தி ரொம்பவும் கலகலப்பாகவே இருந்தான். மைத்துனர், மாமனார் எல்லோரிடமும்

தன் கோபத்தையெல்லாம் காட்டக் கூடாதென்பது அவனுடைய கொள்கை. ஆனால் சீதாவைத் தனிமையில் கண்ட போதெல்லாம் முகத்தை 'உர்' ரென்று தூக்கி வைத்துக்கொண்டான். சீதாவும் அவனுடைய கோபத்துக்குக் காரணத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டு, அதைச் சட்டை செய்யாதவள் போல் இருந்தாள்.

அவன் தீர்மானித்தபடியே அன்று காலை சீதாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ரயில் வண்டி ஸ்டேஷனை விட்டு நகரும் வரை ஒன்றும் பேசவில்லை.

ரயில் வண்டி ஸ்டேஷன் எல்லையைத் தாண்டியதும் சீதா அவனைப் பார்த்து, "ரொம்பவும் இளைத்து விட்டீர்களே," என்று கேட்டாள், வீட்டிலேயே இதைக் கவனித்தவள் அவனை விசாரிக்க நினைத்தாள். ஆனால் அவன் 'உர்' ரென்று இருப்பதைக் கண்டதும் கேட்கவில்லை. அந்தச் சமயத்தில் கேட்டால் அவன் கோபத்தில் எரிந்து விழுவான்; பார்ப்பவர்களுக்கு ரஸாபாஸமாய் விடும் என்று அவளுக்குப் பயம்.

இப்போது வண்டியில் அவள் கேட்டதும், வெளியே வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தவன்," "ஆமாம், ரொம்ப அக்கறையாக விசாரிக்கிறாயாக்கும் இவ்வளவு நிதானமாக," என்றான்.

"ஏன், இப்படி எரிந்து விழுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இல்லாவிட்டால் கொஞ்சச் சொல்கிறாயாக்கும்......"

அவன் அவளைப் பார்த்து, "ஏன், இந்தத் தடவை இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போகும்படி உன் அப்பா, அம்மா கேட்கவில்லையா?" என்று கேட்டான் ஏளனமாக.

"நீங்கள் தான் முன்னாடியே வந்து அழைத்துப் போவதாக எழுதி விட்டீர்களே..."

"பாவம், இல்லாவிட்டால் இன்னும் ஒருமாதம் இருக்கலாம் என்று இருந்தாயாக்கும்," என்று குத்தலாகச் சொன்னான்.

"நான் ஏன் இருக்கிறேன்?" என்றாள் சீதா. பிறகு அவள்," ஆமாம், நீங்கள் என்னை முதலில் ஒரு மாதம் கழிந்ததும் வந்து விடவேண்டுமென்று கண்டிப்பாகச் சொன்னீர்களே. பின்னால் ஏன் இன்னும் ஒரு மாதம் இருந்து விட்டு வர ஒப்புக் கொண்டீர்கள்? நீங்கள் ரொம்பவும் கண்டிப்புப் பேர்வழியாயிற்றே," என்று கேட்டாள்.

"என் கண்டிப்பு தெரிந்திருந்தும் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு, 'இருக்கட்டுமா,' என்று எழுதினால் நான் வேறெப்படிப் பதில் எழுதுவதாம்?" என்றான் ராமமூர்த்தி.

"நான் ஒன்றும் நீங்கள் வைத்த கெடுவுக்கு மேல் இருக்க ஆசைப்படவில்லை."

"பின் உன் கடிதத்திற்கு என்ன அர்த்தம்? உன் அப்பா, அம்மா, இருக்கச் சொன்னார்கள் என்றால் என்ன அர்த்தம். அவர்கள் சொன்னார்களோ, நீயே உன் ஆசையில் எழுதினாயோ......"

சீதா இதைக்கேட்டதும் வெகுண்டாள். "நான் ஒன்றும் அப்படி மானம் கெட்டுப்போய் விடவில்லை. பிறந்தகமானால் எப்படி வேண்டுமானாலும் மனம் போய் விடுமா என்ன?" என்றாள்.

ராமமூர்த்தி திகைத்து விட்டான். இருந்தாலும் பிடி தளராமல் "பின் ஏன் நீ உன் அப்பாவிடம் சொல்லி உடனே புறப்பட்டிருக்கக் கூடாது என் திட்டப்படி?" என்று கேட்டான்.

"நான் எல்லாம் என் அப்பாவிடமும், அம்மாவிடமும் சொல்லத்தான் சொன்னேன். ஒரு மாதம் ஆனதும் புறப்பட்டு வரும்படி சொல்லியிருக்கிறீர்கள் என்று. ஆனால் அம்மா தான் 'எல்லாம் அப்படித் தான் சொல்வார். நாங்கள் சொன்னோம் என்று கடிதம் எழுது. ஒப்புக்கொள்வார். அப்படி இல்லையென்றால் புறப்பட்டுப் போனால் போகிறது; அதனால் என்ன?" என்றாள். சரி என்று

நீங்கள் உங்கள் திட்டத்திலிருந்து மாற மாட்டீர்கள் என்று நினைத்து எழுதினேன். ஆனால் நீங்கள் சம் மதித்து விட்டீர்கள். அதைக் கண் டதும் ஆச்சரியமாயிருந்தது......''

ராமமூர்த்திக்கு அதைக் கேட்ட தும் ஒன்றும் புரியவில்லை தன் பக்கமே தவறு என்று எண்ணிப் பிரமித்தான். ''அது சரி......நடந் தது நடந்து விட்டது. ஆனால் உண் மையாகச் சொல்...பிறந்தகத்தில் இன்னும் கொஞ்ச நாள் இருக்க ஆசைதானே...'' என்று கேட் டான் ராமமூர்த்தி.

''ஒரு மாதம் ஆனதும் உங்கள் திட்டப்படி வந்து விடத்தான் நான் துடித்தேன். ஒரு மாதம் இருந்தாயிற்று. அதற்கு மேல் பிறந்தகத்தில் என்ன இருக்கிறது? நீங்கள் 'முடியாது' என்று கூறி வந்து அழைத்துக் கொண்டு போவீர்கள் என்று தான் நினைத் தேன். ஆனால் உங்கள் கடிதத் தைக் கண்டதும் வருத்தமாகத் தான் இருந்தது. நீங்களே இருந்து விட்டு வரும்படி எழுதிய பிறகு நான் என்ன செய்வது? அதென் னமோ முதலில் வந்த ஒரு மாதம் நிம்மதியாகத் தான் இருந்தேன். அப்புறம் ரொம்பக் கஷ்டமாக இருந்தது. உங்கள் உடம்பைப் பற்றியே கவலையாக இருந்தது. இருப்பே கொள்ளவில்லை. நீங்கள் வேறு கடிதம்கூடச் சரியாக எழுத வில்லையா......?''

ராமமூர்த்தி அவளையே பார்த் தான். அவள் முகத்தில் தோன்றிய அமைதி, அழகு எல்லாம் அவனைப் பரவசமூட்டின. ''நீ ஒரு வார்த்தை 'வந்து அழைத்துப் போங்கள்'— என்று எழுதியிருந்தால்?'' என் ருன்.

''நீங்கள் ஒரு வார்த்தை உங்கள் திட்டப்படி, 'உடனே புறப்பட்டு வரவேண்டும்' என்று எழுதியிருந் தால்?'' என்ருள் சீதா.

''மகா கள்ளி நீ!'' என்ருன் ராமமூர்த்தி.

சீதா அவனை ஒய்யாரமாகப் பார்த்தாள். வெளியில் வானத் திலே ரயிலுடன் ஓடி வந்து கொண்டிருந்த வெண்ணிலா அவர் களைக் கண்டு புன்னகை பூத்தது!

க லா வ ல் லி

—:: சிறந்த மாத வெளியீடு ::—

சந்தா விபரம்.		ரூ.	அ.	பை.
ஒரு வருடத்திற்கு	...	3	0	0
ஆறு மாதங்களுக்கு	...	1	8	0
தனிப்பிரதி ஒன்றுக்கு	...	0	4	0

மானேஜர்,

கலாவல்லி காரியாலயம்

12–13 அங்கப்ப நாயக் தெரு.

தபால் பெட்டி, நெ, 1353

சென்னை—1.

குறள் வளர்ப்போம்!

தமிழினத்தின் தலைசிறந்த இலக்கியமாய்த் துலங்கும் திருக்குறளில் சமூக வளர்ச்சிக்கு அச்சாணிபோன்ற பல உண்மைகள் பொதிந்திருக்கின்றன. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழினத்தின் வாழ்வை இலக்கியமாகக் கண்டவர் வள்ளுவரே. உலகியல் உண்மைகளை எடுத்துக் கூறும் ஒரு பொதுவான அறநூல் எதுவென்றால் அது திருக்குறளென்பது அறிஞர்கள் யாவரினதும் ஒத்த முடிவாகும்.

மனித வாழ்வையும் அரசியல் தத்துவங்களையும் தெளிவாக எடுத்துக்காட்டும் இந்நூல் தமிழகத்துக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே பொதுவாக நின்று நீதி வழங்குகிறது. ஆனால் அந்த அரசியல் ஞானம் இன்று எங்கோ ஒதுக்கப்பட்டு அணுகுண்டுக்கு அடிபணியும் நிலை ஏற்பட்டிருக்கிறது. காலனையும் மிஞ்சும் கொலைக் கருவிகளும் மனித நீதிக்குப் புறம்பான தந்திரோபாயங்களும் தாண்டவமாடும் இந்த நாளில் திருக்குறளில் அரசியல் கூறும் அதிகாரத்தை நாம் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அதனிடத்துள்ள ஒவ்வொரு குறட்பாவும் உண்மையை விளக்கி உள்ளத்திலே உண்மையொளி பிறக்கச் செய்யுமென்பது திண்ணம். அந்த அஹிம்சை அரசியல் ஒன்றைக் கடைப்பிடிப்பதனால் மட்டுமே அறிவுப் பாதையை நோக்கிச் செல்லும் இன்றைய உலகைத் தடுத்து நிறுத்த முடியும்.

வள்ளுவர், வாழும் வகையைக் குறள் இலக்கியமாக வகுத்தவர். காட்டுக்குச் சென்று கண்ணை மூடிக் கடுந் தவமிருந்து கந்த மூல பலாதிகளையுண்டு மனைவி மக்களை மறக்கும்படி அவர் கூறவில்லை. இல்லற வழி நின்று நல்லறம் புரியும் மார்க்கத்தையே குறள் நெறி போதிக்கிறது.

குறளின் இத்தகைய சிறப்புக்களையெல்லாம் எண்ணும்போது அந்த இலக்கியக் கருவூலத்தைத் தனதாகக்கொண்ட தமிழனின் இன்றைய நிலையை எண்ணி வெட்கப்படவேண்டியிருக்கிறது. உள்ளத்திலே வேதனை பொங்கி உணர்ச்சிகளை எழுப்புகிறது. தமிழ் மகனே! உனது நிலையைச் சிந்தித்துப் பார். திருக்குறளாம் தெப்பத்தைத் துணைக்கொண்டு மீண்டும் சீரிய வாழ்வைச் செப்பனிடத் திரண்டெழுங்க ளென்று தமிழ்ப் பெருமக்களை அழைக்கின்றேன். வாழ்க குறள் நெறி, வளர்க தமிழகம்!

[யாழ்ப்பாணத்தில் சென்ற ஜூன் 6வ நடந்த ஆனந்தன் திருக்குறள் போட்டியில் நமது ஏஜண்டும், பிரபல புத்தக, பத்திரிகை விற்பனையாளருமாகிய திரு. த. தம்பித்துரை அவர்களின் குமாரன் திரு. த. துரைராசா அவர்கள் முதற் பரிசாக தங்கப் பதக்கம் பெற்றார். அவர் நிகழ்த்திய விரிவுரையின் சுருக்கம் தான் மேலே தரப்பட்டுள்ளது.]

"சுழல்"

எஸ்.பி.ஹர்ஷன்

காரியாலயத்தை விட்டுக் கிளம்பும் போது கோபத்தை மடியில் கட்டிக் கொண்டு வந்து வீட்டை அடைந்ததும் அதை வெளியே அவிழ்த்து விட்டான் சுந்தரம்.

"சுசீலா! காலம்பர சாம்பசிவம் வீட்டுக்குப் போயிருந்தாயாமே!!"

"உங்களுக்கு யார் சொன்னது?"

"ஏய் விளையாடாதே. கேட்ட கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்லு. நீ போயிருந்தாயா?"

"ஆமாம், போயிருந்தேன்...... ஆனால், உங்களுடைய மதிப்புக்குப் பங்கம் வரும்படியாக எதுவும் செய்யவில்லை. இருந்திருந்து இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் எனக்கு அந்தச் சபலம் ஏற்படுமா என்ன?"

"அதெல்லாம் எனக்கு வேண்டாம். அங்கே போகவேண்டும் என்று நீ நினைத்ததாகத் தெரிந்தால் கூட உன்னுடைய பந்தத்தை அறுத்துக் கொள்வேன் என்று எத்தனை தரம் சொல்லி இருக்கிறேன்? இப்போது துணிச்சலோடு அங்கே போனதும் அல்லாமல் சப்பைக் கட்டு வேறயாக்கும்......"

சுசீலாவுக்கு 'வெட வெட' வென்று உடம்பு நடுங்கிற்று. அவள் மெள்ளக் கெஞ்சினாள். "போன இடத்தில் எவ்வளவோ நடந்திருக்கிறது. உங்களுக்குச் சாவகாசமாக எல்லாவற்றையும் சொல்கிறேன். முதலில் நீங்கள் ஆபீஸ் உடையைக் கழட்டி விட்டு, காபியைக் குடியுங்களேன்."

சுந்தரம் கோபத்தின் நிழல் போல, "அட சட், உன் காபியும் நீயும், இதோ பார். என்னைப்பற்றி உனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் இப்படிச் செய்திருக்கிறாய். எந்தத் தைரியத்தோடு அங்கே போனாயோ அதே தைரியத்தோடு மறுபடியும் போய் அங்கேயே இருந்து கொள்...உன் வரையில் நான் செத்தவன்......"

'வீல்' என்று அலறினாள் அவள். கண்களில் நீர் சொரிய "அப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் வார்த்தையே என்னைச் சித்திரவதை செய்யும்போது நான் அதை எப்படிச் சகித்துக் கொள்வேன்?"

"மாய்மாலம் பண்ணினால் எதுவும் பலன் இல்லை. நான் இப்போது வெளியில் போகிறேன்...திரும்பி வரும்போது நீ இங்கே இருந்தால் உன் எதிரிலேயே தூக்குப் போட்டுக் கொள்வேன்......மானம் போய் இருப்பதை விடத் தொலைந்து போவது நல்லது......"

கோபம் வந்து விட்டால், இன்னது தான் பேசலாம் என்ற நியதி அவனுக்குக் கிடையாது.

சுசீலா தலை நிமிர்ந்த போது அவன் அங்கே இல்லை. சாலையில் செருப்பு உராயும் ஓசை தான் கேட்டது.

பாலை வனத்திலிருந்து சரளைக் கற்கள், மணல் முதலியன படிந்து படிவுப் பாறைகள் தோன்றுவது போல சுந்தரத்தின் மனதில், சாம்பசிவய்யரிடம் அளவுக்கு மீறிய வெறுப்புப் படிந்திருந்தது.

அது ஒரு பெரிய கதை!

சுழலில் சிக்கிக்கொள்ளும் பொருள், இந்தத் திசையில் தான் சுற்றும் என்பது கிடையாது. சுழலின் வேகத்தோடு சுழன்று கொண்டே இருக்கும். இருந்தாற் போல இருந்து விலகி நீரோட்டத்தோடு செல்லத் துவங்கும். அல்லது அடியிலே சென்றுவிடும்......

வாழ்க்கை வெள்ளத்தில் சந்தர்ப்பம் ஒரு சுழல். அதில் சிக்கிக் கொள்ளும் மனிதர்கள் இப்படித் தான் சுழல்வார்கள் என்பது கிடையாது.

சுந்தரத்துக்குச் சாம்பசிவய்யரின் அறிமுகம் கிடைத்ததற்கு இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் தான் காரணமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பச் சுழல் அவர்களிருவரையும் எப்படி எப்படியோ சுழற்றிச் சென்று கடைசியில், சாம்பசிவம் தன் பெண்ணை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கும் அளவுக்கு அடித்துக் கொண்டு போயிற்று.

சாம்பசிவய்யர் நல்ல பணம் படைத்தவர். ஒரு பெரிய கம்பெனிக்குப் பொறுப்பாளியும், முதலாளியும் கூட...சந்தான சம்பத்தைப் பொறுத்த மட்டில் ஒரே ஒரு பெண்ணோடு இருப்திப்பட வேண்டி இருந்த காரணத்தால், அவர் அவள் திருமணத்தைப் பற்றி ஒரு விதத் திட்டம் போட்டிருந்தார். பணம் என்றால் எங்கே என்று கேட்கும் ஒரு ஏழைப் பையனுக்கு அவளைக் கட்டிப் போடவேண்டும். அவனைத் தன் வீட்டோடு வைத்துக் கொள்ளலாம். நன்றியறிதலோடு தன்னுடைய நன்மைக்காகப் பாடுபடுவான் என்று எண்ணினார் அவர்.

அவர் வரையில் சுந்தரத்தை வெறும் கிள்ளுக்கீரையாக எண்ணி இருந்தார். முதலில் அவனிடம் தன் திட்டத்தைச் சொல்லாமல், பெண்ணை மணக்கச் சம்மதிக்க வைத்தார். கல்யாணம் நடந்தது. தனிக் குடித்தனத்தைப் பற்றிய பேச்சை மருமகன் எடுக்கும் போதெல்லாம் வேறு திசையில் திருப்பி மெள்ள மெள்ள தன் விருப்பத்தை அவன் உணரச் செய்தார்.

கற்கண்டு இட்டுக் காய்ச்சிய நல்ல பாலாக இருந்தாலும், சாப்பிடக் கூடாத இடத்தில் உட்கார்ந்து அதைக் குடித்தால் அதன் ருசி குறையத்தான் செய்கிறது. சுந்தரத்துக்குத் தான் இருக்கக் கூடாத இடத்தில் இருந்து கொண்டு அநுபவிக்கும் சுக வாழ்வு கசந்தது.

அவன், மாமனாரை மீறிக் கொண்டு பிய்த்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டான். சுசீலா அவனோடு கிளம்பத் தயாரானாள்.

சாம்பசிவய்யரின் மிரட்டல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும், அழித்து விடுவேன் என்ற வெஞ்சினத்துக்கும் அவர்கள் அசைந்து கொடுக்கவில்லை.

1978
சென்னை-600 008

ஒரு நாள் சுந்தரம் கிளம்பியே விட்டான். சுசீலா கட்டிய புடவை யோடு, அவனைப் பின் தொடர்ந் தாள்.

சுழலிலே சிக்கிக்கொண்டா யிற்று. இனி, எப்படியெல்லாம் அலைக்கழியப்பட வேண்டி நேரிடு கிறதோ?

பணத்தை ரொம்ப நாள் ஒரே இடத்தில் வைத்து வைத்தால் பள பளப்புஅற்றுப்போய்பாசிபிடித்து விடுகிறதல்லவா? மனிதர்கள் ரொம்ப நாள் பணத்தோடு இருந்து விட்டால், அவர்கள் மன மும் 'ஈரம்' அற்றுப் போய் ஒரு வித கொழுப்பைப் படியவிட்டுக் கொள்கிறது.

சாம்பசிவையருக்கு அன்பு என் றால் என்னவென்றே தெரியாது. மனைவி, பிள்ளை, சாப்பாடு, காரி யாலய அலுவல்கள் எல்லாமே வெறும் இயந்திர கதிதான் அவ ருக்கு.

ஆனால், வெறுப்பு அவருக்குத் தெரியும். அகங்காரமும், பழி வாங் கும் கொடூர சுபாவமும் அவருக்கு உண்டு.

சுந்தரத்தை ஓட ஓட விரட்டி ஞர் அவர். அவன், மனைவியாகக் கொண்டிருப்பது தன் பெண்ணை ஆயிற்றே என்ற அறிவோ, அவனைத் துன்புறுத்தினல் பெண் ணும், துன்புறுவாளே என்ற பரந்த மனமோ அவரிடம் இல்லை. அவ ன் வேலைக் காக முயன் ற இடங்க ளில் எல் லாம் குறுக் கிட்டுக் கலை த்தார். அவ னை இப்படி

எல்லாம் செய்தால் அவன் மறுபடியும் தன்னிடம் தஞ்சம் புகுவான் என்ற நப்பாசைகூட இருக்கலாம்.

சுசிலா "கண் கண்ட தெய்வம் கணவனே" என்ற உண்மைப் பண்பாட்டோடு நடந்து கொண்டாள். அவள் தாய் ஒளிவு மறைவாக அளித்த எத்தனையோ உதவிகளை நிர்த்தாட்சண்யமாக ஏற்க மறுத்தாள்.

தக்காளியின் மிகச் சிறிய விதையிலும் அது செடியாக வளர வேண்டிய வசதிகளைப் பரமன் செய்து வைக்கவில்லையா என்ன? சுந்தரத்துக்கும் அவன் வழி செய்து வைத்திருந்தான்.

சுசிலா ஒரு நாலணு கொடுத்து 'லாட்ரி' சீட்டு வாங்கி இருந்தாள். எதிர்பாராத விதமாக அந்த 'டிக்கட்டுக்கு' ஆயிரம் ரூபாய் பரிசு வந்தது. அதைக் கொண்டு சுந்தரம் சின்னதாக ஆரம்பித்த 'போட்டோ ஸ்டுடியோ,' மெள்ள மெள்ள வளர்ந்து சற்று சுமாரான வரும்படியைத் தந்தது.......

சுசிலா இன்னமுது படைத்தாள். ஆரம்பத்தில் எல்லாம் பிரமாதமாகச் சமைக்க முடியாமற் போனுலும் போகப் போகக் கற்றுக்கொண்டாள், எளிய வாழ்க்கையையும் பிடித்துக் கொண்டாள்.

காலம் ரம்மியமாகச் சென்றது.

ரயிலில் முதலில் ஒண்டிக் கொள்ள மட்டுமே இடம் கேட்டுக் கெஞ்சுபவர் ஒவ்வொருவரும் சிறுகச் சிறுக உட்காரவும், முடிந்தால் சாய்ந்து கொள்ளவும் பார்ப்பதில்லையா! சமூகத்தில் நால்வரில் ஒருவனுக ஒண்டிக்கொள்ள முயன்ற சுந்தரம் மெள்ள மெள்ள எந்த எந்த வகைகளில் பணத்தைப் பெருக்க முடியுமோ அந்த வகைகளில் எல்லாம் முயற்சி செய்யத் தலைப்பட்டான்.

ஒரு பெரிய 'டீ' பார்ட்டியில், படங்கள் பல எடுக்கும் அபூர்வ 'சான்ஸ்' ஒன்று அவனுக்கு வந்தது. அதற்குத் தகுந்தபடியான உயர்தர 'காமிரா' அவனிடம் இல்லை என்ருலும் அவன் வேலையை ஒப்புக் கொண்டான். அடுத்த ஸ்டுடியோ ஒன்றிலிருந்து இருபது ரூபாய் வாடகையாகத் தருவதாகப் பேசிக் காமிராவைக் கடனுக வாங்கிக் கொண்டான்.

பத்துப் பதினைந்து படங்கள் பிடித்தாகி விட்டது. ஓடுபவர், உட்காருபவர், சாப்பிடுபவர் இப்படி எத்தனையோ ஷாட்டுகள். சுந்தரம், வெற்றிப் புன்னகை ததும்ப வளைய வந்தான். பதினுருவது படத்துக்குச் சரி செய்யும் போது, சுழல் அவனைப் பற்றிக் கொண்டு விட்டது.

ஒரு அவசரக் குடுக்கை—காலில் கண்ணில்லாதவர்—போகிற போக்கில் 'ஸ்டாண்டை'த் தட்டி விட்டார். தலை குப்புற 'காமிரா' உருண்டது.

அரை நிமிஷ வேலை! அரை ஆயிரம் பெறுமானமுள்ள காமிரா தவிடு பொடியாயிற்று. இந்தக் கைங்கர்யத்தைச் செய்தவர் அங்கே நிற்கக் கூட இல்லை. அந்தர்த்தியானமாகி விட்டார்.

பதிலுக்கு ஒரு காமிராவையோ அல்லது அதன் கிரயத்தையோ நண்பனுக்குத் திருப்பித் தர வேண்டுமே என்று சுந்தரம் தலையிலே கையை வைத்துக் கொண்டு அலறினது என்னவோ உண்மை தான். ஆனுல், அதற்காக இந்தப் பெண் தன் கணவனுடைய மானத்தைக் காற்றிலே பறக்க விட்டு விட்டுச் சாம்பசிவய்யரிடம் உதவி கேட்பதா?

சுசிலா செய்த இந்தக் குற்றத்தைச் சுந்தரத்தால் மன்னிக்க முடியவில்லை.

சுசிலாவிடம் கோபித்துக் கொண்டு வந்த பிறகு சுந்தரம் திரும்பவும் வீட்டு பக்கம் போகவே

இல்லை. ஓட்டலில் உண்டை உருட்டிப் போட்டுக் கொண்டான். ஸ்டூடியோவிலேயே உருண்டான்.

நன்றாகத் தூங்கினால் உடம்பு அசதியை மட்டுமே உணருகிறது. ஆனால், பாதி தூங்கியும் தூங்காமலும் இரவைக் கழித்தோமானால் நமக்கு ஏற்படும் ரணவேதனையே அலாதி!

சுந்தரம் இரண்டு இட்டிலிகளையும், காபியையும் நெஞ்சுக் குழலில் தள்ளினான். சூடாகச் சென்ற உணவின் தெம்பை உணர்வதற்குள் அவனுக்கு அழைப்பு வந்தது......

வாசலுக்குச் சென்று பார்த்தான் அவன்.

காமிராவைக் கொடுத்து உதவின நண்பன்!

சுந்தரம் திகைத்தான். நல்ல வேளை! அவனை முந்திக் கொண்டான் வந்தவன். அவன் 'ஸ்டூடியோ' என்று பெயருக்கு வைத்துக் கொண்டிருந்தானே தவிர பிழைத்ததெல்லாம் கடனில் தானும். யாரோ ஒரு உஷார்ப் பேர்வழி அன்றைக்கு 'ஸ்டூடியோ' வைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அதிலிருந்து அவனுக்கு அவனுடையது என்று சொல்லிக் கொள்ள எதுவும் மிஞ்சப் போவதில்லை. "சுந்தரம், உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேனடா... காமிரா என்னுடையது என்று யாரிடமும் சொல்லிவிடாதே அப்பா...அதாவது மிஞ்சட்டும். அதை நீயே வைத்துக்கொள். மாதம் ஐம்பதாகப் பத்து மாதத்தில் பணத்தைக் கொடு போதும்......" கெஞ்சாத குறையாகக் கெஞ்சினான் அவன்.

சுந்தரத்துக்கு இப்போதும் திகைப்பாகத் தான் இருந்தது. ஆனால், இந்தத் திகைப்பில் திகில் இல்லை. கொஞ்சம் ஆறுதலின் ரேகை இருந்தது.

வலப்புறமும் இடப்புறமுமாகத் தலையை வேகத்தோடு ஆட்டினான் சுந்தரம். "எனக்கு மாதம் ஐம்பது ரூபாய் தரக்கூட வசதி இல்லை. ஆனால் உன் சங்கடத்தைப் பார்க்கும் போது ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும்......" என்றான் மேலுக்கு.

மலைபோல வந்த சங்கடம் பனி போல மறைந்ததும் அவனுக்கு சுசீலாவின் நினைவு வந்தது......பதினைந்து மணி நேர அவகாசம் வேறு அவனுடைய ஆத்திரத்தை வெகுவாகக் குறைத்திருந்தது.

"பாவம் அவள், பெற்ற தாயையும், செல்வம் கொழிக்கும் தந்தையையும் புறக்கணித்து விட்டுக் கணவனே கதி என்று புறப்பட்டு விட்ட அந்த அன்பு உருவத்திடம் எத்தனை கொடூரமாக நடந்து கொண்டு விட்டோம்?" என்று பச்சாத்தாபப் பட்டான் அவன்.

இந்த நினைவு தோன்றியதும் அவன் தானாகவே வீட்டை நோக்கி நடந்தான்.

"என்னடா இது அதிசயமாயிருக்கு! நீ கூட பாட புத்தகம் எடுத்துப் படிக்க ஆரம்பித்துட்டாயே?"

"இல்லேடா! புது புத்தகமோன்னோ! ஒரு மாதிரி வாசனை வருது; மோந்து பார்த்துக்கிட்டிருக்கேன்.

சுசீலா யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்......

சுந்தரம் எட்டிப் பார்த்தான், சாம்பசிவம்!

கழற்றிய சட்டையை மறுபடியும் மாட்டிக்கொள்வதே போல, அடக்கிய கோபத்தை மறுபடி ஏற்றுக்கொண்டான் அவன். திரும்பிப் போய் விடலாமா என்று யோசித்தான் அவன். ஆனால் காற்று அதுவாக உள்ளே நடக்கும் பேச்சை அவன் காதில் நுழைத்து வைத்தது.

"அப்பா உங்களுக்குக் கோடி நமஸ்காரம்...நீங்கள் செய்ததற்கு உங்களை அப்பா என்று கூப்பிடுவதே சரியல்ல. என்னவோ, அம்மாவாயிற்றே என்று அவள் முகத்துக்காக நேற்று வந்தேனே தவிர......உங்களுக்கும் எனக்கும் உறவு எப்போதோ விட்டுப் போயிற்றே!"

"உனக்கு நான் எப்படித் தான் சொல்லுவதோ அம்மா. நான் பழைய சாம்பசிவம் இல்லை சுசீலா! அன்பின் உண்மையைக் கடந்த ஒரு வாரமாகத் தான் நான் உணர்கிறேன். பணம் பணம் என்று பணத்தின் பின்னே அலைவதை விட அன்பு என்று சிறு குழந்தை பின்னே அலைவதால் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும் என்பது இப்போது தான் தெரிகிறது அம்மா......"

அவர் குரலில் பழைய கம்பீரமோ, ஆணவமோ இருக்கவில்லை.

பிரபல
ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆரூடம் மூன்று கேள்விகளுக்கு ரூ. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோநிதி, தி-நகர், மதராஸ்-17.

மாறாகக் குழைவும், கெஞ்சுதலும் இருந்தது. சுசீலா இரண்டொரு நிமிஷங்கள் பேசாமல் இருந்தாள். அமைதியைக் கலைத்துக்கொண்டு அவரேதான் மறுபடியும் பேசினார்.

"அங்கே உன் அம்மா படுக்கையோடு கிடக்கிறாள். பணம் செய்யாத பலவற்றைக் குணம் செய்யும், மனிதர்களின் சகாயம் என்பது இப்போது தான் புரிகிறது. எனக்காக இல்லையானாலும் அவளுக்காக வாயேன்......"

"அப்பா! முதலில் ஸ்டூடியோவுக்குப் போங்கள். மாப்பிள்ளையை சமாதானம் செய்து அழைத்து வாருங்கள். அவர் இஷ்டப்பட்டால் நான் வருவேன். இல்லையானால் இல்லை......?"

சுந்தரம் அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டான். மனைவியின் ஆழ்ந்த அன்பையும், தன் மானத்தையும் அவனால் தாங்க முடியவில்லை......

அவன் உள்ளம் அவனுக்குச் சொல்லிற்று...பெண் கணவனைப் பொறுத்த வரை மரத்துக்கு அதன் மேல் பட்டையைப் போல; பட்டை தான் கெடும் வரை மரத்தைப் பாதுகாப்பது போலப் பெண்ணும் அவனை மீறிக் கணவனுக்குச் சங்கடம் ஏற்பட விடுவதில்லை......

வில்லினின்றும் கிளம்பிய அம்பே போல உள்ளே நுழைந்த அவன் "சுசீலா! வர்மம் காட்ட நல்ல சமயம் பார்த்தாய். உம்! உடனே கிளம்பு; அம்மாவைப் பார்க்க வேண்டும்......" என்று படபடத்தான்.

நன்றாகக் கொதிக்கும் பாலில் நாலைந்து துளி குளிர்ந்த தண்ணீர் பட்டால் எப்படி அடங்கிப் போகிறது? கோபத்தாலோ, அல்லது விம்பினாலோ பிளவுபட்ட இருவேறு மனிதர்களிடையே சமாதானம் ஏற்பட்டாலும் இப்படித் தான்......பழைய கொதிப்பெல்லாம் அடியோடு அடங்கிப் போகிறது......

இனி சாம்பசிவம் வேறு, சுசீலா வேறு, சுந்தரம் வேறு என்பது அவர்களிடையே இல்லை.

திருவையாற்றில் ஒரு டூரிங் டாக்கீஸ் வந்திருந்தது. ஏற்கனவே ஊரிலிருந்த பிரதம தியேட்டருக்கும் இந்தக் குட்டி டேராக் கொட்டகைக்கும் ஏற்பட்டிருந்த போட்டியில் ஊரிலும் சுற்றியிருந்த கிராமங்களிலு மிருந்த ரஸிகர்களின் பாடு படு கொண்டாட்டமாக இருந்தது. வாரத்துக்கு ஒரு புதுப் படம் வீதம் இரு கொட்டகைகளிலும் வந்து ஜமாய்த்துக் கொண்டிருந்தது.

தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்கு நான் பஸ்ஸில் போனபோது மாலை சுமார் ஐந்தரை மணி, கையில் ஒரு தோல் பை; சின்னத் தோல் தலையணை. இவ்வளவு தான் என் உடமைகள். என் சொந்த ஊரான திருவையாற்றுக்கு நான் போனாலும், எத்தனை காலம் கழித்துப் போகிறேன்! எட்டரை வருஷங்கள்! எஸ். எஸ். எல். ஸி பாஸ் பண்ணிய பிறகு ஊரை விட்டுப் புறப்பட வேண்டிய நியதி எனக்கு ஏற்பட்டு விட்டது. ஊரிலிருந்த சொந்த, பெரிய வீட்டை விற்றுவிட்டு, என் கல்லூரிப் படிப்பை உத்தேசித்தும், மேற்கொண்டு கஷ்டம் இல்லாமல் குடும்பம் நடக்க வேண்டியதை உத்தேசித்தும் எங்கள் குடும்பம் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போன பிறகு இப்போதுதான் சொந்த ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு குறிக்கோளும் இல்லாமல், பெரிய அழகான வீட்டை அவசரம் அவசரமாக மூவாயிரம் ரூபாய்க்கே விற்று விட்டுப் புறப்பட்டோம்; ஆனால் இப்போது நேர்த்தியானதொரு குறிக்கோளுடன் தான் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தேன். என் தாய் அளவற்ற ஆசையுடன் அந்தக் காலத்தில் வாங்கி, வீட்டுக் கூடத்தின் நட்ட நடுவில், உத்தரத்திலிருந்து தொங்கிய கனமான சங்கிலிகளில் இணைக்கப் பெற்றிருந்த வர்ணமயமான ஊஞ்சலில் உல்லாசமாக வீசி ஆடி ஆண்டு கொண்டிருந்த அந்த வீட்டை என் தந்தை அதி சுலபத்தில் விற்று

விட்டுப் பட்டணத்துக்குக் குடி போனார். பிள்ளைகள் படிப்பு விஷயத்துக்காகவும் குடும்ப நல னுக்காகவுமே அவர் அப்படிச் செய்தார் என்பதில் சிறிதும் சந் தேகமில்லை. இப்போது அந்த வீட்டைத் திரும்பவும், அதிக விலை கொடுத்தாவது, வாங்கி விடலாம் என்ற குறிக்கோளுடன் தான் திருவையாற்றுக்குப் போனேன்.

இந்த எட்டரை வருஷ காலத்தில் நிகழ்ந்த மாறுதல்கள் அநேகம். 'வீட்டைத் திரும்ப வாங்க வேண் டும்' என்ற அதே ஏக்கத்தில் என் தாய் இறந்து போனாள். அவள் இறந்து போன சமயத்தில் நான் நல்ல வேலையில் அமர்ந்திருந்தேன். 'எப்படியாவது திருவையாற்று வீட்டை வாங்கி விடு' என்று எனக்கு ஆணை போட்ட கையோடு அவளுடைய காலமும் ஓடிற்று. அதற்கப்புறம் நாலு வருஷங்கள் போன சுவடு தெரியாமல் போய் விட்டன. கையில் பணம் சேர்த் துக் கொண்டேன். வயதான என் தந்தையின் விருப்பப்படி திருவை யாற்றுக்குப் போனேன்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய போதே தெரிந்த முகம் ஏதாவது தெரி கிறதா என்று பார்த்தேன்.

நேர் எதிரே, ரோட்டில், எனக்கு எஸ். எஸ். எல். ஸியில் தமிழ் கற் பித்த தமிழ் ஆசிரியர் போய்க் கொண்டிருந்தார். பள்ளிக் கூடத்தி லிருந்து வீட்டுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார் போலி ருக்கிறது. அன்றைப் போலவே இன்று மிருந்தது அவருடைய ஆகிருதி ; ஒரு மாற்று கூட்டியோ குறைத்தோ வைக்காமல் சந்தனப் பொட்டைப்பரந்தநெற்றியில் இட் டிருந்தார். நீண்ட அங்கியைப் போன்ற கோட்டு; அதில் நடுநாயக மாகக் கடிகாரச் சங்கிலி ; துல்லிய மான மல் வேஷ்டி, பஞ்சக் கச்சத் தில் 'பளிச்' சென்று விளங்கியது.

'என்றுமுள தென தமிழை' என் உள்ளத்தில் நிறைவான பண் பாக்கி யிருந்த தமிழ் ஆசிரியரை ஊருக்கு வந்த முதல் விநாடியில் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

''சார்...'' என்று கூவிக் கொண் டே ரோட்டின் குறுக்கே ஓடி அவர் எதிரே நின்றேன். அவருக்கு முதலில்என்னை அடையாளம் புரிய வில்லை. மேலுங் கீழுமாய்ப் பார்த் தார். நியாயம்தானே. 'துளியூண்டு' இருந்தவன், துள்ளும் வேகத்தில் வளர்ந்து, நாகரிகத்தின் வடிவமாக எதிரே நின்றுனுல் அவரால் சுல பத்தில் புரிந்து கொள்ள முடியாது தான்.

''என்ன சார், என்னைத் தெரிய வில்லையா ? தண்டபாணி சார் !'' என்றேன்.

தமிழ் ஆசிரியரின் முகம் இனிய தமிழைப்போல் அந்தக் கணமே மலர்ந்தது.

'' தண்டபாணியா ? அடேடே வாடா ! வாடா ! எப்படி மாறிப் போயிட்டே ? நீ நம்ம வீட்டில் தான் தங்க வேண்டும்; என்ன வேலையாக வந்திருந்தாலும் சரி, நான் உடனிருந்து எல்லாவற்றை யும் கவனித்து உதவி செய் கிறேன் '' என்று கூறிக்கொண்டே என் கையைப் பிடித்து அன்புடன் அழைத்துக் கொண்டு போனார்.

அவர் வீட்டுக்குப் போனதும், அவரிடம் நான் வந்த காரியத்தைப் பற்றி ஆதியோடந்தமாகச் சொன் னேன். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அவர் சொன்னார்.

'' தாய்க்கு மேல் இங்கே யோர் தெய்வ முண்டோ ? கிடையாது. அவசியம் செய்யத்தான் வேண் டும்.''

அவருக்குப் பாரதி பாடல்களில் வெகு அபிமானம். நான் நினைத்து வந்த காரியத்தையும் என்னுடைய கடமையையும் ஒரே வார்த்தை யில் ' தாய்க்குமேல் இங்கே யோர் தெய்வ முண்டோ' என்ற பாரதி பாடலைச் சொல்லித் தெரியப் படுத்தினர்.

'' சார், உங்கள் ஒத்தாசை தான் இதில் எனக்கு மிகவும் முக்கியம்'' என்றேன்.

"இது என்ன பிரமாதம், தண்டபாணி? ஒவ்வொருத்தர் பிறத்தியாருக்காகத் தங்கள் உயிரையே கொடுக்கிறார்கள். என் அருமை மாணவனான உனக்கு நான் எதுவும் செய்யக் கடமைப்பட்டவன். ஆனால், உலகியலைப் பற்றி இன்னும் பூரணமாக அறியாத பச்சைப் பிள்ளை நீ. வாங்கிய உங்கள் வீட்டை அவர்கள் திரும்பவும் உங்களுக்கு விற்கச் சம்மதிப்பார்களா என்று கவனிக்க வேண்டும். வெகு நாளாக வைத்து ஆண்டுவரும் ஒரு பொருளை, நிர்ப்பந்த வசத்தில் நாம் மற்றவருக்குக் கொடுத்த பிறகும், அந்தப் பொருள் நம்முடையது என்ற எண்ணம் மாறாது தான். ஆனால் அதை மற்றவர் கவனிப்பாரோ என்பது சந்தேகமே. ஏனென்றால் அது 'அவருடயது' என்று அவர் நினைக்கிறார். உங்கள் வீடு அழகான பெரிய வீடு. விற்பதற்கு அத்தனை அவசரப்பட்டிருக்க வேண்டாம். இருந்தாலும் நம்மாலான முயற்சிகளையெல்லாம் செய்து பார்ப்பதில் தவறொன்றுமில்லை" என்று அனுபவ உண்மையுடன் சொன்னார் தமிழ் ஆசிரியர்.

"சார், அந்த வீட்டில் என் இரு சகோதரிகளுக்கும் கல்யாணம் நடந்தது. இன்னும் எங்கள் குடும்பத்து விசேஷங்கள் எத்தனையோ அங்கே நடந்திருக்கின்றன. ஆகி வந்த வீடு சார் அது. எங்கள் அம்மா அன்போடு வாங்கியது. எப்படியாவது அதைத் திரும்ப வாங்கிவிட வேண்டும் சார். ஐயாயிரம் ரூபாய் போனாலும் சரி" என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னேன் நான்.

"பார்ப்போம், தண்டபாணி. வா, ஒரு புதுப் படம் வந்திருக்கிறதாம். போய்ப் பார்த்து விட்டு வருவோம். மற்ற விஷயங்களை நாளை கவனித்துக் கொள்ளுவோம்" என்றார் அவர். 'டூரிங்' கொட்டகைக்கு அவரும் நானும் புறப்பட்டோம்.

வழிநெடுக எங்கள் வீட்டைப்பற்றிய சிந்தனையே எனக்கு. பெரிய, அழகான வீடு; நட்ட நடுவில் விசாலமான கல்யாண மண்டபம் —கூடம். கூடத்தின் உத்தரத்தைத் தாங்கி யிருந்தன நாலு பெரிய தூண்கள். தூண்களைக் கட்டிக்கரம் சேர்க்க முடியாது. அந்தக் கூடத்தில் தான் எத்தனை விசேஷங்கள் நடந்திருக்கின்றன! ...

'டூரிங்' கொட்டகை வந்தது. காற்றில் ஓலமிட்டு வந்த 'பாண்டு' வாத்தியத்தில் பலவித ஸ்வரங்கள் பேசின. என் தமிழ் ஆசிரியர் உலகத்தோடு ஒட்டியவர். தமிழ்ப் படங்களில் சுத்தமான தமிழ் தான் பேசப் படுகிறதா என்ற சர்ச்சையிலெல்லாம் இறங்க விரும்பாதவர் அவர். ஏதோ சந்தோஷமாய்ப் பொழுது போக்கினாற் போயிற்று என்ற அபிப்பிராயத்துடனேயே படங்களுக்குச் செல்ல விரும்புபவர் அவர். அந்தக் காலத்திலேயே படப் பித்து அவருக்கு உண்டு; இப்போது நாகரிகம் முற்றி நமது பட உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்ட பிறகு அவருடைய ராஸிக்கியத்தைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

"பையா! தாவர வஸ்துக்களில் இரண்டு சொல்லு!"

"தவளை தாவறது! குரங்கும் தாவறது!"

கொட்டகைக்குள் நாங்கள் நுழைந்த போது 'சில்'லென்ற வாடை வீசியது. மழை வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை தான். ஆனால் பாதிப் படம் ஆவதற்கு முன்னேயே 'சடசட' வென்று தூறத் தொடங்கிவிட்டது: 'ஓ' வென்று வீச ஆரம்பித்திருந்த காற்றில் அந்த 'டேராக்' கொட்டகையின் கூடாரக் கான்வஸ் துணிகள் 'விர் விர்' என்று ஆடிக்கொண்டிருந்தன.

திடீரென்று கொட்டகையின் விளக்குகள் யாவும் அணைந்தன. ஒரே கூச்சல். இரண்டு நிமிஷங்கள் இரண்டு யுகங்களாகப் பறந்தன. விளக்குகள் வரவில்லை. மழையும் வலுத்துவிடுமோ என்ற பயம் குழுமியிருந்தவரைக்கூடிவிட்டது. அவரவர் கும்பல் கும்பலாய் எழுந்து வெளியில் போக ஆரம்பித்து விட்டார்கள்.

"தண்டபாணி! நாமும் மழை வலுத்து விடுகிறதற்கு முன்பு வீட்டுக்குப் போய்விடலாம்!" என்றார் தமிழ் ஆசிரியர். கொட்டகைக்கு வெளியே தட்டுத் தடுமாறி வந்தோம் நாங்கள்.

"ஏய் மாட்டுவண்டி! வண்டீ!" என்று இரைந்து கூப்பிட்டார் அவர். ஒற்றை மாட்டு வண்டிக்காரன் ஒருவன்—புறப்பட இருந்தவன்—ஓடி வந்து, "எந்தத் தெருவுக்குப் போகணும்?" என்று கேட்டான்.

"வடக்குத் தெரு......"

"வண்டி வடக்கு மடவிளாகத்துக்குத் தான் போவுது. ரெண்டு பெண்டுகள் வர்றாங்க. நீங்களும் வாங்க. அப்படியே வடக்குமடவிளாகத்துக்குப் போவோம்" என்றான் வண்டிக்காரன்.

வண்டிக்குள் ஏறினோம்.

"சார்! நீங்களா?"—மதுரமான பெண் குரல் தமிழ் ஆசிரியரை வண்டிக்குள் வரவேற்றது. அவரும் நானும் ஏறிக் கொண்டோம்.

அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுள்ள அம்மாள் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய தாயாராகத் தான் இருக்கவேண்டும்.

"கற்பகத்தம்மாளா? என்ன அம்மா சௌக்கியமா?" என்றார் என் ஆசிரியர் அடுத்தபடி.

நான் திக்பிரமை அடைந்தேன். கற்பகத்தம்மாள்! என் தாய் ஆசை ஆசையாய் ஆண்டு வந்த வீட்டை வாங்கி இப்போது ஆண்டு கொண்டிருப்பவள்! என் பெட்டியில் பத்திரம்கூட இருந்தது.

வண்டி காவேரிப் பாலத்தைக் கடந்து, கடைத் தெருக்களையும் தாண்டி, வடக்கு மடவிளாகத்தில் நுழைந்து நின்றது. நான் 'திரும்பவும் கிடைக்குமா' என்று மனத்தோடு ஆர்வத்துடன் எண்ணி ஏங்கி வந்த வீட்டின் எதிரில் தான் வண்டி நின்றது.

முதலில் நான் இறங்கினேன்; அப்புறம் என் ஆசிரியர். அப்புறம் அந்தப் பெண்......மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. அதை நான் லட்சியம் செய்யவில்லை. காற்று லேசாக வீசியது, மழைக்கு விசிறியாக. அதையும் நான் பொருட்படுத்தவில்லை. பக்கத்திலிருந்த மின்சார லாந்தரின் ஒளியில் அவளைப் பார்த்தேன்.

பூங்கொடி தான் அவள். அந்த க்ஷணமே என் மனத்தைப் பறித்த மின்னலாய் விட்டாள் அவள். 'வயது பதினாறிருக்கும்; நல்ல இளமையான அழகு. விளக்கொளியில் என்னைப் பார்த்துக் கொண்டே இறங்கினாள் அவள்.

"மெதுவாய் இறங்கு, பொன்னி!" என்றாள் வண்டிக்குள்ளிருந்த கற்பகத்தம்மாள்.

பொன்னி! பொன்னி நதிக் கரையில் பூத்த பொன்னிதான் அவள்!......அவள் இறங்கி விட்டுப் படி ஏறினாள். அடுத்தபடி, அந்த வீட்டை—'எங்கள்' வீட்டை—நோக்கினேன்.

தொடர்ந்து கற்பகத்தம்மாள் இறங்கிப் போனதும், ஆசிரியர் அவசரப்படுத்தி என்னை வண்டியில் ஏற்றியதும், அவர் வீட்டுக்கு நாங்கள் போய்ச் சேர்ந்ததற்கு மிடையில் என்ன என்ன எண்ணங்களை எண்ணி விட்டேன் நான்.

என் அன்னையின் சீமந்தக் கல்யாணம் அந்த வீட்டுக் கல்யாண மண்டபத்தில் நடந்ததுதாம். மூத்தது பெண்ணாகப் பிறந்தது என் அன்னைக்கு. அந்தப் பெண்ணின்—என் அக்காவின்—கல்யாணமும் அந்தக் கல்யாண மண்டபத்திலேயே தான் நடந்தது. அதற்கப்புறம் என் சித்தி பெண்களின் கல்யாணங்கள்......கல்யாண மண்டபம், கல்யாண மண்டபமாகவே இருந்தது எங்கள் குடும்ப விஷயத்தில்.

இந்தப் பொன்னிக்கும் அந்தக் கல்யாண மண்டபத்திலேயே கல்யாணம் நடக்கும்......அது மட்டும் எங்கள் வீட்டுக் கல்யாணமாகவே ஆகிவிட வேண்டுமென்றால்? - பொன்னியின் அழகோடு

என் அன்னையின் அன்பான வடிவமும் என் கண் முன்னே நின்றது. இரண்டு பேருக்கும் நடுவில் ஆகி வந்த அந்த வீடு—'எங்கள்', 'அவர்கள்'—வீடு நின்றது!......

மறு நாள் தமிழ் ஆசிரியர், "நான் முன்னே சென்று நோட்டம் பார்த்து விட்டு வருகிறேன்" என்று புறப்பட்டுப் போனார், வடக்கு மடவிளாகம் தெருவுக்கு.

அவர் வரும்வரை எனக்கு நிலை கொள்ளவில்லை. உலகியலைப் பற்றி நான் இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று அவர் சொன்னது எத்தனை நிஜம்! பண வரவுக்காக விற்ற வீட்டை, பணம் நிறையக் கையில் சுழலும் போது திரும்பவும் வாங்கவேண்டும் என்று நினைக்கிறது இந்தப் பொல்லாத மனம்; வீடும் வேண்டும், அந்த வீட்டிலே உலவி வரும் மோகினியும் வேண்டும் என்றும் நினைக்கிறது இந்த அலையும் மனம்.

தெரு முனை திரும்பி அவர் வருவது எனக்குப் புலப்பட்டது. புறப்பட்டபோது இருந்த விருவிருப்பு இப்போது அவர் நடையில் இல்லை, அவர் வந்தார். ஆவலோடு அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

"ஒன்றும் பிரயோசனமில்லை, தண்டபாணி!" என்றார்.

"என்ன சார்!......"

"நான் என்ன பண்ணுகிறது. நான் பேச்சை ஆரம்பித்தவுடனேயே அந்தக் கற்பகத்தம்மாள் சிரியாய்ச் சிரித்தாள். 'உலகத்தில் இல்லாத அதிசயத்தை நீங்கள் சொல்லுகிறீர்களே' என்றாள். அவள் பக்கத்தில் தான் நியாயம் இருப்பதைப் போலவும் உங்களைக் கண்டித்த மாதிரியிலும்கூட நான் கற்பகத்தம்மாளிடம் நயமாகப் பேசிப் பார்த்தேன். அவள் ஒரேயடியாய்க் கூறினாள்: 'சார் உங்களுக்குத் தெரியாததில்லை. இந்த வீட்டை வாங்கி, இதை 'ரிபேர்' செய்து சரிப்படுத்தி, மின்சார விளக்குப் போட்டு எத்தனையோ அழகாய்ப் பண்ணியிருக்கேன். இவ்வளவும் இதை மறுபடியும் விற்பதற்கா சார் செய்தேன்? ஏதோ ஒரே பெண்; 'அவர்' போன பிறகு கண் கலங்காமல் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் கல்யாணத்தை இந்த வீட்டில் செய்து, வீட்டையும் மாப்பிள்ளைக்குச் சீராய்......' என்று என்ன வெல்லாமோ 'லெக்சர்' அடித்துக் கொண்டு போகிறாள்......" என்றார் அவர்.

'மாப்பிள்ளைக்குச் சீராய்...'—என் மனத்தில் 'பளிரெ'ன்று அந்த எண்ணம் அழகானதொரு மின்னலாய்ப் பாய்ந்தது. பொன்னியின் அழகுக்கும் அந்தஸ்துக்கும் ஒரு குறைச்சலும் இல்லை. அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? அவர்கள் சம்மதம் எப்படி இருக்குமோ? எல்லாம் கிடக்க, இவரிடம் இதை எப்படிச் சொல்லுவது! இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தை இழந்துவிட எனக்குச் சம்மதமில்லை. வேடிக்கையாகவும் அழுத்தமாகவும் பேசுபவனைப் போல் சொன்னேன் அவரிடம்:

"மாப்பிள்ளைக்குச் சீராய்த் தந்து விடப் போகிறார்களா? ரொம்பவும் நல்லது, சார்; எனக்கும் கல்யாணம் ஆகவேண்டும்; அந்த வீடும் வேண்டும். அவர்கள் பெண்ணையே......"—கூறி முடிப்பது எப்படி என்று தெரியாமல் சிரித்தேன்.

அவரும் சிரித்தார். "தண்டபாணி! நீ பலே ஆளப்பா! வீட்டைக் கேட்க வந்தவன் பெண்ணைக் கேட்கிறாய், அந்தப் பெண்ணோடு வீடும் சேர்ந்துவருமென்று; அப்படித் தானே?"

"ஆமாம், சார்."

"பெண்ணோடு வீட்டையும் இழந்துவிட அம்மாள் தயாராக இருப்பாள் என்று நீ நினைக்கிறாயா, தண்டபாணி?"

"பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்ளுவதாக......"

"அதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டாமா, தண்டபாணி? கண்ணோடு கண் நோக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில.'

அதனால் நீ அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டாமா? அவள் உன்னைப் பார்க்கவேண்டாமா?......"

"நேற்றுத் தான் சினிமாக் கொட்டகையிலிருந்து வண்டியில் வந்தபோது......"

"ஓகோகோ" என்று சொல்லி அவர் ஒரேயடியாய்ச் சிரித்து விட்டு, "நல்ல இடம், அழகான பெண்......பார்க்கலாம்" என்று சொன்னார் அவர்.

அன்று மாலை அவர் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பிறகு, அவரும் நானும் பஞ்சநதீசுவரர் ஆலயத்துக்குச் சென்றோம். அம்மன் சன்னிதியைத் தாண்டி வெளியில் வந்தபோது, கற்பகத்தம்மாளும் பொன்னியும் எதிரே வந்ததைப் பார்த்தோம். என்னைக் கண்டதும்பொன்னி தலைகவிழ்ந்து கொண்டாள், நாணத்தால். இந்த முறை கற்பகத்தம்மாளே தன் பெண்ணுடன் எங்களை நோக்கி வந்தாள்.

"என்ன சார், பார்த்தும் பார்க்காமலேயே போகிறீர்களே? வீடு கொடுக்கமாட்டோம் என்று சொன்னதால் கோபமா?" என்றாள் கற்பகத்தம்மாள்.

தமிழ் ஆசிரியர் சிரித்துக் கொண்டே, "வீடு கொடுக்காமல் போய் விடுவீர்களா? பெண்ணைக் கொடுத்தால், வீட்டைத் தன்னாலே கொடுத்து விடுகிறீர்கள்!" என்று ஒரு போடு போட்டார். அந்த ஒரு கணம் பொன்னி என்னை நிமிர்ந்து பார்த்த ஒரு பார்வை, என் உள்ளத்தில் நிரந்தரமான ஒளி மின்னலாக வீழ்ந்தது.

"அதற்கென்ன அப்படியே செய்தால் போயிற்று. பொன்னிக்குக் கூட இஷ்டம்தான்......" என்றாள் கற்பகத்தம்மாள்; என்னைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

அவர் இந்தச் சமயம் விட்டுக் கொடுக்கவில்லை. "அதெல்லாம் நாம் பேசிக் கொண்டால் ஆயிற்றா? பெரியவர்கள் இல்லை?... நான் நாளைக்கு உங்கள் வீட்டுக்கு வருகிறேன் அம்மா" என்று சொல்லிக்கொண்டே மேலே நகர்ந்தார்.

"அவரையும் அழைத்து வாருங்கள். நம் வீட்டில் ஒரு வேளை சாப்பிடாமல் போகக்கூடாது" என்று கற்பகத்தம்மாள் சொன்னபோது, 'வரவேண்டும்' என்ற உபசரிப்பும் கண்டிப்பும் ததும்ப பொன்னியின் அழகான கண்கள் பரிவோடு என்னைப் பார்த்தன.

போகும்போது, "அப்பா தண்டபாணி! அப்புறம் உன்னைச் சேர்ந்தவர்கள் என்னைக் குற்றம் சொல்லப் போகிறார்கள்! வீட்டை வாங்க வந்தவன் தலையில் பெண்ணைக் கட்டி விட்டான் என்பார்கள். ஊருக்குப் போ. உன் அப்பாவைக் கலந்தாலோசித்து உசிதமானதைச் செய்" என்றார் அவர்.

என் தந்தை, கற்பகத்தம்மாள், தமிழ் ஆசிரியர் ஆகிய பெரியோர்கள் ஆசீர்வதிக்கத் திருவையாற்றில் பொன்னியின் கரம் பற்றினேன் நான். வடக்கு மடவிளாகம் தெரு வீடு எங்கள் வீடாயிற்று......அன்றைக்கு அந்த வீட்டுக் கல்யாண மண்டபத்தில் மானத ரூபியாக இருந்து என் அன்னை எங்களை ஆசீர்வதித்தாள் என்றே சொல்லவேண்டும்.

"கல்யாணம் ஆயிற்றா?" என்று தமிழ் ஆசிரியர் கற்பகத்தம்மாளைப் பார்த்து உபசரணையாகக் கேட்டார்.

"ஆயிற்று, சந்தோஷமாய். கடைசியில் உங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டீர்கள்" என்றாள் கற்பகத்தம்மாள்.

"பின்னே இல்லையா? தண்டபாணிக்குத் தாரத்தின் மூலமாய் இந்த வீடு வரவேண்டுமென்றிருக்கிறது. தாய்க்குப் பின் தாரம்" என்றார் தமிழ் ஆசிரியர்.

'தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வ முண்டோ' என்று சொன்னவர், 'தாய்க்குப் பின் தாரம்' என்று இப்போது சொன்னது எத்தனை அனுபவபூர்வமான உண்மையாக இருந்தது! ★

…★…

பந்தாடுகின்றாள் !

(தமிழ் ஒளி)

“ தந்தான மென்றாடும்
பந்தாடு கின்றாளை
‘ இந்தா ’ என்றேற ஆடுதே !—மனப்
பந்தோடு பந்தாடுதே !

★

சந்தானம் கொண்டாடும்
பந்தோடு பந்தாட
செந்தாமை வந்தாடுதே ! தமிழ்ச்
சிந்தோடு பந்தாடுதெ !

★

வென்றாரை வென்றாட
மன்றாடு கின்றாளின்
முன்றானை சென்றாடுதே — கை
ஒன்றோடும் ஒன்றாடுதே !

★

கற்றாரும் கற்றாட
தெற்றாடல் அற்றோட
சிற்றாடை சுற்றாடுதே — இடை
இற்றாட உற்றாடுதே !

★

முகில் கண்டு நின்றாடும்
மயில் என்று கொண்டாட
மகள் இன்று வந்தாடுதே — ‘தத்திம்
தக’ மென்று பந்தாடுதே !

வெறி

பி. வி. ஆர்

விஜயரங்கன் வீட்டு மாடிக்குக் குடி வந்து இரண்டு நாட்களாகியும் அவனுடைய மனைவி இன்னும் என் குடும்பத்தை அணுகவில்லை. முதன் முதலாக, ஊருக்கு வந்திருக்கிறார்களே, தெரியாததைச் சொல்லித்தரலாம் என்று அவளுக்குத் தோன்றாதது ஆச்சரியமாக இருந்தது.

'' அவள் ராங்கிக்காரியோ என்னமோ, யார் கண்டார்கள்!'' என்று சரோஜா கூறினாள்.

'' எல்லாம் இன்னும் ஒரு வாரத்தில் தெரியும்'' என்றேன்.

'' இப்போதே நம்மைப் பார்க்க வராதவள் இனிமேல் தான் வரப் போகிறாளாக்கும்......''

'' நீ வேணுமானால் போய்ப் பாரேன்!''

'' உஹூம்...... 'வள்'ளுன்னு விழுந்தா...மேலும் அவளைப் போய் நான் பார்ப்பானேன்?''

'' அப்போ நீ தான் ராங்கியடித்துக்கொள்ளுகிறாய்......சிநேகம் பிடித்துக் கொள்றத்துக்கே பொம்மனாட்டிகள் பெயர் வாங்கியவர்கள்......அந்தக் கூட்டத்திற்கு நீ அவமானத்தை......''

'' போதும்...நீங்களும் அந்த என்ன ரங்கம்...ஜயரங்கமா ஸ்ரீரங்கமா?''

'' விஜயரங்கம்......''

'' ஆமாம்...நீங்க இரண்டு பேரும் சிநேகமாக இருந்தால் போதும்...''

'' அவனும்தான் என்ன...நினைத்தால் பேச வருகிறான்...எப்போ பார்த்தாலும் முகத்திலே ரத்தமில்லாத களை...அளந்து அளந்து பேசுகிற போக்கு......மனசுலே ஒன்று, வெளியே ஒன்று என்கிறது நன்றாகத் தெரியறது......''

'' நல்ல ஜோடியாகத்தான் இருக்கும் போலிருக்கு......''

'' அவன் குடும்பத்தைப் பற்றி ஏதாவது பேச்சு எடுத்தா உடனே முகம் அறைந்தாற்போல விரிந்து சுருங்கி விடுகிறது...லேசான கோபமோ ஆத்திரமோ கூடத் தெரிகிறது...பதில் சொல்லாமல் எழுந்து போய் விடுகிறான்...ஏதோ வீட்டிலே ஒரு போர்ஷன் தந்தானே என்கிற நன்றியில் நாமும் அடக்கிக் கொள்ளத்தானே வேண்டியிருக்கு......''

'' சரி, சரி...இவர்களைப் பத்தி என்ன இவ்வளவு முக்யமாகப் பேசணும்...வேறே எதையாவது கவனிக்கலாம்......''

சரோஜா போய் விட்டாள். வெராந்தா பக்கமாக வந்தேன். மணி எட்டு அடித்திருக்கும் தெருவிலே நடமாட்டம் இல்லை. தெருக்

கோடியில் குதிரைக்குப் புல்லைத் திருகித் திருகிக் கொடுத்துக் கொண்டிருந்த வண்டிக்காரன் வானத்தைப் பார்த்த வண்ணம் நின்றான்.

பட்டணத்திலே இருந்து விட்டு, இந்த மாதிரியான சின்னஞ்சிறு ஊரில், சின்னஞ்சிறு தெருவில், ஒரு சிறிய வீட்டு மாடியில் இருக்கும் படியாக நேர்ந்து விட்டதே என்று என்னையே நொந்து கொண்டிருக்கையில் கீழே, ஏதோ கூக்குரல் கேட்டது. இரவின் நிம்மதியை நாராகக் கிழித்துக்கொண்டு கிளம்பிய ஒரே அலறல்! ஸ்திரீயின் அலறல். அடுத்த கணம் இரண்டு மூன்று அறைகள்! ஹாலுக்கு வந்தேன். சரோஜா நின்று கூர்ந்து கவனித்தாள்.

அலை ஓய்ந்த பிறகு உண்டான நிம்மதியில், "உங்கள் நண்பர் முரடர் போலிருக்கு......" என்றாள்.

"அவள் எதற்கு அலறினாளோ?"

"அறையின் வலியில் தான்......"

"அடிப்பது அப்புறம் தானே கேட்டது."

"என்னவோ...ரெண்டு நாளாகவே சூனியம் பிடித்தாற்போல இருக்கு வீடு...மனுஷா இல்லை... இருக்கிறவர்களும் பேசாமல் ஒளிந்து கொள்ளுகிறார்கள்......"

"உம்...வேறே இடம் பார்க்கலாம், பொறு......"

"பொறுக்கிறேன்... ...இப்போ சாப்பிட வாருங்கள்......"

சரோஜா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். தூக்கம் வராத எனக்கு அவளை எழுப்ப வேண்டும் என்று தோன்றினாலும் என்னையே அடக்கிக் கொண்டு சிந்தனையை வேறு திசைகளில் திருப்பினேன். ஒன்றன்பின் ஒன்றாக ஸ்டேஷன்கள் வந்து போவதுபோல, பலர் வந்து வந்து கடைசியில் விஜயரங்கன் கண் முன் நின்றான். அந்த அலறலுக்கும் அறைக்கும் எதிரொலியாக என் மனத்தில், 'அவனுடைய குடும்பத்தில் சுருதியில்லை' என்ற ஒலி ஒலித்தது. இவன்தான் முரடனோ, அல்லது அவள் தான் அடங்காப் பிடாரியோ, தெரியவில்லை. இருவருக்கும் மன ஒப்பந்தம் இல்லை. ஏதோ பிறருக்காக வாழும் வாழ்க்கை; சம்பாதித்துப் போடவேண்டும்; சாப்பிடவேண்டும்; இதுதான் அவர்கள் வாழ்க்கையா? இந்த வாழ்க்கையில் என்ன ருசி, என்ன ரசம்? விஜயரங்கனுக்கு முப்பது வயதுகூட இருக்காது...இந்த வயசில் குடும்ப விளக்கு புகைசூழ இருந்தால் ஜ்வாலையிலே ஏது கொழுந்து? அவள் எப்படியோ...? குணம் ஒரு வேளை......?

சிந்தனைத் தொடர்ச்சியில் தளர்ச்சியடைந்த நான் என்னை அறியாமலே தூங்கி விட்டேன். எவ்வளவு நேரம் தூங்கியிருப்பேனோ தெரியாது. சிற்சில சமயங்களில் பத்து நிமிஷம் தூங்கினாலும் கூட ஒரு யுகம் கழிந்தது போலத் தோன்றி விடும். அந்த மாதிரி பிரமையில் மூழ்கியிருக்கையில், அறையில் ஏதோ சரசரப்புச் சப்தம் கேட்டது. ஹரிக்கேன் விளக்கு அடுத்த அறையில். அதை எடுக்கவும் கொஞ்சம் சோம்பல். இன்னும் பார்க்கலாம் என்று இருளில் கண்ணைத் தீட்டிக் கொண்டு பார்த்தேன். முதலில் ஒன்றும் தெரியவில்லை. என் ஆர்வம் அடங்கும் என்ற நிலையில் திடீரென்று நகரும் உருவம் தெரிந்தது. ஒரே கணத்தில் இதுவரை பார்க்காத கேட்காத பேய் பிசாசுகள் என்னைத் தாக்கின. ஒரு பெண்ணாகவோ, சிறு பையனாகவோ இருந்தால் நான் அந்தக் கணத்தில் கத்தி அலறி மூர்ச்சையாகி யிருப்பேன். உடல் வியர்க்க என்னையும் மீறிக்கொண்டு கிளம்பிய பயம் படுக்கையோடு கட்டிப் போட்டும் அருகில் இருந்த சரோஜாவைத் தொட கை தவித்தது. ஆனால் அப்போதே கை மரமாகி விட்டதே!

எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில்......

''கொண்டா, என் நகையை... உம் வைரத்தோடு...அட்டிகை... ஒட்டியாணம்......சங்கிலி....ஹ ஹ் ஹா !......''

ஒரே மின்னலில் மரம் எரிவது போல அந்த அலறல் வீட்டையே அதிரச் செய்து விட்டது. 'ஐயோ' என்று வீறிட்டுக்கொண்டு சரோஜா எழுந்தாள். நான் எப்படித் தான் படுக்கையை விட்டு எழுந்தேனே தெரியாது. அந்த உருவம் அலறின அலறலுக்குப் பிறகு அங்கே நின்றுகொண்டிருந்தது. அடுத்த கணம் அழ ஆரம்பித்தது.

ஹரிக்கேன் லாந்தரை எடுத்து வருவதற்கும், வாசற் பக்கத்துக் கதவை யாரோ தடதட வென்று இடிப்பதற்கும் சரியாக இருந்தது.

வெளிச்சத்தில் பார்ப்பதற்குள், அலறினவள் பின் பக்கமாக ஓடினுள். வாசலில் சப்தம். ''என்ன ? என்ன ?' என்று நாக்குளற சரோஜா கேட்டாள். நான் என்ன செய்வது ? ஓடும் உருவத்தைத் தொடருவதா ? சரோஜாவுக்குப் பதிலளிப்பதா ? கதவைத் திறக்கச் செல்வதா ? எதையும் தீர்மானிக்க முடியாதவனுய், பித்துப் பிடித்த

வனைப்போல ஒரு நிமிஷம் நின்றேன். பிறகு வாசல் கதவைத் திறந்தேன்.

''சார், ரொம்ப மன்னிக்கணும்'' என்று ஈன ஸ்வரத்தில் விஜயரங்கன் கூறினன்.

''உள்ளே வாருங்கள்...''. என் மார்பு அடித்துக் கொண்டது. உடல் வியர்த்தது.

அவன் உள்ளே வந்து மீண்டும், ''மன்னிக்கணும்'' என்ருன்.

''என்ன...யாரோ அலறின......பிறகு அந்த உருவம் பின்பக்கமாக ஓடியது...நீங்கள் இப்போ வந்து மன்னிக்கணும் என்கிறீர்கள்...எனக்கு ஒன்றும் புரியவில்லை......'' கூறிக் கொண்டே சரோஜாவைப் பார்த்தேன். அவள் கால் நடுங்க நின்ருள்.

விஜயரங்கன் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டுக் கூறலானன்:

''நீங்கள் வந்ததிலிருந்து என் குடும்பத்தைப் பற்றி விசாரிக்கிறீர்கள். நான் மழுப்புகிறேன். காரணம் இல்லாமல் இல்லை. எல்லோரையும் போல எனக்குக் குடும்ப சுகம் கிடையாது. அதற்கு யாரையும் குற்றம் சொல்லவும் முடியாது......''

''விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றேன். என் பரபரப்பு அதிகமாயிற்று.

''எட்டு வருஷங்களுக்கு முன்னுலே எனக்கு கலியாணமாயிற்று. ......காதல் கல்யாணம் என்று இல்லாவிட்டாலும், ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டபின் மற்றவர்களுக்கு விரோதமாக நடந்த கல்யாணம்...நீலா மூத்த பெண். தாயாருடைய நகைகள் பதினையிரம் ரூபாய்க்கு இருந்தன. அது தான் அவளுக்கு ஆஸ்தி. தமக்கு விரோதமாகக் கல்யாணம் செய்துகொண்டதால்,'' உன்னைப் பெத்தவளுடைய நகையோடு போய்ச் சேர்!'' என்ற பாவனையில் கடுமையாக இருந்தார், அவளுடைய தகப்பனர்.

கல்யாணமான பிறகு இந்த வீட்டை, கையில் இருந்த ரொக்கத்தைக் கொண்டு வாங்கினேன். புதுக் குடித்தனம் பிரமாதமாகத் தான் ஆரம்பித்தது. நூறு ரூபாய் சம்பளம் எங்களுக்கு வெள்ளம். நீலாவுக்கு நகை என்ருலும் தன் உயிர் என்ருலும் ஒன்று தான். பண முடையில் ஒரு வளையலைக் கூட எனக்கு உதவ முன் வரமாட்டாள். எதில் தாராளமாக இருந்தாலும் நகை விஷயத்தில் லோபிக்கும் மேலே தான். எனக்குக் கூட எரிச்சல் வருவது உண்டு......

புதுக் குடித்தனம் ஒரு வருஷம் தான். வானவில்லுக்கும் மின்மினிப் பூச்சிக்கும் எவ்வளவு ஆயுள் உண்டோ அவ்வளவு தான் இருந்தது எங்கள் குடும்ப இன்பத்திற்கும்......''

''மேலே சொல்லுங்கள்'' நான் துடித்தேன்.

ஒரு நாள் இரவு. மணி பன்னிரண்டு இருக்கும். நானும் நீலாவும் இங்கே இதே அறையில் தூங்கிக்கொண்டிருந்தோம். திடீரென்று அறைக்குள் யாரோ வருவது தெரிந்தது. அடுத்த கணம் டார்ச்லைட்டை அடித்துக் கொண்டு ஒருவன் நின்றுகொண்டிருந்தான். கையில் ஒரு பிச்சுவா. வாயைத் திறந்தால் கொன்று விடுவேன் என்று பயமுறுத்தினன். நீலா அரண்டு மயக்கம் அடைந்து விட்டாள்.

வந்தவன் தன் காரியத்தை மின்னல் வேகத்தில் முடித்தான். அவன் விரைய ஆரம்பித்த பிறகு தான் என்னுல் 'திருடன் ... திருடன்' என்று கத்த முடிந்தது! என்ன பிரயோசனம்! அன்றையிலிருந்து ஏழுவருஷமாக என் நீலா சரியாக இல்லை. காரியங்களைச் செய்வள். திடீரென்று கண்ணில் நீர் பெருகும். சில சமயங்களில் நள்ளிரவில் இந்த அறைக்கு ஓடிவருவாள். இப்போது அலறின மாதிரி அலறுவாள். பொறுமை யிழந்து அடித்துக் கூட இருக்கிறேன். ஆனுல் நினைத்தால் பரிதாபமாகத் தான் இருக்கிறது. நகைப் பித்து

எவ்வளவு என்று முன்னெல்லாம் ஆராய்வேன். அது இவ்வளவு தூரத்துக்கு வெறியாக இருக்கும் என்று திருடன் வருவதற்கு முன்னால் நான் எண்ணவில்லை......இனி மேல் ஜாக்கிரதையாகக் கதவைச் சாத்திவையுங்கள்...''

விஜயரங்கன் முடித்த பிறகு, ''வேறு நகைகள் வாங்கிப் போடுகிறதுதானே?'' என்றேன்.

''பதினாயிரம் ரூபாய்க்கு முதலில் எங்கே போகிறது...மேலும், தங்கம் என்று சொல்லி இமிடேஷனைப் போட்டேன். அவளுடைய வெறியின் கண்களுக்கு அவை பிடிக்கவில்லை. ஓர் இரவில் அம்மியில் வைத்து நசுக்கி விட்டாள்... அவள் ஆஸ்தியே யல்லவாபோய் விட்டது!......''

விஜயரங்கன் எழுந்தான். ''அவள் இப்போது தூங்கிக் கொண்டிருப்பாள். ஒரு நிமிஷம் எரிமலை போல குமுறி விட்டு, பொங்கின பால் அடங்குவது போல சுபாவம்...இனி இம்மாதிரியான தொந்தரவு உண்டாகாது......''

அவன் போன பிறகு, சரோஜாவைப் பார்த்தேன். அவள் என்னையே பார்த்து சிலையாக நின்றாள்.

''பாவம்......!''

''யார்?''

''நீலா தான்......''

''இல்லை, விஜயரங்கன்தான்...''

பிறகு, ''பத்து நாளில் வேறே வீடு பாருங்கள். இது என்ன? இது என்ன நடிப்போ, மாயமாலமோ யார் கண்டார்கள்? எனக்குப் பயமா இருக்கு'' என்றாள்.

'''ஏதோ உறுதி கொடுத்திருக்கானே, பார்க்கலாம்!'' என்றேன்.

மறு நாள் காலையில் விஜயரங்கன் வந்தான்.

''நான் வேறு வீட்டுக்குப் போகலாம்னு தீர்மானித்து விட்டேன்.''

''சொந்த வீட்டை விட்டா?''

''இடம் மாறினாலாவது ஏதாவது பிரயோசனம் இருக்காதா... நீங்கள் பூரா வீட்டையும் எடுத்துக் கொள்ளுங்கள்......வாடகையைப்பற்றிக் கூட கவலை வேண்டாம்......ரொம்ப அதிகம் கொடுக்கவேண்டாம்!''

விஜயரங்கன் திரும்பிய பிறகு ''என்ன வீடு, என்ன குடும்பம்... என்ன வெறி!'' என்று நான் எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஐந்திணைக் காட்சிகள்

நா. பார்த்தசாரதி

"கார் காலத்து மழைவளம் பெற்றுக் காட்சிக்கு இனிமை பயக்கும் சோலைகளையும் கானங்களையும் அவற்றின் புதுமை பூத்த நிலையையும் கண்டு துயரந் தோய்ந்த முகத்துடன் கன்னத்தில் கையூன்றி நிற்கின்ருள் அவள். அந்த வீட்டு வாயிற்படியில் கதவோரத்தில் அவனை எதிர்பார்த்து இதே நிலையில் கார் காலம் முழுதுங்கூட அவள் நின்று கொண்டிருந்து விடுவாள் போலிருந்தது. கன்னத்தில் வைத்த கையுடன் கண்களில் நீர் துளிக்க, கார் காலத்தின் இயற்கைவளம் மிக்க சூழ்நிலையைக் கண்டு கண்டு நெஞ்சு வெதும்பி நிற்கின்ற அவள் தன் பொறுமையாகிய கதவின் தாழ்ப்பாளை அணு அணுவாக இழந்து கொண்டிருந்தாள்:"— இந்தத் துன்பச் சித்திரம் தேரில் நின்று வந்து கொண்டிருந்த அவன் கற்பனையில் தோன்றிய போதுதான் அவளுடைய நிலை எவ்வளவு வேதனை நிறைந்தது? என்று அவனுக்குப் புரிந்தது. இதை உணர்ந்து கொண்ட அவன் பாகனை விரைவுபடுத்தினுன். தேரின் வேகம் வேகமாகவே அவனுக்குத் தெரியவில்லை. தெளிவு காண விரும்பிய அவன் நெஞ்சு தேருக்கு முன்பாகவே அவளிடம் விரைந்து சென்று விட்டது. சென்ற அது அவள் நிலை மேற்கண்டவாறு இருக்கிறது என்று அவனுக்குக் கூறுவது போல இருந்தது. அதை அவன் பாகனுக்குக் கூறி விரட்டினுன். பாகன் குதிரைகளை விரட்டினுன். தேர் விரைந்தது.

"நூல்நவின்ற பாக! தேர்
நொவ்விதாச் சென்றீக
தேன்நவின்ற கானத்து
எழில்நோக்கித்—தான்நவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக்
கவுள்மிசைக் கையூன்றி
நிற்பாள் நிலையுணர்கம் யாம்."

நவின்ற-பழகிய, நொவ்விதா-விரைவாக, கவுள்மிசை-கன்னத்தில், கானம்-காடு.

காதலில் துணைவியின் துயரத்தை எண்ணி விரைகின்ற ஆண் உள்ளத்தின் இயல்பு பாடலில் மாறுபாடற்ற முறையில் அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

இறுதியில் தேர் ஊரை அடைந்தது. அவன் கற்பனை போலவே அதே துயர ஓவியத்தின் மறுபதிப்புப் போலவே அவளை அவன் கண்டான். அவனை அவள் கண்டாள். இருவரையும் காண முகமின்றிப் பிரிவுத் துயரம் ஓடி விட்டது. வானம் மின்னியது. இடி இடித்தது. எல்லாம் அவர்களை வாழ்த்தின.

குறிஞ்சி

மலைச் சாரலில் ஒரு அழகிய பூம்பொழில். கடலுக்கும் மலைக்கும் என்றே இயற்கை தன் அழகுகளை எல்லாம் உடைமையாக்கிக் கொடுத்திருக்கவேண்டும். உணர்ச்சிகளை ஒரு சேரக் கவர்ந்து உள்ளத்தைத் தூய்மை செய்யும் ஆற்றல் கடலுக்கும் மலைக்கும் என்றே தனிப்பட்ட முறையில் அமைந்துள்ளது. நாடு நகரங்

களை ஒட்டியும் கூட அடர்ந்த பூம்பொழில்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆனல் மலைச் சாரலிலுள்ள பொழில்களில் இருக்கும் அழகு இவற்றில் இருப்பதில்லை.

செழித்து வளர்ந்த வேங்கை மரங்கள் பல அப் பொழிலினுள் இருந்தன. வேங்கைப் பூக்கள் நன்ருக உருக்கிவிட்ட செம்பொன் போன்ற நிறத்தை உடையவை. அவை கொத்துக் கொத்தாகப் பூக்கும். காண்போர் அவற்றைப் பொன்னிலே செய்து தொங்க விடப் பெற்றவை என்றே கருதுவர். பசிய நிறத்தோடு கூடிய இலை தழைகளுக்கு நடுவே செந்நிறப் பொன்னின் வண்ணங் காட்டி விளங்கும் அவற்றின் அழகு சொல்லிலே விவரிக்கும் அளவினும் பெரியது.

இத்தகைய அழகான பூம்பொழிலை ஒட்டி மலைச்சாரலில் தினைப்புனம் ஒன்றும் இருந்தது. வளம் மிகுந்த அந்தப் புனத்தில் தினைப்பயிர்கள் விளைந்து முற்றிய கதிர்களோடு தலை சாய்த்து ஆடிக் கொண்டிருக்கும். கிளி முதலிய சோலையிலுள்ள பறவைகளுக்கு இந்தப் புனத்துத் தினைக் கதிர்கள் என்ருல் ஒரே கொண்டாட்டம் தான். அலகு வலியெடுக்கின்ற வரை தினைக்கதிர்களை அவைகள் கொத்தித் தின்னும்.

தினைப்புனத்தின் உரிமையாளன் இதனுல் மிகுதியான தினைக்கதிர்களை இழக்க நேரிட்டது. நேரில் வந்து காவல் செய்ய முடியாதவாறு அவனுக்கு வேறு செயல்களும் இருந்தன. தினைப்புனத்திலே உயரமாக இருக்கும் இடத்திலே நின்று கொண்டு கிளி முதலிய பறவைகள் மேயாமல் தடுக்க அவன் ஒரு பரண் காட்டினுன். அவன் மகள் ஒருத்தி வீட்டில் அதிக வேலையின்றி அடைந்து கிடந்தாள். திருமணமாகாத பருவம் வந்த கன்னிப்பெண் அவள். நல்ல அழகி, தந்தை கூறி முடிப்பதற்கு முன்பே மகிழ்ச்சியோடு தினைப்புனத்திற்குக் காவல் செய்யப்போக அவள் ஒப்புக் கொண்டாள். அவளை ஒத்த பருவத்தினளான அவளுடைய தோழி ஒருத்தியும் அவளுடன் தினைப் புனத்திற்குச் சென்ருள். பரணில் ஏறி நின்று கொண்டு அவள் ஒரு சிறு கொட்டைக் கைகளால் கொட்டிக் கிளிகளை ஓட்டுவாள். தோழி உடனிருந்து துணை செய்வாள். தினைப்புனத்தில் கதிர றுக்கும் பருவம் வருகின்ற வரை அவர் வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. ஆனல் அவளும் அவள் தோழியும் அங்கே மலைச் சாரலில் ஆண்டு முழுவதும் இருக்கவேண்டுமானுலும் இருக்கத் தயாராக இருந்தார்கள். பொங்கி விழும் அருவியில் குளித்தும், மலர்களைத் தொடுத்தும், மான் முதலிய அழகான விலங்குகளோடு விளையாடியும் நேரத்தைக் கழிப்பது அவர்களுக்கு இன்பமயமான பொழுது போக்காக இருந்தது. வள்ளிக்கிழங்கும் கொம்புத் தேனும், பாறையிலே இடித்த தினை மாவும் அவர்கள் நாவுக்கு இசைந்த நல்லுணவாக அமைந்தன. கிளிகளும் குயில்களும் மழலைபேசி இசைபாடி அவர்கள் செவிக்கு இனிமை நல்கின. கூட்டம் கூட்டமாகப்

தாயார்: என்ன! பாட்டு வாத்தியாரே! கொழந்தே இப்ப எந்த மட்டிலே இருக்கா?

வாத்தியார்: அலங்காரத்திலே இருக்கா.

பச்சைக் கிளிகள் பறந்து கதிர்களின் மேல் அமரவும் அவள் பரண்மேலே இருந்து கொட்டுவாள். உடனே அவ்வளவு கிளிகளும் படபடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டே மேலே எழுந்து விடும். இந்தக் காட்சி அவளுக்கு மிக விருப்பமானது. இதைப் பார்க்கும் போதெல்லாம் அவள் சிறு குழந்தையைப்போலக் கை கொட்டிச் சிரிப்பாள். மலைச் சிகரத்தில் இருந்து சோவென்று கொட்டும் அருவிக்குள் புகுந்து விட்டால் நேரம் போவது தெரியாமல் குளித்துக் கொண்டே இருப்பாள். கரைக்கு வந்தால் அருவி விழும் காட்சியையும் நீர்த் திவலைகள் முத்துப்போலத் தெறிப்பதையும் பார்த்தவாறே வியப்புடனே நின்று கொண்டிருப்பாள். சில சமயங்களில் தோழியுடனே அந்தப் பூம்பொழிலிலே ஓடியாடி விளையாடுவாள்.

அப்படி விளையாடும் ஒரு நாளில் தான் அவனை வில்லும் கையுமாக அவள் சந்திக்கும்படி நேர்ந்தது. விளையாடிக் கொண்டே ஓடி ஆடிய வண்ணம் இருந்த அவளும் அவள் தோழியும் சோலையில் ஒருவரை ஒருவர் பிரிந்து வேறு வேறு திசைகளுக்குச் சென்று விட்டனர். அடர்ந்து நெருக்கமாக இருந்த அந்தச் சோலையின் ஒரு கோடியில் அவளும் இன்னொர் கோடியில் அவளுடைய தோழியுமாக இருந்தனர். தோழியைக் காணாமல் தனியே வந்துவிட்ட அவள், அந்தக் கோடிக்குத் திரும்பிச் செல்ல வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் போது பின்புறம் வேலியை ஒட்டி யாரோ சருகு இலைகள் நொறுங்கும் ஓசையோடு விரைவாக ஓடிவருவது அவள் காதுகளில் விழுந்தது. அவள் நடுங்கும் உள்ளத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

"கையிலே வளைத்த வில். திரண்டு பருத்த வலது புயத்தின் பின்புறம் கட்டித் தொங்கவிட்ட அம்பறாத் தூணி. உயர்ந்த எடுப்பான தோற்றம். பரந்த மார்பு. நீண்ட கைகள். கருகருவென்று சுருண்டு தொங்கும் குடுமி. அழகான முகம். அதில் ஆண்மை ஒளிரும் மலர்ந்த விழிகள். வடிந்த நாசி. விரிந்த நகை தவழும் உதடுகள்." இவ்வளவு சிறப்புக்களும் பொருந்திய அந்த இளைஞன் அவள் பக்கத்தில் ஏதோ கேட்கும் ஆவலோடு துடி துடிப்பவன் போல நின்று கொண்டிருந்தான். வில்லும் கையுமாக அவன் நின்று கொண்டிருந்த பரபரப்போடு கூடிய அந்தத் தோற்றம் முருகக் கடவுள் போல அவள் மனதில் சித்திரமாகப் படிந்து விட்டது. அவன் அதே நிலையிலே அவளை வைத்த கண் வாங்காத பார்வையால் பருகிக்கொண்டிருந்தான். அவள் நாணித் தலை குனிந்தாள். அவளுடைய வலது கால் கட்டை விரல் நிலத்தைக் கிளைத்தது. அவனோ, இன்னும் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான். வந்த காரியத்தைக்கூட அவனுக்கு மறந்து போகும்படி செய்து விட்டது அவள் தோற்றம்.

இங்கே இப்படி இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது மற்றோர் கோடிக்குச் சென்றிருந்த தோழி தலைவியைத் தேடிச் சோலை முழுதும் சுற்றி விட்டுப் பின் அலுத்துப்போய் இதே இடத்திற்குக் கடைசியாக வந்து சேர்ந்தாள். வந்தவள் தலைவி தணிந்தசிரத்துடன் நிற்பதையும் எதிரே ஒரு அழகான இளைஞன் வில் ஏந்திய கையனாய் அவளையே பார்த்திருப்பதையும் கண்டாள். தோழி மிகவும் நெருங்கிப் பக்கத்தில் வந்துவிட்ட பின்னரும்கூட அவர்கள் அதை அறிந்துகொண்டதாகவே தெரியவில்லை.

தோழி இலேசாகக் கனைத்து விட்டுத் தலைவியின் பக்கத்தில் வந்து நின்றாள். இளைஞன் இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தான்.

"என்ன வேலையாக ஐயா இங்கு வந்தீர் பெண்கள் தனிமையிற் பழகும் இடத்தில்?..." தோழியின் இந்தத் திடீர்க் கேள்வி அவனைத் திக்கு முக்காடச் செய்து விட்டது. தோழி இப்படித் திடுமென்று அந்த அழகனை நோக்கிக்

கேட்டு விட்டது தலைவிக்குக்கூட அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவன் முகத்தில் தோன்றிய கலவரக் குறி அவள் மனத்திலும் வருத்தத்தை உண்டாக்கியது.

இதற்குள் தோழி இரண்டாவதாக அவன் மேல் மீண்டும் கேள்வி அம்புகளை எய்து விட்டாள்.

“என்ன ஐயா! நான் கேட்கிறேன். பேசாமல் நின்று கொண்டிருக்கிறீர்?”—தோழி கேட்டாள்.

“இல்லை ...... வந்து ...... நான் வேட்டையாடத் துரத்தி வந்த மான்......இந்தச் சோலைக்குள் நுழைந்து விட்டது. அதைத் தேடியே நான் இங்கு வந்தேன்”—தட்டுத் தடுமாறிக் கொண்டே அவன் விடையை ஒருவாறு கூறி முடித்தான்.

அவன் அவ்வாறு தடுமாறியது தலைவியின் மனத்தில் என்னவோ செய்தது. தோழியின் மேல் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் மீண்டும் அவனைச் சும்மா விடவில்லை தோழி.

“மானாவது ஒன்றாவது! அதெல்லாம் இங்கு எதுவும் வரவில்லை... போகலாம்”—என்றாள் தோழி.

இந்தத் தடவை அவன் தடுமாறவில்லை. தலைவியைநோக்கி ஒரு புன்முறுவலை ஓரக்கண் பார்வையோடு உதிர்த்துக் கொண்டே, “இல்லை! இல்லை! அப்படிச் சொல்லி விடாதீர்கள்! நான் தேடி வந்த ‘மான்’ இங்கே தான் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டேன்......போகிறது. உங்களுக்கு வீண் துன்பம் எதற்கு? நாளை வந்து பார்த்துக் கொள்கிறேன்!” என்று தோழிக்கு விடைகூறி விட்டு அங்கிருந்து மெல்லத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே நகர்ந்தான். போகின்ற அவனோடு தன் உள்ளமே போவது போல இருந்தது தலைவிக்கு. தன் உள்ளத்தை எப்படி அவன் கொண்டு போனான் என்பதே அவளுக்குப் புரியவில்லை.

‘நாளைக்கு வருவேன்’ என்று அவன் குறிப்பாகச் சொன்னது அவளுக்கு ஆறுதல் அளித்தது. உள்ளங் கவர்ந்தவன் போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள் தோழி.

காதல் வளர்ந்த கதை

தன் தோளைப் பிடித்து உலுக்கிய தோழிபக்கம் திரும்பியவாறே, “என்ன இருந்தாலும் நீ அவரை அப்படித் திடீரென்று கேட்டிருக்கக் கூடாது” என்றாள் தலைவி. தோழிக்கு இதைக் கேட்டதும் வியப்பாக இருந்தது. ‘அவரா?’ இப்படி அவள் இதழ் வரைக்கும் வார்த்தை வந்து விட்டது. சட்டென்று கூறிவிடாமல் சமாளித்து அடக்கிக் கொண்டாள். தலைவியின் மனம் அவனிடம் ஈடுபட்டிருப்பது குறிப்பாக அவளுக்குப் புரிந்துவிட்டது. “அப்படியா? செய்தி. அதுதான் என்ன என்று பார்த்தேன்?” என்று எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்தாள் தோழி.

மறுநாள் அவன் வருவான் என்று அவள் துடி துடிப்புடனே காத்திருந்தது வீண்போக வில்லை.

“சாமி! இந்தக்கட்டை எதுவரைக்கும் போகுது?”

“இந்தக் கட்டையா? சிதம்பரம் வரைக்கும்.”

அவன் வரவை எண்ணி விரையும் தன் மனத்தில் சில சமயங்களில் 'ஏன் இவ்வளவு துடிப்பு?' என்ற வியப்பான எண்ணம் அவளுக்கே தோன்றும். முன்பின் அறிமுக மில்லாத அந்த ஆடவனிடம் மிகக் குறுகிய நேரப் பழக்கத்திலேயே தன் மனம் கலந்ததை எண்ணும் போதெல்லாம் அவளுடைய இந்த வியப்பு வளரும்.

விதி இரண்டாம் நாளும் அவர்கள் சந்திப்பிற்குத் துணை செய்தது. அவள் அவனை அந்தச் சோலையின் ஒரு பகுதியில் தனிமையிலேயே சந்திக்க நேர்ந்தது. அதே பழையவில்லும் அம்பறாத்தூணியுமாக வேட்டைக்குரிய தோற்றத்துடனே அவன் வந்திருந்தான்.

இப்போதும் அவர்கள் வாய் திறந்து பேசவில்லை. அவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ள வேண்டிய உணர்ச்சிகளை அவர்களுடைய கண்கள் பரிமாறிக் கொண்டன. இருவர் இதழ்களிலும் நெளிந்த புன்னகைகள் சந்தித்தன. உள்ளம் கண்களிலும் நெகிழ்ந்து மலர்ந்த உதடுகளிலும் தெரிந்தது. இரண்டு உள்ளங்கள் இடம் மாறின. அவனுக்கு அவளுடைய உள்ளம் கிடைத்தது. அவளுக்கு அவனுடைய உள்ளம் கிடைத்தது. அவர்களும் ஒருவருக்கொருவர் அதைத் தானே எதிர் பார்த்தார்கள்? உணர்வுகளில் கலப்பு என்பதுதான் வேறு என்னவாக இருக்க முடியும். கண்களையும் வாயிதழ்களையும் விட உள்ளத்தோடு நெருங்கிய தொடர்பு வேறு எவற்றிற்கு இருக்கமுடியும்? இவை தானே உள்ளத்தை வெளிக் காட்டும் கண்ணாடிகள்?

தோழி நேற்றைப் போலவே இன்றும் குறுக்கிட்டிரா விட்டால் அவர்கள் இன்னும் எவ்வளவோ நேரம் அதே நிலையில் நின்று கொண்டிருந்திருப்பார்கள். காதலர்கள் விழிச் சந்திப்பிற்குத்தான் முடிவு என்பதே கிடையாதே. நேற்றுச் சந்திப்பைக் காட்டிலும் இன்றைய சந்திப்பில் உணர்ச்சிக் கலப்பு மிகுதியாக இருந்தது. ஒருவருக்கொருவர் நீக்க முடியாத அன்புப் பிணிப்பைக் கொண்டிருக்கிறோம் என்று அறிந்த நிலை ஏற்பட்ட பின்பு நிகழும் சந்திப்பல்லவா இது?

தலைவியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடையவள் தோழி. அவள் தலைவியின் நன்மை தீமைகளிலே உறவு கொள்ள வேண்டியவள். இன்பதுன்பங்களிலே பங்கு கொள்ள வேண்டியவள். இன்றும் இதே நிலையில் அவர்கள் நின்று கொண்டிருப்பதைச் சற்று நேரம் மறைவிலிருந்து கண்காணித்து விட்டுப் பின் அவர்கள் முன்னே தோன்றினாள்.

அவள் நடுவில் வந்தது அவர்கள் இருவரையுமே ஒருநொடி அளவற்ற நாணங்கொள்ளச் செய்தது. தேனீக்கள் இரண்டொன்று கொட்டியது போன்ற நிலையை ஏற்படுத்தியது தோழியின் வரவு.

முகத்தில் கேள்விக் குறிப்புத் தோன்ற, எதிரே நின்ற தலைவன் மேல் தோழி செலுத்திய அந்த ஆழமான பார்வை அவனைச் சிறிது திடுக்கிடுமாறு செய்தது. முதல் நாளைப் போல அவள் ஏதாவது கேள்விகளைத் தன்மேல் அடுக்க ஆரம்பித்து விடுவாளோ? என்று அஞ்சிய அவன் தானாகவே எதையாவது கூறி விட்டுத் தப்பித்துக்கொண்டு செல்லக் கருதினான். "என்ன? பெண் இவள்" எங்களை ஏன் இப்படி நடுவிலே வந்து நாள் தவறாமல் துன்புறுத்துகிறாள்" என்று கூறுவது போல இருந்தது தலைவி தோழியைப் பார்த்த பார்வை. தலைவன் தவிப்பு அவளை அனுதாபத்திற்கு ஆளாக்கியது.

"நான் வேட்டையாடி வந்த யானை ஒன்று இந்தப் பக்கமாக வந்து புகுந்து விட்டது. அதைத் துரத்திக் கொண்டே பின்பற்றி ஓடிவந்தேன். வேறு ஒன்றும் இல்லை" தன்மேல் கடுமையான பார்வையைச் செலுத்துகின்ற தோழியை நோக்கி இன்று அவன் துணிந்து சொன்ன விடை இது. நேற்று என்னவோ அவன் உண்மையாகவே மானைத் துரத்திக்

கொண்டுதான் அந்தப் புனத்தின் அருகேயுள்ள பூஞ்சோலைக்கு வந்தான். ஆனால் வில்லோடு அவன் எந்த மானைத் தேடி வந்தானோ அந்த மான் அவனை வழிதவற வைத்ததுமின்றி அவன் கண்களிலிருந்து தப்பி விட்டது. வந்த இடத்தில் அந்தப் பூஞ்சோலையில் அவன் எதிர்பார்த்திராத வேறொரு 'மானை' அவன் சந்திக்க நேர்ந்துவிட்டது. இந்த 'மான்' அவனைக் கண்டு ஓடவில்லை. அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முயலவில்லை. அவன் அவளை (அந்தப் பெண் மானை) நோக்கியது போலவே அவளும் அவனை விருப்புடனே பார்த்தாள்.

இன்று இதோ, அந்தப் பெண் மானுக்காக ஒரு முழுப் பொய்யைக்கூட அவன் தோழியிடம்கூறி விட்டான். "யானையைத் துரத்திக் கொண்டே தவறி வந்து விட்டேன்" என்று அவன் கூறிய பெரிய பொய்யை நம்பிவிடுவதற்கு அந்தத் தோழி அவ்வளவு அறிவு குன்றியவளல்ல. அவன் யானையைத் தேடி வில்லும் கையுமாக அங்கே வரவில்லை. "அவனே அவளைக் காணும் ஆசைமதம் பிடித்த யானையாக வந்திருக்கிறான்" என்று உண்மையை அறிய அவளுக்கு வெகு நேரம் ஆகவில்லை. "நேற்று மானைத் தேடி வந்ததாகச் சொன்னான். இன்று யானையைத் துரத்தி வந்ததாகச் சொல்லுகிறான். இனி நாளைக்கும் இப்படியே ஏதாவது கூறிக் கொண்டு இங்கே இவன் வரத் தான் போகிறான். ஆனால் 'இவளைப்' பார்த்தால் அவனுடைய வரவை இவள் ஆசையோடு எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது. இவர்கள் இரண்டுபேரும் பார்த்துக் கொள்ளும் பார்வைகளிலும் சந்திப்பிலும் சாதாரணத் தன்மைக்கும் அப்பாற்பட்ட அன்பின் தொடர்பு ஒளிரக் காண்கிறேன். கதை இப்போதல்லவா புரிகிறது? இவர்களுக்குள் ஒன்றுபட்டுப் பிறந்த உணர்வு காதல் உணர்வேதான்." இவ்வாறு எண்ணிக் கொண்டே திரும்பினாள் தோழி. அவன் நின்றுகொண்டிருந்த இடம் வெறுமையாக இருந்தது. அவள் தொலைவில் மறையும் அவன் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் விழிகளின் ஓரத்தில் கண்ணீர் உருள்வதையும் திரும்பிய தோழி கண்டாள்.

"வண்டே நீ வாழ்க!"

அன்று காலை மலைச் சாரலில் சூழ்நிலை மிகவும் அழகாக இருந்தது. வெயிலும் சாரலுமாக இருந்த அந்த நிலை தலைவிக்கு மிகவும் பிடித்திருந்தது. சாரலில் நனைந்து கொண்டே அவள் தினைப்புனத்துப் பரணில் நின்றாள். இப்போதெல்லாம் கிளிகளுக்கு அவள் இருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி ஒரே கொண்டாட்டம்தான். கிளிகள் கூட்டம் கூட்டமாகத் தினைக் கதிர்களை மெய்வதற்கு வரும்போது அவள் கையில் கொட்டுடனே பரண் மீது நின்றுகொண்டிருந்தாலும் அவனைப் பற்றிய நினைவுகளிலே இலயித்துப் போயிருப்பாள். "கொட்டைக் கொட்டிக் கிளிகளை ஓட்டவேண்டும், தினைக் கதிர்கள் அழிந்துபோகுமே!" என்ற நினைவே அவளுக்கு மறந்துவிடும். இப்படி அவள் தன்னை

"ஹி! ஹி! ஹி! நேத்துக் கச்சேரியிலே நீங்க எழுதியனுப்பிய கல்யாணி, தோடி ரெண்டையும் பாடமுடியல்லே......"
"அதிருக்கட்டும்; நீர் பாடினது கல்யாணியா? தோடியா?"

மறந்து இருக்கும் நிலையைத் தோழியே பல முறை கண்டு வியந்திருக்கிருள். அவளுக்கு அவன் மேலே ஏற்பட்டிருக்கும் காதல் எவ்வளவு உயர்ந்தது என்று இதனுல் தோழி அறிந்து கொள்ள முடிந்தது. அதோடு தினைக் கதிர்களைக் கிளிகள் மிகுதியாக மேய்ந்திருப்பதைப் பெற்றோர்கள் காண்பதற்கு நேர்ந்தால் தலைவியின்மேல் சந்தேகங்கொள்வார்களே என்ற பயமும் தோழிக்கு இருந்தது.

மென்மையான சாரலும் குளிர்ந்த சூழ்நிலையும் இடை இடையே இளவெயிலும்பொருந்தி விளங்கிய அன்று அருவியில் மிகுந்த தண்ணீர் வீழ்ந்து கொண்டிருந்தது. தோழியைத் தினைப் புனத்தில் இருக்குமாறு செய்து விட்டு அவள் அருவிக்கு நீராடச் சென்ருள். விரைவிலே சென்று நீராடிவிட்டு வருமாறு தோழி அவளுக்குக் கூறியனுப்பினுள். தலைவி அருவிக்கு நீராடச் சென்ருல் இலேசில் திரும்பி வரமாட்டாள் என்பது தோழிக்குத் தான் நன்கு தெரியுமே? அதுவும் இரண்டொரு நாட்களாக அவள் அடிக்கடி தனிமையை நாடுவதையும், தனிமையில் தனக்குள்ளே சிரித்துக் கொள்வதையும், சில சமயங்களில் ஏதோ சிந்தனை கொண்டவள்போலச் சிலையாக அமர்ந்து விடுவதையும், தோழி அறிந்து தான் இருந்தாள். இதற்கெல்லாம் காரணமான இனிய நினைவுகள் அவனைப் பற்றியவையே என்பதும் தோழிக்குத் தெரியும். இப்போது அருவியில் குளிக்கச் சென்றுள்ளபோதும் அந்த இன்ப நினைவுகளில் அவள் ஆழ்ந்து விடுவாளோ என்றெண்ணினுள் தோழி. தோழி அவ்வாறிருக்க, இப்பால் அருவிக்கு நீராடவந்த தலைவியின் கண்களில் தெரிந்த காட்சிகள் யாவும் புதுமை அழகுடன் பொலிந்து தோன்றுவன போல் இருந்தன. முல்லை மலரின் தேனூறும் வண்டுகளைக் கண்டாள். மலைச்சிகரத்தைத் தழுவி முத்தமிட்டுச் செல்லும் மேகக் கற்றைகளைக் கண்டாள். தொலைவில் பள்ளத் தாக்குகளில் பிடியுடன் திரியும் களிறுகளையும், இணை இணையாகத் தாவி நரந்தம் புற்களை மேய்ந்துகொண்டிருக்கும் மான்களையும் கண்டாள். அன்று தான் காண்பவற்றில் எல்லாம் அதுவரை கண்டிராத புதுமை தோன்றுவதற்குக் காரணமாகத் தன் மனத்தில் எழுந்த அந்தப் புதிய உணர்வை எப்படி எந்தச் சொல்லின் பொருள் வரம்புக்குள் அடக்கலாம் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

முதல்நாள் மலைக் குவடுகளில் திரண்டிருந்த அவ்வளவு மேகங்களும் இரவு மழையாகப் பொழிந்திருந்ததனுல் அருவியிலே அளவின்றி நீர்பெருகி வீழ்ந்து கொண்டிருந்தது. அவள் உள்ளத்தில் இனம் புரியாமல் மோதி முட்டிக் கொண்டிருந்த மகிழ்ச்சி அலைகளைப் போலவே அருவி நீரும் முட்டிமோதி ஒலியால் எதிரொலியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. குளிர்ச்சியளாவிய மலைக்காற்று பூக்களின் மணத்தைப் பரப்பி ஓசையோடு வீசிக் கொண்டிருந்தது. வேங்கை மரப் பூங்கிளைகளுக்கு இடையே மயில்கள் நீலத்தோகை விரித்து நடம் பயின்று கொண்டிருந்தன. மாமரத்தின் செவ்வண்ண இளந் தளிர்களுக்கு இடையே கருங் குயில்கள் அமர்ந்து இன்னிசை பாடி இயற்கையன்னையை வாழ்த்திக் கொண்டிருந்தன.

தலைவி அருவியில் நீராடினுள். நேரம் கழிவதை அறியாமல் உடல் மட்டுமின்றி உள்ளம் நிறையும் வரை நீராடினுள். பூவின் குளிர்ச்சியும் மணமும் அருவிநீரில் கலந்திருந்தன. தலைமேல் பிச்சிப் பூக்களைச் சொரிவதுபோல இருந்தது அருவி அவள்மேல் விழ்வது. அதில் எவ்வளவு நேரம் நீராடினுலும் அவளுக்குச் சோர்வோ, அலுப்போ உண்டாவதில்லை.

நீராடி உடையணிந்து கொண்ட பின் தலைவி புனத்தின் அருகிலுள்ள பூஞ்சோலைக்கு வந்தாள். அங்கே வந்ததும் அவளை அறியாமலே அவள் மனத்தில் ஒரு சிறிய

அவா ஏற்பட்டது. தொடக்கத்தில் ஒரு சிறிய அவாவாக இருந்த அது நொடிக்கு நொடி வளர்ந்து இறுதியில் தவிர்க்க முடியாத விருப்பமாகி விட்டது. அவனைச் சந்தித்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பமே அது. அவனோடு இரண்டுமுறை கண்களால் பேசி உறவாடிய வாய்ப்பு எந்த இடத்தில் ஏற்பட்டதோ அந்த இடத்தைக் காண்பதனால் மீண்டும் அந்த நினைவுகளை உண்டாக்கிக் கொள்ளலாம் என்பது அவள் எண்ணம். மனத்திற்கு இசைந்த இனிய நண்பரைச் சந்தித்த இடமும் பின்னால் அந்த இனிமையை நினைவூட்டி ஆறுதலளிக்கும் தகுதி வாய்ந்ததாக இருக்கிறது.

அவளுடைய இந்த விருப்பத்தில் நம்பிக்கையும் சிறிது கலந்திருந்தது. 'ஒருவேளை தன்னைப்போலவே எண்ணிக்கொண்டு அவனும் அந்த இடத்திற்கு வந்திருக்கக்கூடாதா?' என்ற நம்பிக்கை மனத்தின் ஒரு கோடியில் மின்னிக்கொண்டிருந்தது. அவளுடைய கால்கள் எண்ணத்தையும் கடந்துகொண்டு அங்கே விரைவாக இயங்கத் தொடங்கிவிட்டன. நாணி ஒதுங்கும் பெண் அன்னம்போல அவ்விடத்திற்கு நடந்து சென்றாள் அவள். உள்ளம் வேகமாக அடித்துக்கொள்ள, கண்கள் குறுகுறுப்போடு தேடி ஓட அவள் அந்த இடத்தை நெருங்கினாள். அதை நெருங்க நெருங்க அவளுடைய உடல் முழுவதும் நாணமும் இன்பமும் இயைந்த புத்துணர்ச்சியொன்று கிளைத்துக் கிளர்ந்து பரவியது.

நாடிச்சென்ற அவள் கண்கள் எதிரே கண்ட காட்சியை நம்ப முடியவில்லை. ஆனால் எதிர்ப்புறம் நின்றவாறே அவளைப்போலக் கண்களை நாடவிட்டிருக்கும் அவன் நின்று கொண்டிருந்தது என்னவோ உண்மைதான். உள்ளம் ஒத்த காதலர்களுக்கு அங்கே எழுகின்ற உணர்வுகளும் விருப்பங்களும்கூட ஒத்திருக்கும் போலும்! இல்லை என்றால் அவள் என்ன எண்ணத்தோடு எதை நாடி அங்கு வந்தாளோ அதே எண்ணமும் நாட்டமும் கொண்டு அவனும் அங்கே வந்து காத்திருப்பானா? காதல் என்பது உடலோடு உடலுக்கு ஏற்படுகின்ற கவர்ச்சி இல்லை. அது உள்ளத்தோடு உள்ளத்திற்கு ஏற்படுகின்ற உணர்வு ஒற்றுமையே. அத்தகைய உணர்வு ஒற்றுமை அவர்கள் இருவருடைய மனத்திலும் முழுமையாகப் பொருந்தி இருந்தது. மலர்ந்த முகமும் முகிழ்த்த புன்னகையும் ஆசைதவழும் பார்வையும் திகழ அவன் அங்கே நின்றுகொண்டிருந்தான். அவளும் வந்து நின்றாள். தென்றல் காற்றில் அசைந்து துவண்ட முல்லைக் கொடி போல நின்றாள். பழைய நாணம் அவளைப் பற்றிக் கொண்டது. வழக்கம்போலக் காற்கட்டைவிரல் நிலத்தைக் கிளைத்தது. உதடுகள் நகைக் குறிப்புத் தோற்றத் துடித்தன. கண்களில் வெட்கம் நிழலிட்டது. நீராடி முடியாத கூந்தல் கருமேகக்கூட்டம் போல அவிழ்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. பின்புறம் படர்ந்து தொங்கும் கூந்தலுக்கு மேலே தோன்றிய அவளது முகம் கார் முகிலுக்கு நடுவே தோன்றும் முழுமதியைப்போல விளங்கிற்று.

அவர்கள் இங்ஙனம் நின்று கொண்டிருந்த இடத்திற்கு மிக

பிள்ளையின் தகப்பனார்: என்னய்யா இது? பெண்ணைப் பார்க்கவே வேண்டாம்; கண்ணை மூடிக் கொண்டு தாலி கட்டி விடலாம் என்றீரே; பெண் அப்படியொன்றும் சுகமாயில்லையே?''

தரகர்: அதனால்தானே அப்படிச் சொன்னேன்!

அருகில் இருந்த வேங்கைமரம் ஒன்று நிறையப் பூத்திருந்தது. காலைநேரம் ஆகையால் பல வண்டு கள் சுற்றிச் சுழன்று அதில் தேனுண்டு கொண்டிருந்தன. 'திடுமென்று' பறந்து வந்த மிகப் பெரிய கருவண்டு ஒன்று அவளைச் சுற்றிச் சுழல ஆரம்பித்தது. அதன் சுழற்சியினால் ஏற்பட்ட ஒலியும் கரிய பெரிய அதன் தோற்றமும் அவளுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்தன. அவள் அப்புறம் இப் புறம் ஒதுங்கிப்பார்த்தும் வண்டு அவளை விடுவதாக இல்லை. அது எங்கே தன்னைக் கொட்டிவிடுமோ என்று நடுங்கினாள் அவள். அவனை மிகவும் ஒட்டினாற்போல நெருங்கி முன்னிலும் விரைவாகச் சுழலத் தொடங்கிவிட்டது வண்டு. பயத் தில் மயக்கம் வந்து தான் கீழே விழுந்தாலும் விழுந்து விடலாம் என்ற நிலைக்கு வந்தாள் அவள்.

அவன் அவளுடைய இந்த அச்ச நிலையைக் கண்டு அருகில் வந்தான். கையிலிருந்த வில்லின் தண்டை ஓங்கிச் சுழற்றி வண்டை விலக்கி ஓட்டினான். வண்டு பறந்து சென்றுவிட்டது. ஆனால் அவளோ அதிகச் சோர்வால் கீழே தள்ளாடி விழுந்து விடுபவளைப்போல இருந் தாள். வில்லைக் கீழே போட்டு விட்டு அவன் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். இருவர் உடலிலும் புதிய உணர்ச்சி பரவிக் குளிர்ந்தது. அவள் சிரித்துக் கொண்டே விடுவித்துக் கொள்ள முயல்கின்றவள் போல நடித்தாள். ஆனால் விடுவித்துக் கொள்ளும் துணிவு மட்டும் அவளுக்கு வர வில்லை. அப்படியே அவன் பிடியில் இருக்கவேண்டும் போல இருந் தது. மல்லிகைப் பூவால் கட்டிய பெரிய செண்டு ஒன்றைத் தாங்கு வது போன்ற உணர்ச்சி அவ னுக்கு உண்டாயிற்று.

தொலைவில் விரைவாகத் தலைவி யைத் தேடிவருகின்ற தோழியின் உருவம் அவர்கள் தழுவலைப் பிரித் தது. ''வண்டே நீ வாழ்க!'' என்று வாழ்த்திக் கொண்டு சென்றான் அவன்.

(தொடரும்)

உங்கள் பெண் அணிந்து ஆனந்தம் கொள்ளுகிறாள்!
உங்கள் மனைவி ஆண்டு அனுபவித்துப் பெருமிதம் கொள்ளுகிறாள்!
உங்கள் பந்து மித்திரர்கள் பார்த்துக் களித்துப் பாராட்டுகிறார்கள்!

எங்கள் நவீன மோஸ்தர் தங்க நகைகளை; தினுசு தினுசான வெள்ளிச் சாமான்களை.

தங்கம், வெள்ளி, நகைகள், பாத்திரங்கள் தயாரிப்பில் தலைசிறந்து விளங்கும்

கந்தவடி
ஸ்ரீராமுலு செட்டி அண்ட் ஸன்ஸ்

207–209, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட்,
சென்னை—1

போன்: 3524 | தந்தி: GANDAVADI

வெள்ளை நிறத்திலே ஒரு தமிழர்

"கோவா துறைமுகம் போர்த்துகீயர்களுக்குச் சொந்தமான கிழக்கிந்திய காலனிகளின் தலை நகர், ஐரோப்பிய வியாபாரிகளின் கேந்திரம். கீழை நாடுகளின் வியாபாரங்கள் யாவும் இங்கிருந்தே நடைபெறுவதால், நாள்தோறும் அநேக கப்பல்கள் வருவதும் போவதும் சகஜம். எனவே கோவா துறைமுகம் வெள்ளையர் மயமாகவே காட்சியளிக்கும்.

பல நூற்றாண்டு காலமாக நாள் தவறாமல், மேனாடுகளிலிருந்து தனது துறைமுகம் வரும் கப்பல்களையும், அக் கப்பல்களிலிருந்து இறங்கும் வெள்ளையர்களையும், அவர்கள் மனதிலே குடிகொண்டுள்ள எண்ணங்களையும் தமிழன்னை அறியவே செய்வாள். தனது செல்வத்தைக் கொள்ளை கொள்ளையாக அள்ளிப்போகும் நோக்குடன் எத்தனையோ பேர், தனது மக்களுக்குள்ளே பலவேற்றுமைகளை வளர்த்து அதன் மூலம் தன்னை அடிமைப்படுத்தும் எண்ணத்துடன் எத்தனையோ பேர், தனது கலைச் சின்னங்களைக் களங்கப்படுத்தும் உள்ளத்துடன் எத்தனையோ பேர், தனது இதிகாச ஏட்டுச்சுவடிகளைத் திருட்டுத்தனமாகக்கொண்டு போகும்எண்ணத்துடன் எத்தனையோ பேர், தன்னையும் தன் மக்களையும் கசக்கிப் பிழிந்து உறிஞ்சிக் குடித்த இரத்தம் காணாதென்று, இருக்கும் தன் மக்களை, கங்காணிகள் மூலம் கூலிகளாகப் பிடித்து, கப்பலேற்றி, வேறு நாடுகள் கொண்டு சென்று காட்டைக் கழனியாக்கவும், மேட்டைத் தானிய நிலமாக்கவும், அடித்து வெருட்டி கூலிகொடாது பட்டினி போட்டு வேலை வாங்கி, கிடைக்கும் ஆதாயத்தைத் தன் நாடு கொண்டுசெல்லும் நோக்குடன் எத்தனையோபேர், மதத்தின் "எண்ணிக்கையை மட்டும்" பெருக்கும் ஒரேநோக்குடன் எத்தனையோ பேர், இவ்விதமாக பற்பல நோக்கங்களுடன், வெள்ளையர் கூட்டம் நாள் தவறாது தமிழ்நாடு வருவதின் முக்கிய கொள்கையாக இருந்ததால், இவர்களைப் பற்றித் தமிழன்னை எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

ஆனால் அநேக வருடங்களாக, கப்பல் கப்பலாக வந்து இறங்கிக் கொண்டிருக்கும் அநேக லட்சம் வெள்ளையர்களிலே ஒரு வெள்ளை உருவத்தைமட்டும் தமிழன்னை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஏனென்றால், அவள் எதிர்பார்க்கும் வெள்ளை நிறத்திலே ஒரு தமிழன் இருப்பதே அவள் அக்கறைக்குக் காரணம்! ஆகவே மேனாடுகளிலிருந்து வரும் ஒவ்வொரு கப்பலையும், அதிலிருந்து இறங்கும் ஒவ்வொரு வெள்ளையனையும் தமிழன்னை ஆவலுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்."

இப்படிக் கதை சொல்லிக் கொண்டுபோகிறார் ஆசிரியர் ஸ்ரீ என். எம். நாகரத்தினம் தமது 'தமிழ் உலகில் புகழ்பெற்ற வீரமாமுனிவர்' என்னும் நூலில்.

கோவா விடுதலைப் போராட்டம் இன்று நடைபெற்று வருகிறது. இந்தியாவிலிருந்து சத்தியாக்கிரகிகள் சென்று போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு செய்து வரும் அரும் பெரும் தியாகங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் படிக்கிறோம்; நெஞ்சு கொதிக்கிறோம்!

இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கப்பல் கப்பலாக வந்து கோவாத் துறைமுகத்தில் இறங்கிய வெள்ளையர் கூட்டத்திலே ஒரு தமிழரும் இருந்தார் என்று சொல்வதற்காகவே ஆசிரியர் இத்தனை உணர்ச்சியோடு வீரமாமுனிவரின் வருகையை வர்ணித்திருக்கிறார்.

வீரமாமுனிவர் என்னும் இத்தா-லியர் பெஸ்கி தமிழ்நாட்டிலே குடியேறித் தமிழ் கற்றுத் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகளை தெள்ளத் தெளிய தமிழ் நடையில் எழுதியிருக்கிறார் நூலாசிரியர். வெள்ளையரிலே நல்லவர்களும் இருந்தார்கள், இன்னமும் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த பெஸ்கியும், டாக்டர் பெஸண்டும் போன்ற பலரை எடுத்துக் காட்டலாம்.

"அறிஞர் சுந்தரம் பிள்ளை அவர்களின் அபிப்பிராயத்தின்படி, மதக் கண் கொண்டு நோக்காது, பொதுக் கண்கொண்டு நோக்குபவர்கள் மட்டும்தான், வீரமாமுனிவரது இலக்கியப் பூஞ்சோலையின், மது மலர் நிறைமணத்தை நுகரலாம்.

சொல்லாலும், எழுத்தாலும், செயலாலும் வீரமா முனிவர் தமிழன்னைக்கு அளவிடுவதற்கரிய பல சேவைகள் புரிந்துள்ளார். இன்னவரின் அரும்பெரும் தொண்டுகளால், தமிழன்னை புதிய வனப்பைப் பெற்றாள். வாழ்நாளெல்லாம் முனிவர், தமிழன்னைக்குப் பல புதுப்புது ஆபரணங்கள் புனைந்து, அவள் அழகை அள்ளிப் பருகுவதிலே கழித்தார். சுமார் 40 ஆண்டுகள் வரை இடைவிடாது தமிழின் மறுமலர்ச்சி காண விழைந்துகொண்டிருந்த முனிவர் எத்தனை நூல்கள் இயற்றியிருப்பாரோ யாரறிவார்?

தமிழ் மொழியில் வீரமாமுனிவர் எத்தனை பாண்டித்யம் பெற்றுள்ளாரோ இதே போன்று, சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம் கன்னடம் ஆகிய மொழிகளிலும் பாண்டித்யம் பெற்று விளங்கினார். ஆனால் அவரது உள்ளங் கவர்ந்த தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு போல் வேறு எம்மொழிக்கும் தொண்டாற்றவில்லை."

ஸ்ரீ ஆர். பி. சேதுப்பிள்ளை குறிப்பிடுவதாவது;—

"வீரமாமுனிவர் தமிழ் மொழியின் இலக்கணங்களையும், தொல்காப்பியம் முதலாக நன்னூல்களையும் விரிவாக ஆராய்ந்தவர். கற்றவரேயன்றி மற்றவரும் தமிழ்ப் பதங்களை எளிதாக உணர்வதற்கு மேல் நாட்டு அகராதி முறையே சிறந்ததென்று வீரமாமுனிவர் கருதி, "சதுரகராதி" என்னும் அரியதோர் நூலை வெளியிட்டார். சதுரகராதி அளவிற் சிறிது; ஆனால் அருமை வாய்ந்தது அதுவே பிற்காலத்தில் எழுந்த பேரகராதிகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது. எனவே கவிஞராகிய வீரமாமுனிவர் தமிழ் அகராதியின் தந்தையாகவும் விளங்குகின்றார்.

"பொதுமறையென தமிழ் நாட்டார் போற்றும் திருக்குறளின் செம்மையை உலகறியக்காட்டிய பெருமை இன்னவருக்கே உரித்தாகும். திருக்குறளின் ஆசிரியராகிய திருவள்ளுவரை மெஞ்ஞான ஒளியாகக் கண்டார் வீரமா முனிவர். "ஞானத் திருவிளக்கு எறிப்பத்தெளிந்து உணர்ந்து, எங்கும் ஒரு விளக்கென நின்று உயர்ந்த திருவள்ளுவர்" என்பது வீரமா முனிவர் வாய்மொழி."

மேலே காணப்படும் பகுதிகள் இந்த நூலில் உள்ளவை.

இந்தச் சிறுநூல் ரங்கூனில் பதிப்பிக்கப்பட்டது, விலை 75 பியா என்று போட்டிருக்கிறது, நமது நாணய மாற்ற விலை காணப்படவில்லை. முதற் பதிப்பில் காணப்படும் பிழைகளையும், பிழை திருத்தத்தையும், விளம்பரங்களையும் நீக்கிவிட்டுக் கட்டுக்கோப்பில் மேலும் சிறிது கவனம் செலுத்தினால் அடுத்த பதிப்பில் நூலின் மதிப்பு உயரும்.

[தமிழ் உலகில் புகழ்பெற்ற வீரமா முனிவர்; ஆசிரியர்; என். எம். நாகரத்தினம். விலை 75 பியா, கிடைக்குமிடம்; ராஜன் அன் சன்ஸ், 124, முகல் வீதி, இரங்கூன்.]

Printed at the Kalavalli Press, 12, Francis Joseph Street and published at 12-13, Angappa Naick Street, Madras-1, by E. H. Ramaswamy. Editor: P. M. Kannan.